Australia....1.50$ Canada........1.00$ France...........8.00F Germany....2.50DM India............8.00Rs Malaysia........1.50$ Norway.......12.00Kr Srilanka.....20.00Rs Switzerland......2.50$ United Kingdom.90p


# நாழிகை


OCTOBER 1995

The International Tamil Newsmagazine

லண்டன்:

## 'கண்டறியாதன கண்டேன்'





தமிழ்நாடு:

## தொடரும் சினிமா அரசியல்

இலங்கை: சண்டை; சமரசம்

## இருதோணிகளில் கால்வைத்துள்ள ஜனாதிபதி


# VS.CO
## Cash & Carry

197, RUE DU FB.ST.DENIS
75010 PARIS
Mo: LA CHAPELLE / GARE DU NORD

TEL: 40 34 71 65
FAX: 40 34 71 66

## உள்ளடக்கம்





■ 40 சிறப்புக் கட்டுரை:
ஆபிரிக்க கலாச்சார விழா

■ 34 [illegible]:
'கண்டறியாதன கண்டேன்'


| | |
|---|---|
| எண்ணம்.................................... | 7 |
| இந்தியா– காஷ்மீர்: 3 லட்சம் இந்துக்கள் வெளியேற்றம்.................... | 22 |
| உலக விவகாரம்: நிலக்கண்ணி தடைக்கு சர்வதேச நடவடிக்கை........ | 25 |
| நடப்பு விவகாரம்–பொஸ்னியா: சமாதானம் மலர்கிறதா?.................. | 27 |
| மத்திய கிழக்கு: ஒஸ்லோ உடன்படிக்கையில் இஸ்ரேலின் ஆதிக்கம்..... | 29 |
| தமிழ்நாடும் தலைநகரும்: 'வசீகர நாயகம்'.................................. | 31 |
| பழைய நினைவுகள்: சோ. சிவபாதசுந்தரம்...................................... | 37 |
| கலை: நேர்த்தியாக மிளிர்ந்த ராகங்கள்....................................... | 39 |
| சிறுகதை: க. ஆதவன்....................................................... | 40 |
| சொற்சதுரங்கம்.............................................................. | 44 |
| ஜன்னல்................................................................... | 49 |




■ **இலங்கை:**

**10. யாழ்ப்பாணத்தில் வரையறுக்கப்பட்ட ராணுவ தாக்குதலின் நோக்கம் என்ன?**
**12. அதிகார பரவலாக்கல் திட்டமும் அரசியல் கட்சிகளும்**
**15. அதிகரிக்கும் பாதுகாப்பு கெடுபிடிகள்**
**17. அதிகார பரவலாக்கல் பற்றிய அரசியல் சீர்திருத்த முன்மொழிவுகள்**
**21 சமாதானத்துக்கு தடைகள் என்ன? – ஒரு விவாதம்**



பாரிசில்
அனைத்து இலங்கை, இந்திய பொருள்களுக்கு
காயத்திரி
Horlicks
Horlicks
புதிய ஹார்லிக்ஸ்
புத்துணர்வும், ஆரோக்கியமும் தருகிறது
GAYATHIRI
210 RUE DU FG. SAINT DENIS,
75010 PARIS
TEL: 42 09 22 43
Metro: La Chapelle Ou Gare Du Nord
லீலா உற்பத்திப் பொருள்களுக்கான
மொத்த இறக்குமதியாளர்கள்,
விற்பனையாளர்கள்

# KUMARANS

KUMARANS

## குமரன்ஸ் தமிழ்க்கடை

அரிசிமா, குத்தரிசி,
மிளகாய்த்தூள் மற்றும் பல
லீலா தயாரிப்புகளை
எம்மிடம் மொத்தமாகவும்
சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.

**எம்மிடம் தமிழ் புத்தகங்களும் விற்பனைக்குண்டு**

அரசியல், பொருளாதார
புத்தகங்களோடு
பெருமளவிலான
பிரபல எழுத்தாளர்களின் கதைப்
புத்தகங்களும் கிடைக்கும்.

லீலா
தயாரிப்புகளின்
அங்கீகாரம் பெற்ற
விநியோகஸ்தர்கள்

**142-144 HOE STREET**
**WALTHAMSTOW**
**LONDON E17**
**TEL: 0181-521 4955**
**0181-521 4411**
**FAX: 0181-521 9482**

**Nazhikai**
The International Tamil Newsmagazine
ISSN 1357-6933
VOL.III, No.1, October 1995

**EDITOR:**
S. Mahalingasivam

**CONTRIBUTING EDITORS:**
S. Swaminathan, Wimal Sockanathan, Pon.Balasundaram, M. Pushparajan, Yamuna Rajendran

**LAYOUT ARTIST:**
K. Krishnarajah

**TECHNICAL ASST:**
S. Perinpanathan

**EDITORIAL OFFICE:**
Newsmedia International Limited
Park Royal House
23 Park Royal Road
London NW10 7JH
UK
Tel: 0181-838 1425
Fax: 0181-961 5962

**COLOMBO BUREAU:**
S. Thillainathan
Tel: 330719 / 821663

**PUBLISHERS:**
Newsmedia International Limited
Park Royal House
23 Park Royal Road
London
NW10 7JH
UK

**PRINTERS:**
Set Line Data Ltd
London SE1

Cover printed at ABILITY PRINTING, Rayners Lane, Harrow, Middlesex

**Subscription for 12 issues**

UK:.................................................£14.00
Europe/India/Sri Lanka:.................£15.00
All other countries:.........................£20.00
Payable to NEWSMEDIA INTERNATIONAL LIMITED

**Please complete the form and return to**
Newsmedia International Limited
Park Royal House
23 Park Royal Road
London
NW10 7JH
UK

Name:..........................................................

Address:......................................................

...................................................................

...................................................................

...................................................................

Tel:..............................................................

**Sending herewith cheque/draft/money order for the ammout of ...............**




## இலங்கையில் தடை

வாசக நேயர்களுக்கு,

கடந்த இதழ் பற்றிய கருத்துக்களைப் பலர் நேரிலும், தொலைபேசியிலும், நண்பர்களூடாகவும் தெரிவித்திருந்தாலும், அஞ்சலில் எமக்கு எதுவும் கிடைக்கவில்லை. எனவே, இங்கு பிரசுரிக்க எதுவும் இல்லை.

மேலும், 'நாழிகை' ஜூலை இதழ் இலங்கை அரசாங்கத்தால் இலங்கையில் தடைசெய்யப்பட்டுள்ளது.

'நாழிகை'யின் இலங்கை விநியோகஸ்தர்களான பி. எஸ். சுந்தரம் அன் சன்ஸ் நிறுவனத்தினருக்கு 'எயர் லங்கா' விமானமூலம் அனுப்பிவைக்கப்பட்ட 800 பிரதிகள் கட்டுநாயக்கா விமானநிலையத்தில் தகவல், ஒலிபரப்பு அமைச்சின் அங்கீகாரத்துக்காகவென ஒரு மாத காலம் வரை சுங்கப்பகுதியினரால் தடுத்து வைக்கப்பட்டிருந்தபோது, இவ்விடயம் பாராளுமன்றத்தில் எழுப்பப்பட்டது.

திரு தர்மலிங்கம் சித்தார்த்தன் எம். பி. யின் கேள்விக்கு தகவல், ஒலிபரப்பு உல்லாசத்துறை அமைச்சர் திரு தர்மசிறி சேனநாயக்க பதிலளிக்கையில், அவசரகால சட்ட விதிகளின் கீழேயே 'நாழிகை' தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகவும், பரிசீலனையின் பின்னர் அநுமதிக்கப்படும் என்றும் தெரிவித்திருந்தார்.

ஆனால் பின்னர், 'நாழிகை' தடை செய்யப்பட்டிருப்பதாக விநியோகஸ்தர்களுக்கு தொலைபேசி மூலம் தெரிவிக்கப்பட்டது. அப்போது, அது தொடர்பான எழுத்து மூலமான அறிவிப்பை அவர்கள் கேட்டிருந்தனர். இப்போது மூன்று வாரங்களுக்கு மேலாகியும் அந்த எழுத்துமூல அறிவிப்பு சுந்தரம் அன் சன்ஸுக்கு கிடைக்கவில்லை.

ஆக, தடை செய்யப்பட்டதற்கான காரணத்தை இன்னமும் நாம் அறியவில்லை. இப்போது, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் கவனத்துக்கு இது கொண்டுவரப்படுகிறது.

ஆ-ர்

# சந்திரிகாவின் தீர்வுத் திட்டம்

இலங்கையில் இனப்பிரச்னைக்குத் தீர்வாக அதிகார பரவலாக்கல் திட்டமொன்றை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முன்வைத்திருக்கிறார்.

இலங்கைத் தமிழர்களுடைய அரசியல் போராட்டத்தில் தீர்வு யோசனைகளும், ஒப்பந்தங்களும், பேச்சுவார்த்தைகளும் புதிதானவை அல்ல. உண்மையிலே இத்தகைய முயற்சிகளில் ஏற்பட்ட ஏமாற்றத்தின் விளைவையே நாடு இன்று அநுபவித்துக் கொண்டிருக்கிறது. எனினும், இந்த அதிகார பரவலாக்கல் திட்டம் அதன் உள்ளடக்கத்தைப் பொறுத்தவரையில் முன்னைய நிலைமைகளைவிட மிகவும் மேலானதே.

சுதந்திரத்துக்கு முன்னர் சோல்பரி ஆணைக்குழுவே தம்மை வஞ்சித்துவிட்டதாக உணர்ந்த தமிழர்கள், சுதந்திரத்துக்குப் பின்னர் அவர்களின் அரசியல் உரிமைகள் மேலும் நசுக்கப்பட்டு, அவர்களின் பாரம்பரிய பிரதேசங்கள் திட்டமிட்டு பறிக்கப்படுவதையும் கண்டார்கள். இதன் விளைவுகளாக எழுந்த சாத்வீக எதிர்ப்பு நடவடிக்கைகளில், தென்னிலங்கையில் செல்வாக்கைப் பெற்றிருந்த இரு பிரதமர்களுடன் 'பண்டாரநாயக்க - செல்வநாயகம் ஒப்பந்தம்', 'டட்லி - செல்வநாயகம் ஒப்பந்தம்' கைச்சாத்தாகின. இவர்கள் இருவரும் தன்னைக் கேளாமலேயே அவற்றைக் கிழித்தெறிந்தார்கள் என்றும், இனியும் வேறு வழி தென்படாமையால் பிரிந்து செல்வதே தமக்குள்ள ஒரே வழி என்றும் இலங்கையின் பாராளுமன்றத்திலேயே செல்வநாயகம் அறிவித்தார். அதற்கான வழிமுறைகளில் ஆயுத போராட்டமும் அமையும் என்பதை செல்வநாயகம் நிராகரிக்கவில்லை. 'ஒன்றில், உரிமை பெற்ற இனமாக வாழவேண்டும்; அல்லது செத்து மடியவேண்டும்' என்பதே அவர் கூறிய அசல் வார்த்தைகள். ஆகவே, தமிழர்களின் தனிநாடு கோரிக்கையையும், ஆயுத போராட்டத்தையும் எவரும் நியாயமற்றது என்றோ, பயங்கரவாதம் என்றோ இலகுவில் முத்திரை குத்திவிட முடியாது. இந் நிலைமைகளுக்கான பொறுப்பை சிங்கள அரசியல் தலைவர்களே ஏற்றுக்கொள்வதுதான் நியாயமானது.

அரசியல் நிலைமைகளில் எற்பட்ட மாற்றங்களின் பின்னருங்கூட, பதினேழு ஆண்டுகள் ஆட்சியில் தொடர்ந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் காலத்தில் மிதவாத அரசியல்வாதிகளாலும், தீவிரவாத அரசியலில் ஈடுபட்டோராலுங்கூட பல பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டன. இவை பலவற்றில் இந்தியாவின் ஈடுபாடும் இருந்தது. எனினும், அவை அனைத்துமே குழம்பிவிட்டபோது, இந்திய - இலங்கை ஒப்பந்தம், அது தொடர்பான 13ஆவது அரசியலமைப்புத் திருத்தம், மங்கள முனசிங்க தெரிவுக்குழு அறிக்கை என்பன எழுத்துருவில் பொறிக்கப்பட்டன.

திருமதி சந்திரிகா குமாரதுங்க இவற்றின் அடிப்படையிலும் தான் தன்னுடைய பரவலாக்கல் திட்டத்தை தயாரித்திருக்கிறார். கூடவே, ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரான காலஞ்சென்ற காமினி திசாநாயக்கவின் தேர்தல் விஞ்ஞாபனமும் இதில் கருத்துக்கெடுக்கப்பட்டிருக்கிறது.

ஆக, இவை அனைத்திலும், சந்திரிகாவின் இந்த அதிகார பரவலாக்கல் திட்டம் பல் அம்சங்களில் முன்னேற்றமான தன்மைகளைக் கொண்டிருக்கின்றன. திட்டத்தை ஆய்ந்த பலர் இதனை ஒப்புக் கொள்கிறார்கள். முதலமைச்சர்; வெளிநாட்டு நிதியுதவி தொடர்பான அம்சங்கள் இந்திய மாநிலங்களுக்கு உள்ளவற்றைவிட மேலானவை என்பதும் கூறப்படுகிறது. நீதி நிர்வாகம், பொலிஸ் சேவை, காணி உபயோகம் போன்றனவும் நியாயமான அளவில் உள்ளன. அத்துடன் இதில், சிங்களத்துடன் தமிழுக்கும் அரசியலமைப்பில் சம அந்தஸ்து வழங்கப்படுகிறது.

ஆனால், இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் கூறப்பட்டவாறான வட-கிழக்கு மாகாணங்களின் இணைப்பு உள்ளபடியேயன்றி, 'இம்மாகாண எல்லைகள் மீள நிர்ணயம் செய்யப்படும்' என்று கூறப்படுகிறது. இதுதான் தமிழர்களளவில் அவர்களின் மனதை உறுத்தும் முக்கியமான விடயமாகிறது. எனினும், இது கலந்தாலோசிக்கப்படலாம் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

ஆக, இத் தீர்வுத் திட்டம் சந்திரிகாவின், அல்லது அரசாங்கத்தின் சொந்த ஆலோசனைகளே. இதற்கு ஆதரவும் எதிர்ப்புகளும் சிங்கள, தமிழ் மக்கள் இருசாராரிடமுமே இருக்கின்றன. இது கடக்க வேண்டிய பாதையும் நீண்டது. ஆனால், இந்த நிலைமைகளில் தமிழர் பிரதேசங்கள் மீது அரசு மேற்கொண்டுள்ள பாரிய இராணுவத் தாக்குதல்கள் எத்தகையவை? 'முன்னேற்றப் பாய்ச்சல்', 'இடி முழக்கம்' இராணுவ நடவடிக்கைகளுக்குப் பின்னர் இப்போது உடனடியாகவே 'சூரியக் கதிர்' தாக்குதல் நடவடிக்கையையும் மிகப் பெரும் இராணுவ பலத்துடன் யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்படுகிறது.

விடுதலைப் புலிகள் இத் தீர்வுத் திட்டத்தை ஏற்றுக்கொள்ளாததால் அவர்களை ஒழித்துவிட்டு, பின்னர் இதனை அமுலுக்குக் கொண்டுவரலாமென ஜனாதிபதி எண்ணலாம். அத்துடன், தென்னிலங்கையில் எழும் பேரினவாத சக்திகளை திருப்திப்படுத்துவதற்காகவும் அவர் இந் நடவடிக்கையை மேற்கொள்ளலாம்.

ஆனால், இதில் தமிழ் மக்களின் மன உணர்வுகளை மதிப்பிடுவதும் அதற்கு மதிப்பளிப்பதும் அரசின் கடமை. இராணுவ நடவடிக்கைகளில் பெருமளவு பாதிப்பை அநுபவிப்பவர்கள் பொதுமக்களே. பொதுமக்களுக்கு இப் பாதிப்பை ஏற்படுத்தாமல் புலிகளுடன் இராணுவம் போரிட முடியாத நிலையில், சில சமயங்களில் இத் தாக்குதல் நடவடிக்கைகளால் பொதுமக்களிடமிருந்து புலிகளை அந்நியப்படுத்தலாம் என்றும் அரசு திட்டமிட்டிருக்கலாம்.

சந்திரிகா இனப்பிரச்னைக்கான ஒரு தீர்வில் நேர்மையான விசுவாசத்தை கொண்டேயிருப்பார். பௌத்த பிக்குகள் மத்தியில் அண்மையில் அவர் ஆற்றிய உரை ஒன்று அதனை வலுப்படுத்தும். எனினும், அவரது இத் திட்டம் இன்னமும் எழுத்தளவில் உள்ள ஒன்றே தவிர, அது அரசியல் தீர்வாகிவிடவில்லை; அல்லது ஒரு நம்பிக்கையைத்தானும் அது ஏற்படுத்தவில்லை. பல கட்டங்களை அது தாண்டவுள்ளபோது, தென்னிலங்கையில் அதன் எதிர்ப்பும் அதிகரித்து வருகிறது. எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்ககூட இன்னமும் மௌனமே சாதித்து வருகிறார். இந் நிலையில், தமிழர்களுக்கு இதன்மூலம் சமாதானத் தீர்வை அளித்துவிட்டது போன்ற காரியத்தில் அரசு செயல்பட முயல்வதுபோல் தெரிகிறது. அத்துடன், இத் திட்டத்தை புலிகளை ஒழிப்பதற்கான ஒரு கவசமாக அரசு பயன்படுத்த முயல்வதாகவும் தெரிகிறது.

திரு எஸ். ஜே. வி. செல்வநாயகத்துடன் பிரதமர் எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்க ஒப்பந்தத்தைக் கைச்சாத்திட்டபோது, 'இதை நான் கிழித்தெறியத்தானே போகிறேன்' என்று நினைத்துக்கொண்டேதான் கைச்சாத்திட்டதாக எவரும் கருதவில்லை. இந்த அநுபவம் தமிழ் மக்களுக்கு உண்டு. தனிப்பட்ட வாழ்வில் புலிகள் மீது மக்களுக்கு அதிருப்தி இருக்கலாம், இருக்கிறது. ஆனால், அரசியல் ரீதியில் புலிகளைத் தங்களுக்கான ஒரு பெரும் பலமாகவே அவர்கள் கருதுவார்கள். அந்தப் பலம் முற்றிலும் சரியானவிதத்தில் செயல்படுகிறதா என்பது அவர்களுடைய பிரச்னை. ஆனால், நம்பிக்கையான, நியாயமான ஓர் அரசியல் தீர்வை கண்முன்னே காணுமுன்னர் அந்தப் பலத்தை இழந்துவிட அவர்கள் தயாராக இருப்பார்கள் என்று எண்ணிவிட முடியாது. மாறாக, அந்த நம்பிக்கையை அவர்களுக்கு ஏற்படுத்த முயல்வது தான் சந்திரிகாவின் விசுவாசத்துக்கு துணைநிற்கும். □

# THAMPA
## SOLICITORS


**ZAMBIA HOUSE**
**8A SOUTHHILL AVENUE**
**SOUTH HARROW**
**MIDDX HA2 0NQ**

**TEL: 0181-426 8562**
**HOME: 0181-422 8248**
**FAX: 0181-426 8307**

- ☆ CONVEYANCING
- ☆ LITIGATION
- ☆ IMMIGRATION MATTERS
- ☆ WILLS & PROBATE
- ☆ LANDLORD & TENANT
- ☆ MATRIMONIAL MATTERS
- ☆ PERSONAL INJURY
- ☆ LIQUOR LICENSING

**LEGAL AID WORK UNDERTAKEN**


# சொன்னார்கள்



- "அவரின் நூல் எதனையுமே நான் வாசிக்கவில்லை. அவற்றை வாசித்து என் சிந்தனையை வீணடிக்க விரும்பவில்லை."
  *-பால் தக்ரே, சிவசேனைத் தலைவர் (சல்மான் ருஸ்டியின் சமீபத்திய சர்ச்சைக்குரிய நாவல் பற்றி. அது, பால் தக்ரே பற்றியே எழுதப்பட்டதாக கூறப்படுகிறது)*

- "பாண் எமது தேசிய அடையாளத்தின் ஒரு சின்னம். கடைகளில் அது இல்லாதிருந்தால் நாம் உண்மையில் யார் என்பது தெரியாது."
  *-பிலிப் வசூர், பிரெஞ்சு விவசாய அமைச்சர் (பல வருடங்களாக வீழ்ச்சியடைந்து வரும் நீளமான பிரெஞ்சு பாணின் விற்பனையை ஊக்குவிக்கும் பிரச்சாரத்தில்)*

- "எதற்குமான இந்த சுதந்திரத்தில் எது உண்மை என்று ஒவ்வொன்றையும் ஆராய்ந்தே அறியவேண்டியதாக இருக்கிறது."
  *-லீ குவான் யூ, சிங்கப்பூர் பிரதமர் (மேலை நாடுகளின் பத்திரிகைச் சுதந்திரம் பற்றி)*


- "எந்த ஓர் எழுத்தாளனும் எனது நூல் மோசமானது; நான் ஒரு முழு மடையன் என்று கூறமாட்டான்."
  *-அம்பேர்டோ எகோ, நாவலாசிரியர் (எழுத்தாளர்களிடம் அவர்களது நூல்கள் பற்றி செவ்வியாளர்கள் கேட்பது குறித்து)*

- "மிகவும் கண்டிப்பாக இருக்கவேண்டாம்."
  *-சந்திரிகா குமாரதுங்க (பத்திரிகைகளுக்கான செய்தித் தணிக்கை குறித்து தணிக்கை அதிகாரியிடம்)*

**banking nirvana**




கார்டியன், லண்டன்




# அறிவிலே புதியன

## தூங்கவைக்கும் அதிர்வு



குறட்டை; நிம்மதியாக ஒருவர் தூங்கு கையில் அது எத்தனைபேரின் தூக்கத்தைக் குழப்புகிறது?

ஒருவர், தான் குறட்டை விடுவதுபற்றி அறிந்திருந்தாலுங்கூட அவரால் அதுகுறித்து என்னதான் செய்துவிட முடியும்?

சற்று தட்டி எழுப்பிவிட்டால் சிறிது நேரம் தணிந்துவிடுகிறது. ஆனால், எத்தனை தடவைகள்?

இப்பொழுது அந்த வேலையைச் செய்ய ஒரு கருவி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அது, குறட்டைக்கு மருந்தாகிறது; கவலை தீர்க்கிறது.

கைக்கடிகாரம் போன்ற ஒரு கருவி அது. தூங்கும்போது மணிக்கட்டில் அதனை கட்டிக்கொண்டு தூங்கினால், குறட்டை ஒலி எழுகையில் அது இலேசாக அருட்டி, குறட்டையை நிறுத்திவிடுகிறது. Ultra Snore Control எனப்படும் இக் கருவியிலுள்ள நுண்ணிய ஒலிவாங்கி குறட்டை ஒலியை உள்வாங்கும்போது கருவி இலேசான அதிர்வை உண்டுபண்ணுகிறது. இது, குறட்டை விடுபவரின் தூக்கத்தைக் கலைக்காது, அவர் சற்று திரும்பி படுக்கவைக்கிறது. இதனால் குறட்டை தடைப்படுகிறது.

கையை அசைத்தாலும் அல்லது கையை எந்நிலையில் வைத்திருந்தாலும் இக் கருவி தன் பணியைச் செய்யவல்லது. தூக்கத்தைக் கலைக்காது, குறட்டையை நிறுத்தும் அதிர்வுகளை ஏற்படுத்தும் விதத்தில் இது வடிவமைக்கப்பட்டுள்ளபோது, இந்த அதிர்வின் வீச்சை அதிகரிக்கச் செய்து, தூக்கத்திலிருந்து எழுப்பும் 'அலாரம்' கடிகாரமாகவும் இது பயன்படவல்லது. அதற்கான கடிகார வசதிகளும் இதில் உண்டு.

8 அவுன்ஸ் நிறைகொண்ட இக் கருவி மூன்று பற்றரிகளில் இயங்குகிறது. சான்பிரான்சிஸ்கோவிலுள்ள 'ஷாப்பர் இமேஜ்' என்ற கம்பனி சந்தைப்படுத்தும் இதன் விலை 60 அமெரிக்க டொலர்கள். ❑

# யாழ்ப்பாணத்தில் வரையறுக்கப்பட்ட ராணுவ தாக்குதலின் நோக்கம் என்ன?

கொழும்பிலிருந்து எல்லாளன்

முழு அளவிலான தாக்குதல் ஒன்றை மேற்கொண்டு யாழ் குடா நாட்டைக் கைப்பற்ற முடியாதென்பதை அரசாங்கம் தெளிவாகவே உணர்ந்துகொண்டுள்ளது. ஜூலை 'முன்னேறறப் பாய்ச்சல்' நடவடிக்கையின் முடிவு இதனை அரசுக்குத் தெளிவாக உணர்த்திவிட்டது. ராணுவத் தீர்வை நோக்கி அடுத்த காலடியை வைப்பதில் அரசு, வரையறுக்கப்பட்ட தாக்குதல்கள் என்ற வகையில் பல தாக்குதல்களைக் குடாநாட்டில் முடுக்கிவிட்டது. இத் தூக்குதலில் ராணுவத்தினர் புன்னாலைக்கட்டுவன், புத்தூர் ஊடாக கோப்பாயை அடைந்திருக்கிறார்கள். முழு அளவிலான எதிர்த் தாக்குதலை இதில் புலிகள் மேற்கொள்ளவில்லை என்றே தெரிகிறது. தங் களில் பாரிய ராணுவ இழப்பை எதிர் நோக்க அவர்கள் விரும்பாதது இதற்குக் காரணமாகலாம். எனினும் புலிகள் இதில் பெரும் உயிரிழப்புகளைச் சந்தித்திருக்கி றார்கள். 149 புலிகளின் சடலங்கள் சர்வ தேச செஞ்சிலுவைச் சங்கத்தால் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

மாற்றமடைந்துவிட்ட புதிய ராணுவப் பரிமாணத்தில் வரையறுக்கப்பட்ட தாக்குதல்களை மட்டுமே அரச படைகளால் இன்று மேற்கொள்ளக்கூடியதாகவுள்ளது. பலாலி ராணுவ முகாமின் முன்னணிப் பாதுகாப்பு அரண்களை மேலும் முன்னே கொண்டுசெல்லும் நோக்குடனேயே இத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

புலிகளை அழித்தொழிக்க வேண்டும் என்பதைவிட, தம்முடைய பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் என்பதே ராணுவத்தின் முதலாவது நோக்கமாகவுள்ளது. ராணுவப் பலப்பரிமாணத்தில் ஏற்பட்டுள்ள மாற்றம் ஓரளவுக்கு தற்காப்பு நிலைக்கே ராணுவத்தைக் கொண்டு சென்றுள்ளது.

'முன்னேற்றப் பாய்ச்சல்' நடவடிக்கையின்போது நவாலியில் தேவாலயம் ஒன்றின்மீது தாக்குதல் நடாத்திய 'புட்காரா', இப்போது நாகர் கோவிலிலுள்ள பாடசாலை ஒன்றின்மீது தாக்குதலை மேற்கொண்டிருக்கிறது. ராணுவ நடவடிக்கை ஒன்றின்போது இரண்டு நோக்கங்களுக்காக தாக்குதல் ஒன்றை மேற்கொள்ள முடியும்.

ஒன்று; எதிரியை அழிப்பதற்கு.

இரண்டு; எதிரியின் முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்துவதற்கு.

ஆனால், விமானங்களிலிருந்து மேற்கொள்ளப்படும் குண்டுவீச்சுகளும், முகாம்களிலிருந்து மேற்கொள்ளப்படும் ஷெல் தாக்குதல்களும் இந்த இரண்டு வரையறைகளையும் தாண்டிச் சென்றுவிடுகின்றன.

பொதுமக்களின் இலக்குகள் மீது வேண்டுமென்றே மேற்கொள்ளப்படும் இத் தாக்குதல்களின் நோக்கமென்ன?

பொதுமக்ளை பெருமளவில் கொல்வதன் மூலம் மக்களைப் போராளிகளிடமிருந்து தனிமைப் படுத்தலாம் எனவும் ராணுவம் கணக்குப் போட்டுச் செயல்படுகின்றது. ராணுவ ரீதியில் வெற்றிபெற முடியாத நிலையிலேயே பொதுமக்கள் இலக்குகள் தாக்குதலுக்கு உள்ளாகின்றன.

குடாநாட்டின்மீது பாரிய தாக்குதல் ஒன்றை நடத்துவதுடன் இணைந்ததாகவே செய்தித் தணிக்கை நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. சில பத்திரிகைகளின் செயற்பாடுகளே இந்தத் தணிக்கைக்குக் காரணம் எனக் கூறப்பட்டது. ராணுவம் தொடர்பான செய்திகள் புலிகளுக்குக் கிடைக்காமல் செய்வதும் இதனுடைய நோக்கங்களிலொன்றெனவும் சுட்டிக் காட்டப்பட்டது.

ஆனால் இவற்றைவிட, வேறு சில விடயங்களும் இதில் சம்பந்தப்பட்டுள்ளன. முக்கியமாக, பொதுமக்களின் இலக்குகள் மீதான தாக்குதல்களை இதன் மூலம் திரையிட்டு மூடிவிடமுடியும். இரண்டாவதாக, முன்னேற்றப் பாய்ச்சலில் ஏற்பட்டதைப் போன்ற ஒரு தோல்வி ஏற்பட்டால் கூட அதனை மறைத்துவிட முடியும்.

ஆனால், விடுதலைப் புலிகளின் செய லகங்கள் உலகம் முழுவதும் பரவியுள்ள நிலையில் தணிக்கை எவ்விதமான பயனையும் தராதென்பதை, அது நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட ஒரு சில நாள்களிலேயே அரசு உணர்ந்துகொண்டது. நாகர் கோவில் பாடசாலைமீதான தாக்குதலை அரசு மறைத்தபோதிலும், வெளிநாடுகளில் புலிகள் வெளியிட்ட அறிக்கைகளே இவற்றை வெளிப்படுத்தின.

முதலில் இவ்வாறான தாக்குதல் ஒன்று நடைபெறவே இல்லை என மறுத்த அரசு, பின்னர் தவறுதலாக அவ்வாறு நடந்திருக்கலாம் எனக் கூறியது. விடுதலைப் புலிகளுடைய சர்வதேசப் பிரச்சாரங்களுக்கு முன்பாக தணிக்கை பலனளிக்காது என்பதனாலேயே வெளிநாட்டுச் செய்தி ஸ்தாபனங்கள் மீதான தணிக்கையைத் தளர்த்துவதற்கு அரசு இணங்கியது. வெற்றியை நோக்கிச் செல்லும் ஒரு ராணுவத்துக்கு தணிக்கை அவசிய மில்லை.

'இரண்டு மாதத்தில் புலிகளை ஒழித்துவிட முடியும்' எனச் சூளுரைத்த பிரதி பாதுகாப்பு அமைச்சர் அநுருத்த ரத்வத்தை, தனது குரலைத் தளர்த்திக்கொண்டுள்ளது ராணுவத்தின் யதார்த்த நிலையையே பிரதிபலிக்கிறது.

"யுத்தத்தைத் தாமதப் படுத்துவதோ அல்லது கைவிடுவதோ அரசாங்கத்தின் நோக்கமல்ல. ஆனால், இதன்மூலம் மட்டும் பிரச்னைக்குத் தீர்வு கண்டுவிட முடியாது" என அவர் மகாசங்கத்தினரிடம் தெரிவித்திருப்பது ராணுவ நடவடிக்கைகளில் அவர் நம்பிக்கையிழந்துள்ளதையே வெளிப்படுத்தியது. ஆனாலும், ஒரு மூன்று மாதத்தில் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர முடியுமென அவர் கூறியுள்ளார்.

**பலாலி ராணுவ முகாமின் முன்னணிப் பாதுகாப்பு அரண்களை மேலும் முன்னே கொண்டுசெல்லும் நோக்குடனேயே இத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.**

மழைக்காலம் ஆரம்பிப்பதற்கு முன்பாக குடாநாட்டில் மற்றொரு தாக்குதலை மேற்கொண்டு பலாலியின் முன்னணிப் பாதுகாப்பு அர ண்களை விஸ்தரிக்க வேண்டும் என்பதாலேயே 'இடிமுழக்கத் தாக்குதல்' மேற்கொள்ளப்பட்டது. இதனால் ஏற்பட்டுள்ள உயிர், உடமை அழிவுகள் ஒருபுறமிருக்க, ராணுவ சமநிலையில் ஏற்பட்டுள்ள மாற்றத்தையும் இதன்மூலம் உணரக்கூடியதாக இருந்தது.

ராணுவத்துக்கு அண்மையிலேற்பட்ட இழப்புக்கள், பின்னடைவுகள் பாரிய தாக்குதல்களின்மூலம் சில வெற்றியையாவது பெறாவிட்டால், ராணுவத்தின் மன உறுதியைப் பேண முடியாதென்ற உண்மையை உணர்த்தியுள்ளது. அத்துடன் பேரினவாதிகள், ராணுவவாதிகளைத் திருப்திப்படுத்தவும் இவ்வாறான ஒரு வெற்றி ராணுவத்துக்கு அவசியமாகவே இருந்தது.

**ராணுவத்துக்கு அண்மையிலேற் பட்ட இழப்புக்கள், பின்னடைவுகள் பாரிய தாக்குதல்களின் மூலம் சில வெற்றியை யாவது பெறாவிட்டால், ராணுவத்தின் மன உறுதியைப் பேண முடியாதென்ற உண்மையை உணர்த்தியுள்ளது.**

ஆனால், யுத்தத்தில் அவ்வாறான வெற்றியொன்றைப் பெற முடியாத நிலையும் அரசுக்குள்ளது. அதனால்தான் தணிக்கையை நடைமுறைப் படுத்திக்கொண்டு மறுபக்கத்தில் யுத்தத்தை அரசு மேற்கொண்டுள்ளது.

முழு அளவிலான ராணுவ நடவடிக்கைக்கு வேண்டிய ராணுவ வழங்கல்களை கிரமமான முறையில் பெறமுடியாமையே அரசின் முன்னாலுள்ள மிகப் பெரிய பிரச்னையாகும். முன்னேற்றப் பாய்ச்சல் நடவடிக்கையின்போது சில பகுதிகளை ராணுவத்தால் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடிந்தபோதிலும்கூட, அவர்களுக்குத் தேவையான வழங்கல்களையோ, பாதுகாப்பையோ உறுதிப்படுத்த முடியவில்லை.

இதனால்தான் சண்டிலிப்பாயிலும், அளவெட்டியிலும் புலிகள் ஊடறுத்துத் தாக்குதல் நடத்தியபோது ராணுவத்தால் தாக்குப்பிடிக்க முடியவில்லை. ராணுவ வியூகத்தை உடைத்தெறிவதாகவே புலிகளின் வியூகம் அமைந்திருந்தது.

மற்றொரு தாக்குதலை மேற்கொள்வதாக இருந்தால்கூட இதேபோன்ற பிரச்னைகளை ராணுவம் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. விமானங்களைச் சுட்டு வீழ்த்தக்கூடிய வல்லமையைப் புலிகள் பெற்றிருப்பதும், கடற்புலிகளின் அண்மைக்காலத் தாக்குதல்களும் ராணுவ வியூகங்களில் மாற்றம் செய்யவேண்டிய தேவையை அரசுக்கு ஏற்படுத்தியுள்ளது.

இதனால்தான், 35 ஆயிரம் துருப்புக்களைப் பயன்படுத்தி பாரிய தாக்குதலுக்கான திட்டத்தை அரசாங்கம் மேற்கொண்டது. ஆனால், ராணுவ எண்ணிக்கையில் மட்டுமே கவனத்தைச் செலுத்திய அரசினால், முழு அளவிலான தாக்குதல் ஒன்றுக்கு அவசியமான ஏனைய விடயங்களையிட்டு சரியான திட்டமொன்றை மேற் கொள்ள முடியவில்லை.

முக்கியமாக, காங்கேசன்துறை துறைமுகத்துக்குள் உட்புகுந்து புலிகள் அடிக்கடி மேற்கொண்டுவரும் தாக்குதல்கள், ராணுவத்துக்கான வழங்கல்கள் கிரமமாகக் கிடைக்குமா என்ற கேள்வியை எழுப்பியுள்ளன. ராணுவ வழங்கல்களில் சுமார் 90 வீதமானவை காங்கேசன்துறை துறைமுகத்தின் ஊடாகவே அனுப்பப்படுகின்றன. எனவே, இங்கு புலிகளால் மேற்கொள்ளப்படும் தாக்குதல்கள் அனைத்தும் ராணுவத்தின் தாக்குதல் சக்தியை வரையறுப்பவையாகவே உள்ளன.

கடலில் இவ்வாறான ஒரு பிரச்னையை எதிர்கொள்ளும் ராணுவத்தின் தாக்குதல் திறன், விமானப் படையினராலும் உறுதிப்படுத்தப்பட முடியாததொன்றாகவே உள்ளது. விமானப் படையின் 'அன்டனோவ்-32' போக்குவரத்து விமானம் மர்மமான முறையில் கடலில் வீழ்ந்தது படையினருக்கு மற்றொரு பின்னடைவை ஏற்படுத்தியது.

இந்நிலையில், பாரிய ஆள் - ஆயுத பலத்துடன் முழு அளவிலான தாக்கு தல் ஒன்றை நடத்துவதென்ற திட்டத்தை ஒத்திவைப்பது படையினருக்குத் தவிர்க்கமுடியாததாகிவிட்டது. இதனால்தான் 7 ஆயிரத்து 500 படையினரை மட்டும் பயன்படுத்தி 'இடிமுழக்கத் தாக்குதலை' அரசபடைகள் மேற்கொண்டன.

புலிகளின் ஆட்டிலறி ஷெல்களும், கடுமையான எதிர்த்தாக்குதல்களும் ராணுவத்தின் முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்தியுள்ளதுடன் ராணுவத்துக்குப் பாரிய இழப்புக்களையும் ஏற்படுத்தியுள்ளது. இதேவேளையில், ராணுவத்துக்குத் தேவையான மேலதிக படையினரைக் கொண்டுவந்த கப்பலொன்றும் தற்கொலைப் படையினரால் தாக்கப்பட்டுள்ளது.

முழு அளவிலான வியூகமொன்றை அமைத்து குடாநாட்டின்மீது பாரிய தாக்குதலொன்றை மேற்கொள்வது சாத்தியமற்றதென்பதையே இறுதியாக நடந்து முடிந்துள்ள யுத்தமும் உணர்த்தியுள்ளது. அரசாங்கம் இதனை இனிமேலும் உணர்ந்துகொள்ளாவிட்டால் இந்தப் பிரச்னைக்கு அரசியல் தீர்வொன்றைக் காண முடியாது. அத்துடன், அரசாங்கம் விரும்பும் ராணுவத் தீர்வொன்றைக்கூட காணமுடியாத நிலை ஏற்படும்.

ராணுவத் தாக்குதல்களை நியாயப்படுத்தவே அரசியல் தீர்வு யோசனைகள் அரசினால் வெளியிடப்பட்டன. இப்போது ராணுவத் தாக்குதல்களும் பிசுபிசுத்துப் போய்விட்டன. அரசியல் தீர்வு முயற்சிகளும் சிதறண்டு போய்விட்டன. ராணுவ முயற்சிகள் புலிகளின் தந்திரோபாயங்களால் தவிடுபொடியாகின்றன. அரசியல் தீர்வு முயற்சிகள் பேரினவாதிகளின் கூக்குரல்களால் தள்ளாடிக்கொண்டிருக்கின்றன. ஒரு படகை நம்பாமல் இரு படகுகளில் இரு கரங்களையும் வைக்க முயன்ற ஜனாதிபதி சந்திரிகாவை இரண்டுமே இன்று காப்பாற்றத் தயாராக இல்லை. ❑

**பொதுமக்களை பெருமளவில் கொல்வ தன் மூலம் மக்களைப் போராளிகளிட மிருந்து தனிமைப் படுத்தலாம் எனவும் ராணுவம் கணக்குப் போட்டுச் செயல்ப டுகின்றது.**

# அதிகார பரவலாக்கல் திட்டமும் அரசியல் கட்சிகளும்

**கொழும்பிலிருந்து த. சபாரத்தினம்**

ஆகஸ்ட் 25, வெள்ளிக்கிழமை. காலை 10 மணியிருக்கும். பாராளுமன்றக் கட்டடத்தில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் அறைக்குள் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் மு. சிவசிதம்பரமும் அவரின் கட்சியைச் சேர்ந்த மற்றும் ஆறு பேரும் பிரவேசிக்கின்றனர். ரணிலும், கட்சியின் தலைவர் ஏ.ஸி.எஸ். ஹமீதும், கே. என். சொக்ஸியும் எழுந்து அவர்களை வரவேற்கின்றனர்.

"எல்லாக் கட்சிகளினதும் கருத்துக்களை அறிய நாங்கள் முடிவு செய்துள்ளோம். அதன் பின்பு அரசாங்கத்தின் அதிகார பரவலாக்கல் பற்றிய எங்கள் முடிவை எடுப்போம்" என்று ஆரம்பித்தார் ரணில். "இனப் பிரச்னைக்கு அரசியல் தீர்வுதான் காணவேண்டும் என்பது எமது நிலைப்பாடு; அந்த அரசியல் தீர்வு அதிகார பரவலாக்கல் அடிப்படையில் அமையவேண்டும்" என்றும் கூறினார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் ஆர். சம்பந்தன், ஐக்கிய தேசியக் கட்சியின் (ஐ.தே.க.) நிலைப்பாட்டை வரவேற்றார். "எமது கொள்கையும் அதுதான்" என்றார்.

அதன்பின்பு சிவசிதம்பரம் தமது கட்சி அரசின் அதிகார பரவலாக்கல் ஆலோசனைகளையிட்டு மகிழ்ச்சியடைந்திருப்பதாகச் சொன்னார். இனப் பிரச்னைத் தீர்வுக்கு இரண்டு அடிப்படை அம்சங்கள் தேவை; முதலாவது, சமஷ்டி அரசியல் அமைப்பு. இரண்டாவது, சமஷ்டி ஆட்சிக்கான அலகுகள்.

அரசின் ஆலோசனைகள் 'சமஷ்டி' என்ற பதத்தை உபயோகிக்காவிடினும், சமஷ்டி அமைப்புக்கான அம்சங்களை முழுமையாகக் கொண்டுள்ளன என்பதை சிவசிதம்பரம் விளக்கினார்.

1978ஆம் ஆண்டின் அரசியல் சட்டத்தின் இரண்டாவது பிரிவு திருத்தப்படவுள்ளதை அவர் சுட்டிக்காட்டினார். 'இலங்கை ஓர் ஒற்றையாட்சி நாடு' என்று 1978ஆம் ஆண்டு அரசியல் சட்டம் கூறுகிறது. அது, 'இலங்கை பிரதேசங்களின் ஒன்றியம்' என்று திருத்தப்படவுள்ளது. அத்துடன், இலங்கையின் நிலப்பரப்பு 25 மாவட்டங்களைக் கொண்டது என்றும் கூறும் 1978 அரசியலமைப்பு விதி, 'எட்டுப் பிராந்தியங்களைக் கொண்டது' என்று மாற்றப்படவுள்ளது.

'இலங்கை மக்களின் இறைமையை பாராளுமன்றமும், பிராந்திய சபைகளும் சர்வசன வாக்கெடுப்பின்போது மக்களும் பிரயோகிப்பார்கள்' என்று அரசின் ஆலோசனை கூறுகிறது.

ஒற்றையாட்சி முறையை சமஷ்டி ஆட்சி முறையாக மாற்றுவதற்குச் சிங்கள மக்களிடையே பரவலான எதிர்ப்பு இருப்பதை ஹமீது சுட்டிக்காட்டினார். தமது கட்சிக்குள்ளேயும் அத்தகைய எதிர்ப்பு இருப்பதை ஒப்புக்கொண்டார்.

கண்டியிலுள்ள மல்வத்தை, அஸ்கிரிய மகாநாயக்க தேரர்கள் ஒற்றையாட்சி முறையை மாற்றுவதைக் கண்டித்து ஆகஸ்ட் 25 பிற்பகலில் ஜனாதிபதிக்குக் கடிதம் எழுதினார்கள். சமஷ்டி ஆட்சிமுறை பிரிவினைக்கு வழிவகுக்கும் என்பதைச் சுட்டிக்காட்டினார்கள். மக்கள் ஐக்கிய முன்னணி (எம்.ஈ.பி) தலைவர் தினேஷ் குணவர்த்தன, பிரபல வழக்கறிஞர் எஸ். எல். குணசேகர, சிங்களவர் பாதுகாப்புச் சங்கத்தின் தலைவர் காமினி ஜயசூரிய ஆகியோரும் அதே கருத்தையே தெரிவிக்கின்றனர். "சமஷ்டி ஆட்சிமுறை ஈழத்துக்கு அடிகோலும்" என்கிறார் தினேஷ். "நாட்டைப் பிளக்க சமஷ்டி நல்ல வழி" என்கிறார் காமினி.



"இனப் பிரச்னைக்கு அரசியல் தீர்வுதான் காணவேண்டும் என்பது எமது நிலைப்பாடு; அந்த அரசியல் தீர்வு அதிகார பரவலாக்கல் அடிப்படையில் அமையவேண்டும்"
—ரணில் விக்கிரமசிங்க

"அரசின் அதிகார பரவலாக்கல் ஆலோசனைகளையிட்டு மகிழ்ச்சி"
—மு. சிவசிதம்பரம்



"ஒற்றையாட்சியின்கீழ் இப்பொழுது நாடு பிளவுபட்டுள்ளது; பிளவுபட்ட நாட்டை மீண்டும் ஒன்றாக்குவதற்குத்தான் சமஷ்டி அமைப்பைக் கொண்டுவருகிறோம்."
— ஜி. எல். பீரிஸ்

"இப்பொழுது படைவீரர் கூட யாழ்ப்பாணம் போக முடியாது; எல்லோரும் யாழ்ப்பாணம் போய்வரக் கூடியதாக நாட்டை ஒற்றுமைப் படுத் துவதற்காகத்தான் இணைப்பாட்சி முறையை அறிமுகம் செய்யவுள்ளோம்"
— சந்திரிகா குமாரதுங்க

நாடு பிளவடையும் வாதத்துக்கு ஜனாதிபதி சந்திரிகாவும், அரசியல் சட்ட அமைச்சர் ஜி. எல். பீரிசும் அளிக்கும் பதில்: "ஒற்றையாட்சியின்கீழ் இப்பொழுது நாடு பிளவுபட்டுள்ளது; பிளவுபட்ட நாட்டை மீண்டும் ஒன்றாக்குவதற்குத்தான் சமஷ்டி அமைப்பைக் கொண்டுவருகிறோம்." ஆகஸ்ட் 26 இல் தொலைக்காட்சியில் ஆற்றிய உரையில் சந்திரிகா சொன்னார்: "இப்பொழுது படைவீரர் கூட யாழ்ப்பாணம் போகமுடியாது;



"பிராந்திய சபைகளைக் கலைக்கும் அதிகாரத்தை மத்திய அரசுக்குக் கொடுப்பது 'தலையின் மேல் வாள் தொங்க விடும் முயற்சி" – டக்ளஸ் தேவானந்தா

"அரசின் ஆலோசனைகளில் குறிப்பிடப்பட்டுள்ள யோசனைகளைக் குறைத்தால் நாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம்" – த. சித்தார்த்தன்



நீங்கள் எல்லோரும் யாழ்ப்பாணம் போய்வரக்கூடியதாக நாட்டை ஒற்றுமைப்படுத்துவதற்காகத்தான் இணைப்பாட்சி முறையை அறிமுகம் செய்யவுள்ளோம்" என்று.

"சமஷ்டி என்ற பெயரைக் குறிப்பிடாது சமஷ்டி ஆட்சி முறையை அறிமுகம் செய்ய முன்வைத்தது உங்கள் கட்சிதானே" என்று சுட்டிக்காட்டினார் சம்பந்தன்.

சமஷ்டி ஆட்சிமுறை அறிமுகம் செய்யப்படவேண்டும் என்று மங்களமுனசிங்க தலைமையில் இயங்கிய பாராளுமன்றத் தெரிவுக்குழுவின்முன் தமிழ்க் கட்சிகள் பிரேரணை ஒன்றை முன்வைத்தபோது, ஐ.தே.க. சார்பில் பேசிய ஹமீத்: "சமஷ்டி என்ற வார்த்தையை சிங்கள மக்கள் சந்தேகக் கண்ணுடன் பார்க்கிறார்கள். அதனால், அவ்வார்த்தையை தவிர்த்துவிட்டு சமஷ்டியின் அம்சங்களை ஏற்றுக்கொள்வோம்" என்றார். அத்தகைய அமைப்பையே மங்களமுனசிங்க கமிட்டி சிபாரிசு செய்தது.

மங்களமுனசிங்க கமிட்டி சிபாரிசு செய்வதற்கு முன்பே 1989ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலின்போது சிறிமா பண்டாரநாயக்காவை அபேட்சகராக நிறுத்திய எதிர்க்கட்சிகள் 'ஜனநாயக மக்கள் கூட்டணி' என்ற கூட்டை அமைத்தன. அதில் தமிழ்க் காங்கிரஸ் குமார் பொன்னம்பலமும் தினேசும் இருந்தனர். அவர்கள் சேர்ந்து சிறிமாவின் தேர்தல் விஞ்ஞாபனத்தைத் தயாரித்தனர். அதில், 'இலங்கை பிராந்தியங்களாக பிரிக்கப்பட வேண்டும்' என்றும் 'வடமாகாண எல்லைகள் மறு நிர்ணயம் செய்யப்படவேண்டும்' என்றும் கூறப்பட்டிருந்தது.

சந்திரிகா அதைத்தான் விசேஷமாகச் சுட்டிக் காட்டியுள்ளார். "இலங்கையில் பிராந்திய சபைகள் அமைக்க தினேசும் குமாரும் இணங்கினர். அந்த தேர்தல் விஞ்ஞாபனத்தில் கையொப்பமும் இட்டுள்ளனர். ஆனால், குமார் இப்போது அதை கிண்டல் செய்கிறார்" என்றார்.

தினேசுக்கு டெலிபோன் செய்து, 'சந்திரிகாவுக்கு என்ன பதில் சொல்கிறீர்கள்?" என்று கேட்டோம். "அவசரப்படுத்தினார்கள், கையொப்பமிட்டேன். சிறிமாவிடம் பின்னர் அதனை ஆட்சேபித்தேன். தேர்தலின் பின்னர் பார்த்துக்கொள்ளலாம் என்றார்" என்று சொன்னார். "அந்தக் காலத்துக்கு அது உகந்தது; இன்று போதாது" என்கிறார் குமார்.

ஒற்றையாட்சி முறையை மாற்றக்கூடாது என்று வாதாடும் கோஷ்டியினருக்கு அரசாங்கத்தின் பதிலை எனக்களித்த பேட்டியில் பேராசிரியர் பீரிஸ் இவ்வாறு கொடுத்தார்: "ஒற்றையாட்சி முறையின்கீழ் உண்மையான அதிகார பரவலாக்கலைச் செய்யமுடியாது. ஆனால், பிராந்தியங்கள் பிரிந்து சென்றுவிடும் என்ற பயத்தைப் போக்க சில ஒழுங்குகளைச் செய்யலாம்."

"ஓர் அரசியலமைப்பு ஒற்றையாட்சித் தன்மையைக் கொண்டிருக்கிறதா என்பதை அதன் அதிகாரப் பரவலாக்கல் ஒழுங்கை வைத்துத்தான் நிர்ணயிக்க வேண்டும். எமது ஆலோசனைகளைப் பொறுத்தவரையில் அதிக பட்ச அதிகாரப் பரவலாக்கலுக்கு ஒழுங்கு செய்துள்ளோம்" என்றும் அவர் சொன்னார்.

1987 இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின்படி இயற்றப்பட்ட 13ஆவது அரசியல் சட்டத்திருத்தத்தின்படி அதிகாரம் மூன்று அட்டவணைகளின்கீழ் பகிரப்பட்டுள்ளது. மத்திய அரசின் அதிகாரங்கள்; மாகாண சபையின் அதிகாரங்கள்; இரண்டுக்கும் பொதுவான அதிகாரங்கள் என்பன அவை. 'இரண்டுக்கும் பொதுவான அதிகாரங்கள்'



"ஒற்றையாட்சி முறையை சமஷ்டி ஆட்சி முறையாக மாற்றுவதற்குச் சிங்கள மக்களிடையே பரவலான எதிர்ப்பு இருக்கிறது."

– ஏ. ஸி. எஸ். ஹமீது

"சமஷ்டி ஆட்சிமுறை பிரிவினைக்கு வழிவகுக்கும்"

– தினேஷ் குணவர்த்தன



"மத்திய அரசின் தீர்மானத்தை ரத்துச் செய்யும் அதிகாரம் பிராந்திய சபைகளுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது"

– காமினி ஜயசூரியா

"வடக்கு–கிழக்கு பிராந்திய சபை சுதந்திர பிரகடனம் செய்தால், அதைக் கலைக்க மத்திய அரசுக்கு அதிகாரம் கிடையாது"

– எஸ். எல். குணசேகர

என்ற வசதியைப் பயன்படுத்தி மாகாணங்களுக்கு அதிகாரம் வழங்குவதை மத்திய அரசு கட்டுப்படுத்தியது. இந்த நிலைமையைத் தவிர்ப்பதற்காக பொதுவான அதிகாரங்கள் என்ற பட்டியலை அகற்றி, அதன் கீழுள்ள அதிகாரங்களை மாகாண அரசுகளிடம் ஒப்படைக்கவேண்டும் என்று மங்களமுனசிங்க கமிட்டி சிபாரிசு செய்தது. அரசின் ஆலோசனைகள் அச் சிபாரிசின் படி அதிகாரங்களை மத்திய அரசின் அதிகாரங்கள்; மாகாண அரசின் அதிகாரங்கள் என இரண்டு பட்டியலில் ஒழுங்கு செய்துள்ளது. இதை எல்லா கட்சிகளுமே ஏற்றுள்ளன.

எனினும், பிராந்திய அரசுக்குக் கொடுக்கப்பட்டுள்ள சில அதிகாரங்களுக்கு எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. ஒவ்வொரு பிராந்தியத்துக்கும் அவ்வப் பிராந்தியங்களால் தெரிவுசெய்யப்பட்ட சபை இருக்கவேண்டும். பிராந்திய சபைகளுக்கு முதலமைச்சர்களும் மந்திரிசபைகளும் இருக்கவேண்டும். பிராந்திய சபைகளுக்கு அளிக்கப்பட்ட விடயங்களில் சட்டம் இயற்றும் அதிகாரம் பிராந்திய சபைகளுக்கு இருக்கும். நிர்வாக அதிகாரமும் வரி விதிக்கும் அதிகாரமும் இருக்கும். இவற்றில் பிரச்னை இல்லை.

ஒவ்வொரு பிராந்தியத்துக்கும் முதலமைச்சரின் சம்மதத்துடன் கவர்ணர் ஒருவரை ஜனாதிபதி நியமிப்பார். மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நிறைவேற்றுவதன் மூலம் பிராந்திய சபை கவர்ணரை பதவிநீக்கம் செய்யமுடியும். இந்த ஒழுங்குக்கு எதிர்ப்பு உள்ளது. 'மத்திய அரசின் தீர்மானத்தை ரத்துச் செய்யும் அதிகாரம் பிராந்திய சபைகளுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது' என்கிறார் காமினி ஜயசூரியா.

பிராந்திய சபையின் நம்பிக்கையைப் பெற்றிருக்கும்வரை முதலமைச்சரை பதவிநீக்கம் செய்யமுடியாது. அத்துடன், முதலமைச்சரின் ஆலோசனையின்பேரில்தான் பிராந்திய சபையைக் கவர்ணர் கலைக்க முடியும். இந்த இரண்டு ஒழுங்குகளுக்கும் ஐ.தே.க. உள்பட எல்லா அரசியல் கட்சிகளும், பிக்குகளும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். "வடக்கு-கிழக்கு பிராந்திய சபை சுதந்திர பிரகடனம் செய்தால், அதைக் கலைக்க மத்திய அரசுக்கு அதிகாரம் கிடையாது" என்று சொன்னார் எஸ். எல். குணசேகர. அந்த நிலைமையைப் போக்க நாட்டின் ஐக்கியத்துக்கும் இறைமைக்கும் குந்தகம் ஏற்படுத்தும் வகையில் பிராந்திய அரசு நடப்பின் அதைக் கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்குக் கொடுக்கப்படவுள்ளது. ஆனால், அவ்வதிகாரத்துக்குச் சில கட்டுப்பாடுகள் விதிக்கப்படும்.

பௌத்த பிக்குகளும் சிங்களத் தீவிரவாதிகளும் பிராந்திய சபைகளுக்குக் கொடுக்கப்பட்டுள்ள கடன் திரட்டும் அதிகாரம், பிராந்திய பொலிஸ் சேவையை அமைத்தல், அரச காணியை பிராந்திய சபைகளிடம் ஒப்படைத்தல், உயர் கல்வியை பிராந்திய சபைகளிடம் விடுதல், பிராந்திய நீதிமன்றங்களை அமைத்தல் ஆகியவற்றுக்கு எதிராக பிரசாரம் செய்ய ஆரம்பித்துள்ளனர்.

இளைப்பாறிய நீதியரசர் வனசுந்தர தலைமையில் 169 கற்றோர் அரசுக்குச் சமர்ப்பித்த மகஜரில், 'வெளிநாட்டு கடன் திரட்ட பிராந்திய சபைகளுக்கு அனுமதியளிப்பின் மேல் மாகாணமும், வட-கிழக்கு மாகாணமும் மட்டுமே வளர்ச்சியடையும். மற்றைய மாகாணங்கள் பின்தங்கிவிடும்' என்றும், 'காணியைத் தென்கிழக்கு மாகாணத்துக்குக் கொடுப்பின் சிங்களவர்கள் அங்கு குடியேற முடியாது' என்றும் பொலிஸ் அதிகாரத்தைக் கொடுப்பின் தமிழர்கள் தமக்கென தனிப் படையை அமைத்துவிடுவர்' என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

பிராந்திய சபைகளைக் கலைக்கும் அதிகாரத்தை மத்திய அரசுக்குக் கொடுக்கும் முயற்சியை ஈபிடிபி தலைவர் டக்ளஸ் தேவானந்தா, 'தலையின் மேல் வாள் தொங்கவிடும் முயற்சி' என்று வர்ணித்தார். வட-கிழக்கு பிராந்தியத்துக்கு விசேட அதிகாரங்கள் தேவை என்று சந்திரிகாவுக்கும் ரணிலுக்கும் கூறியுள்ளார். அத்துடன், "அரசின் ஆலோசனைகளில் குறிப்பிடப்பட்டுள்ள யோசனைகளைக் குறைத்தால் யோசனைகளை நாங்கள் ஏற்றுக்கொள்ளமாட்டோம்" என்றும் தெரிவித்துள்ளார். புளொட் தலைவர் சித்தார்த்தனும் அதே கருத்தை ஜனாதிபதியிடமும் எதிர்க்கட்சித் தலைவரிடமும் வலியுறுத்தியுள்ளார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியும், ஈபிடிபியும், புளொட்டும் தற்போதுள்ள வடக்கு-கிழக்கு மாகாணத்தையே தாம் ஏற்கப் போவதாகவும், முஸ்லிம்களுக்கு உப அலகு ஒன்றை ஏற்படுத்த முடியும் என்றும் சந்திரிகாவிடமும், ரணிலிடமும் கூறியுள்ளனர். அதை ஆதரிக்கக்கூடிய நிலையில் அவர்கள் இல்லை. புத்த பிக்குகள் அதை வன்மையாக எதிர்க்கிறார்கள்.

இலங்கையில் முன்பு இந்திய தூதராகப் பணிபுரிந்த ஜே. என். டிக்ஷித் 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகைக்கு எழுதியுள்ள கட்டுரையில் கூறியுள்ள கருத்துக்கள் இங்கு பொருத்தமானவை. அரசின் அதிகார பரவலாக்கல் யோசனைகள் பதின்மூன்றாவது அரசியல்சட்ட திருத்தத்திலும் பார்க்க முன்னேற்றமானவை எனக் குறிப்பிட்ட அவர், வடக்கு-கிழக்கு இணைந்த பிராந்தியத்தைக் கொடுக்க முன்வராதமையும், மத்திய அரசிடம் தமிழர்களுக்குரிய பங்கை நிர்ணயிக்காதமையும் அரசின் யோசனைகளை விடுதலைப் புலிகள் ஏற்றுக்கொள்ளத் தக்கவையாக ஆக்கத் தவறிவிட்டன என்றும் கூறியுள்ளார். ❑


எவ்வளவு தொகையானாலும்
ஒரே நாளில் இலங்கை, இந்தியாவுக்கு நீங்கள் பணம் அனுப்பலாம்

MONEY EXCHANGE

Ms Amara
189, PRAED STREET, PADDINGTON, LONDON W2 1RH
Tel: 0171-402 4668 Fax: 0171-402 4880

# அதிகரிக்கும் பாதுகாப்பு கெடுபிடிகள்

## தலைநகரில் பரவலாக புலிகள் ஊடுருவல்

கொழும்பிலிருந்து
**வில்மா விமலதாச**

இலங்கையில் முன்னரெப்போதுமே இல்லாதவிதத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. பிடிபட்ட கெரில்லாக்களிடமிருந்து பெறப்பட்டதாக பொலிசார் கூறும் கொலைமுயற்சி நடவடிக்கைகள் தொடர்பான தகவல்களையடுத்தே இந் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுகின்றன. ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க காலையில் பத்திரிகைகளைப் புரட்டும்போது தன்னைக் கொலை செய்வதற்காக தீவிர வாத தமிழ்ப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தற்கொலைப் படையினரை அனுப்பியுள்ளார் என்ற செய்தியை வாசிக்கும் அநுபவத்தைப் பெற்றுள்ளார்.

தமிழ்த் தற்கொலைப்படையினரே 1994இல் ஜனாதிபதி வேட்பாளர் காமினி திசாநாயக்க, 1993இல் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச, 1991இல் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி ஆகியோரின் கொலைகளுக்கு பொறுப்பானவர்கள் என்று நம்பப்படுகிறது.

◉ ஜனாதிபதி சந்திரிகா ஏழு வாகனங்களைப் பயன்படுத்துகிறார் என்பது புலிகளின் உயர் பீடத்துக்கு தெரியும். ஆகவே, தற்கொலைப் படையின் ஏழு பேர் அதற்காக பயிற்சியளிக்கப்பட்டுள்ளனர்.

◉ விமான கடத்தல்காரர் எவரும் விமானமொன்றை அலரி மாளிகை அல்லது மற்றும் கேந்திர இலக்குகள் மேலாக பறக்கும்படி நிர்ப்பந்திக்கலாம் என்பதில் பாதுகாப்பு அமைச்சு மிகுந்த எச்சரிக்கையாக உள்ளது.

◉ பெரும்பான்மை சிங்கள சமூகத்தின் பொதுவான அபிப்பிராயம் புலிகளை நலிவடையச் செய்து பின்னர் ஒரு சமாதான திட்டத்துக்கு தள்ளுவதான ஒரு நடவடிக்கைக்கு ஆதரவாக இருப்பதாகவே தெரிகிறது.

ஆகஸ்டில் கொழும்பில் இளநீர் வியாபாரி ஒருவர் தன்னையும் மற்றும் 24பேரையும் இப்படி வெடித்துச் சிதறவைத்தார். தேசிய ஒலிபரப்பு நிலையத்துக்கு அணித்தாக நிகழ்ந்த இச்சம்பவத்தில் கொலையாளி தனது இலக்கிலிருந்து தவறிவிட்டார் என்றே பொலிசார் நம்புகிறார்கள்.

கடற் கரும்புலிகளின் தற்கொலைப்படையினரும் இந்த ஆண்டில் பல கடற்படைப் படகுகள் மீதான தாக்குதல்களுக்கு பொறுப்பாகவிருந்திருக்கிறார்கள். தமது உடலில் வெடிபொருள்களை இணைத்துக் கொண்டு அல்லது சிறு படகுகளில் அவற்றை ஏற்றிச் சென்று இத் தாக்குதல்களை அவர்கள் மேற்கொள்கிறார்கள். ஜூலை யில் கடற்படைக் கப்பலொன் றை மூழ்கடித்தபின்னர் தப்பி யோடுகையில் பிடி பட்ட இரு புலிகளே முக்கியமான பல தகவல்களைத் தெரிவிப்பதாக பொலிசார் கூறுகின்றனர். பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஜி. பி. கொடகதெனிய அறிவித்த புதிய கொலைத் திட்டங்கள் தொடர்பான விபரங்கள் கொழும்பில் ஊடுருவிய புலி சந்தேக நபர்களால் வெளியிடப்பட்டவை. அவர்களில் ஒருவரானராசன் எனப்படும் சின்னத்துரை முகுந்தன், ஜனாதிபதி சந்திரிகா ஏழு வாகனங்களைப் பயன்படுத்துகிறார் என்பது புலிகளின் உயர் பீடத்துக்கு தெரியுமெனவும் ஆகவே, தற்கொலைப் படையின் ஏழு பேர் அதற்காக பயிற்சியளிக்கப்பட்டுள்ளனர் என்றும் கூறியதாக சொல்லப்படுகிறது. அத்துடன், மாடிக்கட்டடம் ஒன்றிலிருந்து தாங்கி எதிர்ப்பு ஆயுதங்களைப் பயன்படுத்துவதிலும் அவர்கள் பயிற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டு முற்பகுதியில் பாப்பரசர் விஜயம்செய்த வேளையிலேயே புலிகள் பலர் கொழும்புவந்து சேர்ந்ததாக பொலிசார் தெரிவிக்கின்றனர்.

வசதிபடைத்த தமிழ் வர்த்தகர்களும் பலர், பெருமளவு தொகைப் பணத்தை அவர்கள் யாழ்ப்பாணத்துக்கு அனுப்புகிறார்கள் என்ற குற்றச்சாட்டில் சுற்றி வளைக்கப்பட்டுள்ளார்கள்.

பாதுகாப்பு நடவடிக்கையாக ஜனாதிபதியின் பொது வைபவங்கள் குறைக்கப்பட்டுள்ளன. அவரது நடமாட்டங்களை ஒரு சில பாதுகாப்பு அதிகாரிகளே தெரிந்து வைத்திருக்கிறார்கள். அலரி மாளிகை வாசஸ்தலம் 'பங்கர்'களினால் பாதுகாக் கப்படுகிறது.

அரசியல்வாதிகளைக் கொலைசெய்யவும் மற்றும் பாராளுமன்றம், இராணுவ தலைமையகம், விமான நிலையம், தேசிய ஒலிபரப்பு நிலையம் ஆகியவற்றைக் குண்டு வைத்துத் தகர்க்கவும் திட்டமிட்ட மேலும் பலரைத் தாம் பிடித்துள்ளதாக பொலிசார் கூறுகிறார்கள். இந்த பாதுகாப்பு கெடுபிடி நடவடிக்கைகள் பொதுமக்களைப் பெரிதும் பாதிக்கின்றன. செப்டம்பரில் புலிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட பாரிய தாக்குதல், பூரண இராணுவ செய்தித் தணிக்கையுடன் சேர்ந்து மேற்கொள்ளப்பட்டது. பின்னர், சர்வதேச விளைவுகளில் அது பாதிப்பை ஏற்படுத்தும் என்பது சுட்டிக் காட்டப்பட்டதில், உள்ளூர் பத்திரிகைகள் நீங்கலாக, வெளி நாட்டு செய்தியாளர்களுக்கு அந்த தணிக்கை நீக்கப்பட்டது. 'மிகவும் கண்டிப்பு வேண்டாம்' என்று பிரதம செய்தித் தணிக்கை அதிகாரிக்கு ஜனாதிபதி தெரிவித்ததாகக் கூறப்படும் அதே வேளை, இது ஒரு தற்காலிக நடவடிக்கையே என்று தகவல் அமைச்சர் தர்மசிறி சேனநாயக்க தெரிவித்திருக்கிறார்.


வீதித் தடைகள் அதிகரிக்கின்றன. வாகனங்கள், குறிப்பாக லொறிகள், மோட்டார் சைக்கிள்கள், ஆட்டோ டாக்ஸிகள் மீதான சோதனை பரவலாக நடைபெறுகிறது. தெளிவற்ற சாளர கண்ணாடிகளைக் கொண்ட வாகனச் சொந்தக்காரர்களுக்கு அபராதம் விதிக்கப்படுகிறது. அலுவலகங்களில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் கடமையிலீடுபடுத்தப் பட்டுள்ளனர். வங்கி, சந்தைகளில் வாடிக் கையாளர்களின் கை உடமைகள் சோதிக்கப்படுகின்றன.

செப்டம்பர் நடுப்பகுதியில் விமானப்படை விமானமொன்று 75 பேருடன் வானில் சிதறுண்டதையடுத்து, இரத்மலானை விமான நிலையத்திலிருந்து சகல தனியார் விமான சேவைகளும் ரத்துச் செய்யப்பட்டுள்ளன. இதுகுறித்த தனியாரின் எதிர்ப்பைப் பொருட்படுத்தாத பாதுகாப்பு அமைச்சு, விமான கடத்தல்காரர் எவரும் விமானமொன்றை அலரி மாளிகை அல்லது மற்றும் கேந்திர இலக்குகள் மேலாக பறக்கும்படி நிர்ப்பந்திக்கலாம் என்பதில் மிகுந்த எச்சரிக்கையாக உள்ளது.

பெரும்பான்மை சிங்கள சமூகத்தின் பொதுவான அபிப்பிராயம், புலிகளை நலிவடையச் செய்து, பின்னர் ஒரு சமாதான திட்டத்துக்கு தள்ளுவதான ஒரு நடவடிக்கைக்கு ஆதரவாக இருப்பதாகவே தெரிகிறது.

தமிழர்களுக்கு நியாயமான மனத்தாங்கல் உண்டு என்பதை ஏற்றுக்கொண்ட ஒரேயொரு தலைவரான சந்திரிகா வெளியிட்ட அதிகார பரவலாக்கலுக்கான திட்டம் பெரும் விமர்சனத்துக்கு உள்ளாகியிருக்கிறது. குறிப்பாக, பௌத்த பிக்குகள் அதனை எதிர்க்கிறார்கள். ❑

# சுபயாத்ரா




உங்கள் விமானப் பயணங்களை
ஒஸ்லோவில் இலகுவாக்க
ஒரு தமிழர் நிறுவனம்...

அதன் தனித்துவம்...
நியாயமான கட்டணம்...
இலட்சியம்...
நம்பிக்கையான சேவை.

சுபயாத்ரா

**SHUBHAYATRA REISEBYRÅ**

GRØNLAND T-BANESTASJON, 0188 OSLO

TLF: 22 17 26 70, FAX: 22 17 26 71

# அதிகாரப் பரவலாக்கல் பற்றிய அரசியலமைப்பு சீர்திருத்தத்துக்கான முன்மொழிவுகள்

## முகவுரை

இம் முன்மொழிவுகள் பின்வரும் நெறிகளை ஆதாரமாகக்கொண்டு ஐக்கிய, இறைமை கொண்ட ஓர் இலங்கைக் குடியரசின் வரையறைக்குள் பல்மொழி பேசும் மக்கள் வாழும் சமுதாயத்தின் அரசியலமைப்பு அடிப்படையினை மீள்வரையறை செய்தலை நோக்கமாகக் கொண்டுள்ளன:

(அ) சகல சமூகங்களும் பாதுகாப்புடனும், பந்தோபஸ்துடனும் வாழக்கூடியதும், அவைகளின் கௌரவத்தினை மதிக்கக்கூடியதும், சமமாக மதிக்கப்படுதல் பொதுவாழ்வின் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு முறையாக விளங்கக்கூடியதுமான இலங்கை பற்றிய தொலைநோக்கினை முன்னேற்றுவித்தல்;

(ஆ) சகல சமூகங்களினதும் தனித்துவத்தைப் பாதுகாத்தலும், அந்தத் தனித்துவத்தை மேம்படுத்துவதற்கான சூழ்நிலைகளை உருவாக்குதலும், இதில் அவர்களது சொந்தக் கலாசாரத்தைத் துய்ப்பதற்கும், தமது சொந்த மதத்தில் பற்றுறுதி கொள்வதற்கும், வழிபடுவதற்கும், தமது சொந்த மொழியைப் பேணி வளர்ப்பதற்கும் மேம்படுத்துவதற்குமான உரிமையும் தாம் விரும்பிய தேசிய மொழியில் அரசுடன் அலுவல்களைக் கையாளுவதற்கான வாய்ப்பினையும் உறுதிசெய்தல்;

(இ) அனைத்து ஆட்களும் எவ்வித ஓரங்காட்டலும் இன்றி, சட்டத்தின்முன் சமமாக தமது மனித உரிமைகளையும் அடிப்படைச் சுதந்திரங்களையும் பூரணமாகவும், வினைத்திறனுடனும் பிரயோகிப்பதை உறுதிப்படுத்தல்;

(ஈ) சிங்கள மொழியையும், தமிழ் மொழியையும் அரசகரும மொழிகளாக அங்கீகரித்தலும் ஆங்கில மொழியை தொடர்பு மொழியாக அங்கீகரித்தலும்;

(உ) நாணயத்தன்மை, தெளிவுபாடு அத்துடன் உள்முகவாரியாக ஒருமுகப்படுத்தப்பட்ட மற்றும் ஒன்றித்த பெறுமதி முறைமை என்பவற்றை அடிப்படையாகக்கொண்டதும், வினைத்திறமையான அமுலாக்கத்தை இயலச் செய்யக்கூடியதும், மத்திய பிராந்திய பிணக்குகளை நீதியாகத் தீர்த்து வைப்பதற்கான கட்டமைப்புக்களை உள்ளடக்குவதுமான பிராந்தியங்களுக்கு அதிகாரங்களைப் பரவலாக்குவதற்கான வினைத்திறன் மிக்க அரசியலமைப்புக் கூட்டுக்கோப்பு ஒன்றினை ஏற்பாடு செய்தல்;

(ஊ) தேசிய அல்லது மாகாண அல்லது உள்ளூர் மட்டம் எதுவாக இருந்தாலும், தேசிய வாழ்வில் சகல சமூகங்களும் முழுமையாகப் பங்குபற்றி, அதன்மூலம் பிராந்தியங்களும் அவற்றில் வாழும் சமுதாயத்தினரும் நிலையான பல்மொழி பேசும் சனநாயக முறைமையொன்றின் ஆக்கபூர்வ பங்காளிகளாக விளங்குவதை உறுதிப்படுத்தல்.

## 1. அதிகாரப் பரவலாக்கல் அமைப்பு முறை

### 1.1. பரவலாக்கல் கூறு

*அரசியலமைப்புக்கான புதியவோர் அட்டவணைமூலம் இனங்காணப்படும் ஒவ்வொரு மாகாணத்திற்கும் ஒரு பிராந்திய சபை தாபிக்கப்படும். பிராந்தியங்களுள் ஒன்று தற்போதுள்ள வடக்கு கிழக்கு மாகாணத்தின் ஏலவேயுள்ள எல்லைகளை மீள எல்லை குறிப்பதன்மூலம் அமைக்கப்படும்போது சிங்களவர், தமிழர், முஸ்லிம்களின் அக்கறைகள் பற்றி இணக்கம் காணும் நோக்குடனும் முழுமையான கலந்தாராய்வு இடம்பெறும்.*

### 1.2. பிராந்திய சபைகள்

*ஒரு பிராந்திய சபையானது சட்டத்தினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையான உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும். ஒரு பிராந்திய சபை, முன்னதாகவே கலைக்கப்பட்டாலொழிய, ஐந்தாண்டுக் காலப்பகுதிக்குத் தொடர்ந்திருக்கும். ஒவ்வொரு சபைக்கும் சபாநாயகர் ஒருவரும் பிரதிச் சபாநாயகர் ஒருவரும் இருப்பர்.*

**1.2.1.** *பிராந்தியத்தின் சட்டவாக்கற் தத்துவம் பிராந்திய சபைக்கு உரித்தாக்கப்பட்டதாக இருக்கும். பிராந்திய நிரலில் தரப்பட்ட ஏதேனும் விடயம் தொடர்பில் ஒவ்வொரு பிராந்தியமும் அப்பிராந்தியத்துக்கு ஏற்புடைத்தான சட்டங்களை ஆக்கலாம். பிராந்திய சபை ஒதுக்கிய நிரலின்மீது எவ்வித நியாயாதிக்கத்தையும் கொண்டிருக்கமாட்டாது.*

### 1.3. ஆளுநர்

*பிராந்திய சபையொன்று எந்தப் பிராந்தியத்துக்கெனத் தாபிக்கப்பட்டதோ அந்தப் பிராந்தியம் ஒவ்வொன்றுக்கும் ஆளுநர் ஒருவர் இருத்தல் வேண்டும். இவர் பிராந்தியத்துக்கான பிரதான அமைச்சரின் ஒருமைப்பாட்டுடன் சனாதிபதியினால் நியமிக்கப்படுவார்.*

**1.3.1.** ஆளுநர்-

*(அ) பதவியிலிருந்து விலகியதன்மீது;*

*(ஆ) பிராந்திய சபையின் மூன்றிலிரண்டு பங்கு பெரும்பான்மையினர் நம்பிக்கையில்லாத் தீர்மானமொன்றை நிறைவேற்றுவதன்மீது;*

*(இ) சனாதிபதியால் அகற்றப்படுவதன்மீது; தமது பதவியைத் துறந்தவராவார்.*

**1.3.2.** ஆளுநர்,

*முதலமைச்சரின் ஆலோசனையின்மீது பிராந்திய சபையைக் கூட்டலாம், கலைக்கலாம் அத்துடன் ஒத்திவைக்கலாம்.*

### 1.4. முதலமைச்சரும், அமைச்சரவையும்

*ஆளுநர், பிராந்திய சபையில் பெரும்பான்மையினரின் ஆதரவைப் பெற்ற ஆளைப் பிராந்திய நிருவாகத்தை அமைக்குமாறு கேட்டுக்கொள்ளுவார்.*

**1.4.1.** *முதலமைச்சர் பிராந்திய சபையின் நம்பிக்கையை அனுபவிக்கும் காலம் வரைக்கும் பதவியிலிருந்து அகற்றப்பட*

முடியாது.

1.4.2. பிராந்தியத்திலுள்ள நிறைவேற்றுத் தத்துவம், முதலமைச்சரின் ஆலோசனையின்மீது ஆளுநரால் நியமிக்கப்படும் அமைச்சரவைக்கு உரித்தாக்கப்பட்டிருக்கும். அமைச்சரவையினரும் முதலமைச்சரும் பிராந்திய சபைக்குக் கூட்டாகப் பொறுப்புடையவர்களாக இருப்பர்.

**1.5. தலைநகர ஆள்புலம்**

கொழும்பு மற்றும் சிறீ ஜயவர்த்தனபுர - கோட்டே ஆகிய நகரங்களைக் கொண்டுள்ள ஆள்புலம் மேற்குப் பிராந்தியத்துக்கென அமைக்கப்படும் பிராந்திய சபையின் நியாயாதிக்கத்திலிருந்து விலக்கி விடப்பட்டதாக இருக்கும். இவை மத்திய அரசு பொருத்தமானதெனக் கருதும் அத்தகைய முறையில் மத்திய அரசினால் நேரடியாக நிருவகிக்கப்படும்.

**2. நிதி**

2.1. தேசிய நிதி ஆணைக்குழுவொன்று அமைக்கப்படும். இது சமப்படுத்திய பிராந்திய அபிவிருத்தியை எய்தும் குறிக்கோளை மனதிற்கொண்டு, பிராந்தியத்துக்கு மானியங்களைக் குறித்தொதுக்குவதற்குப் பொறுப்புடையதாக இருக்கும்.

2.2 குறித்த சில குறித்துரைக்கப்பட்ட துறைகளில் பிராந்திய சபைகள் வரியிறுப்பனவு செய்யும் தத்துவமுடையனவாக இருக்கும்; அரசியலமைப்பு ஏனைய அரசிறை பங்கிடும் ஒழுங்குகளைத் தேவைப்படுத்துதல் வேண்டும்.

2.3. பிராந்திய சபைகள் கடன் எடுப்பதற்கும் தமது சொந்த நிதி நிறுவனங்களைத் தாபிப்பதற்கும் தத்துவமுடையனவாக இருக்கும். வித்தித்துரைக்கப்பட்ட எல்லைக்கும் கூடுதலாக சர்வதேச ரீதியாகக் கடன் பெறுவதற்கு மத்திய அரசின் ஒருப்பாடு தேவை.

2.4. பிராந்திய சபைகள் வெளிநாட்டு நேரடி முதலீட்டையும் சர்வதேச மானியங்கள் மற்றும் அபிவிருத்தி உதவியையும் மத்திய அரசினால் குறித்துக் கூறப்படும் அத்தகைய நிபந்தனைகளுக்குட்பட்டு பெற்றுக் கொள்ளலாம்.

**3. சட்டமும் ஒழுங்கும்**

3.1. பிராந்தியத்தின் ஆளுநரின் ஆலோசனையுடன் முதலமைச்சரினால் நியமிக்கப்பட்ட பிராந்திய பொலிஸ் ஆணையாளரின் தலைமையில் பிராந்திய பொலிஸ் சேவையொன்று இருக்கும். பிராந்திய பொலிஸ் ஆணையாளர் இயைபான முதலமைச்சருக்குப் பொறுப்புடையவராக இருப்பார் என்பதுடன், அவரின் கட்டுப்பாட்டில் பணியாற்றுவார். பிராந்திய பொலிஸ் சேவை ஆட்களுக்கும் ஆதனத்துக்கும் எதிரான சகல தவறுகளையும் புலனாய்வு செய்யும்.

3.2. அரசுக்கெதிரான தவறுகள், தேசிய பாதுகாப்புக்கான அச்சுறுத்தல்கள், தேர்தல்கள் தொடர்பான தவறுகள், மாகாணங்களுக்கிடையிலான குற்றங்கள் மற்றும் சர்வதேச குற்றங்கள் என்பவற்றைப் புலனாய்வு செய்வதற்குப் பொறுப்புடையதாக தேசிய பொலிஸ் சேவையொன்று இருக்கும். தேசிய பொலிசுக்கு தேசிய பொலிஸ் ஆணையாளர் தலைவராக இருப்பார். இவர் மத்திய அரசுக்குப் பொறுப்புடைய்வராக இருப்பார்.

3.3 பிராந்திய பொலிஸ் சேவை உறுப்பினர்களைச் சேர்த்தல், பிராந்தியத்துக்குள்ளாக இடமாற்றுதல், சேவையிலிருந்து நீக்குதல் மற்றும் அவர்களின் ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு என்பன பிராந்திய பொலிஸ் ஆணைக்குழுவின் பொறுப்பாக இருக்கும்.

3.4. தேசிய பொலிஸ் ஆணைக்குழுவொன்று இருத்தல் வேண்டும். பிராந்திய பொலிஸ் ஆணைக்குழுவின் ஆலோசனையுடன் பொலிஸ் அலுவலர்களை ஒரு பிராந்தியத்திலிருந்து மற்றொரு பிராந்தியத்துக்கு இடமாற்றம் செய்வதும் அதன் பணிகளுள் அடங்கும்.

3.5. தேசிய பொலிஸ் ஆணைக்குழுவும் பிராந்திய பொலிஸ் ஆணைக்குழுவும் அரசியலமைப்புப் பேரவையால் நியமிக்கப்படுதல் வேண்டும். பிராந்திய பொலிஸ் ஆணைக் குழுவின் நியமனத்தில் அரசியலமைப்புப் பேரவையானது சம்பந்தப்பட்ட பிராந்தியத்துக்கான முதலமைச்சரின் கலந்தாலோசனையுடன் செயலாற்றும்.

**4. காணியும் காணிக் குடியேற்றமும்**

4.1. காணி ஒரு பரவலாக்கப்பட்ட விடயமாகும். ஒரு பிராந்தியத்துக்குள்ளாக இருக்கும் அரச காணி பிராந்திய சபைகளுக்கு உரித்தாக்கப்பட்டனவாக இருக்கும். ஒதுக்கிய விடயமொன்று தொடர்பாக மத்திய அரசின் நோக்கங்களுக்குத் தேவைப்படும் ஒரு பிராந்தியத்துக்குள்ளாக இருக்கும் அரச காணி, சட்டத்தினால் தாபிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நடவடிக்கை முறைகளுக்கிணங்க இயைபான பிராந்திய சபையின் ஆலோசனையுடன் மத்திய அரசினால் பயன்படுத்தப்படலாம்.

4.2. எதிர்காலக் காணிக் குடியேற்றத் திட்டங்களில், முதலில் மாவட்டத்தில் உள்ள ஆட்களுக்கும் பின்னர் பிராந்தியத்திலுள்ள ஆட்களுக்கும் முன்னுரிமை அளிக்கப்படும்.

**5. கல்வி**

5.1. கல்வியும் உயர் கல்வியும் பிராந்திய நிரலில் உள்ளடக்கப்பட்ட பரவலாக்கப்பட்ட விடயங்களாக இருக்கும்.

5.2. குறித்த சில குறித்துரைக்கப்பட்ட பாடசாலைகளும் பல்கலைக் கழகங்களும் மத்திய அரசினால் நிருவகிக்கப்படும் 'தேசிய' நிறுவனங்களாக வெளிப்படுத்தப்படும்.

5.3. தேசிய பாடசாலைகளில் உள்ள ஆசிரியர்கள் தவிர்ந்த ஏனைய ஆசிரியர்களின் ஆட்சேர்ப்பு, இடமாற்றம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு என்பன பிராந்திய சபையின் பொறுப்பாக இருக்கும்.

5.4. ஆசிரியர்கள் தேசிய பாடசாலைகளுக்காக அல்லது பிராந்திய பாடசாலைகளுக்காக ஆட்சேர்க்கப்படவுள்ளார்கள் என்பதைப் பொறுத்து, ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிப்பதானது மத்திய அரசினதும் பிராந்திய சபைகளினதும் பொறுப்பாக இருக்கும்.

5.5. பிராந்திய பாடசாலைகளில் உள்ள பாடவிதான அபிவிருத்தி பிராந்திய சபைகளின் பொறுப்பாக இருக்கும். ஆகக் குறைந்த தராதரங்கள் மத்திய அரசால் விதிக்கப்படும்.

5.6. மத்திய அரசினதும் பிராந்தியங்களினதும் பிரதிநிதிகளைக் கொண்ட தேசிய கல்வி ஆணைக்குழுவொன்று பின்வரும் பணிகளுக்குப் பொறுப்பாக்கப்பட்டதாக இருக்கும்:

(அ) பிராந்திய முதலமைச்சர்களின் கலந்தாலோசனையுடன் 'தேசிய' பாடசாலைகளையும் பல்கலைக் கழகங்களையும் கண்டறிதலும் அத்தகைய தேசிய பாடசாலைகளுக்கும் பல்கலைக் கழகங்களுக்கும் அநுமதி பெறுதற்கான தகைமைகளை விதந்துரைத்தலும்;

(ஆ) ஆசிரியர்களின் பயிற்சி, பரீட்சை, பாடவிதானம் மற்றும் தொழிலுக்கமர்த்தல் தொடர்பிலான ஆகக்குறைந்த தராதரங்களை வகுத்தல்.

**6. நீதித்துறை நிர்வாகம்**

6.1. ஒவ்வொரு பிராந்தியத்திலும் ஒரு மேல் நீதிமன்றம் இருத்தல் வேண்டும். மேல் நீதிமன்றமானது பிராந்தியத்துக்

குள்ளாக குற்றவியல், மேன்முறையீட்டு மற்றும் எழுத்தாணை நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கும்.

6.2. பிராந்தியத்தின் முதலமைச்சரின் கலந்தாலோசனையுடன் அரசியலமைப்புப் பேரவையினால் நியமிக்கப்படும் பிராந்திய நீதிச் சேவை ஆணைக்குழு மேல் நீதிமன்றத்தின் முதன்மை நீதிபதியையும் முதுமுறை வரிசையில் அடுத்துவரும் இரு மேல் நீதிமன்ற நீதிபதிகளையும் கொண்டதாக இருக்கும்.

6.3. பிராந்திய நீதிச் சேவை ஆணைக்குழு பிராந்தியத்துக்குள்ளாக பிராந்திய மேல் நீதிமன்ற நீதிபதிகளையும் சிறிய நிதித்துறை நீதிபதிகளையும் நியமிப்பதற்குப் பொறுப்புடையதாக இருக்கும். பிராந்திய நீதிச்சேவை ஆணைக்குழு, நீதிபதிகளை இடமாற்றுதல் தொடர்பாக, தேசிய நீதிச்சேவை ஆணைக்குழுவைக் கலந்தாலோசிக்கும்.

6.4. ஆளுநர் பிராந்தியச் சட்டத்துறைத் தலைமை அதிபதி ஒருவரை நியமிப்பார். இவர் பிராந்திய சபையினால் நிறைவேற்றப்படும் சட்டங்களின் அரசியலமைப்புக்கு முரணாகாத தன்மை பற்றி ஆளுநருக்கு ஆலோசனை அளிப்பார். சட்டமொன்று அரசியலமைப்புக்கு முரணானதாகக் காணப்பட்டால், பிராந்திய சட்டத்துறைத் தலைமை அதிபதி, ஆளுநருடனான ஆலோசனையின் பின்னர் உயர் நீதிமன்றத்தின் அல்லது மத்திய அரசுக்கும் பிராந்தியத்துக்கும் இடையே பிணக்குகளைத் தீர்த்துவைப்பதற்கெனச் சிறப்பாக நிறுவப்பட்ட வேறு ஏதேனும் நியாய சபையின் முன்னர் வழக்குத் தொடுப்பார்.

7. பகிரங்க சேவை

7.1. பிராந்திய சபைகளினால் தொழிலுக்கமர்த்தப்படும் அல்லது மாற்றச் சேவைக்கு அழைக்கப்படும் எல்லா ஆட்களினதும் ஆட்சேர்ப்பு, ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு மற்றும் அவர்களைப் பதவியிலிருந்து நீக்குதல் என்பவற்றுக்குப் பொறுப்பாக இருப்பதற்கென (இயைபான முதலமைச்சரின் ஆலோசனையுடன் அரசியலமைப்புப் பேரவையினால் நியமிக்கப்படும்) பிராந்திய பகிரங்க சேவை ஆணைக்குழு ஒன்றிருக்கும்.

7.2. பிராந்தியத்தின் வெளியே பிராந்திய பகிரங்க சேவை ஆணைக்குழு அத்தகைய எல்லா ஆட்களினதும் இடமாற்றத்தைச் செய்யும்போது (அரசியலமைப்புப் பேரவையினால் நியமிக்கப்பட்ட) தேசிய பகிரங்க சேவை ஆணைக்குழுவைக் கலந்தாலோசிக்கும்.

8. அதிகாரப் பரவலாக்கல் ஆணைக்குழு

மத்திய அரசுக்கும் பிராந்தியத்துக்குமிடையே ஏற்படும் பிணக்குகளை அல்லது பிராந்தியங்களுக்கிடையிலான பிணக்குகளைத் தீர்த்துவைப்பதற்கென அரசியலமைப்புப் பேரவையினால் நியமிக்கப்பட்டதற்கென அதிகாரப் பரவலாக்கல் மீதான நிரந்தர ஆணைக்குழுவொன்று இருத்தல் வேண்டும். ஆணைக்குழு மத்தியஸ்தம் மற்றும் நீதித் தீர்ப்பளித்தல் தொடர்பான தத்துவங்களைக் கொண்டிருக்கும்.

9.1. (அ) ஐக்கிய இறைமை கொண்ட இலங்கைக் குடியரசு பிராந்தியங்களின் ஒன்றியமாக இருப்பதற்கும் (ஆ) குடியரசின் ஆள்புலம், முதலாவது அட்டவணையில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள பிராந்தியங்களையும் அதன் ஆள்புல நீர்ப் பரப்புக்களையும் கொண்டிருப்பதற்கும் (இ) மக்களின் சட்டமாக்கல் தத்துவம் இதனகத்தின் பின்னர் ஏற்பாடு செய்யப்படும் அளவுக்கு பாராளுமன்றத்தினாலும், பிராந்திய சபைகளினாலும் மக்கள் தீர்ப்பொன்றில் மக்களினாலும் பிரயோகிக்கப்படுவதற்கும் (ஈ) மக்களின் நிறைவேற்றுத் தத்துவம் இதனகத்தின் பின்னர் ஏற்பாடு செய்யப்படும் அளவுக்கு பிரதம மந்திரியினதும், அமைச்சரவையினதும் ஆலோசனையின்மீது செயலாற்றும் குடியரசின் சனாதிபதியினாலும் அந்தந்த முதல் அமைச்சர்களினதும் பிராந்திய அமைச்சரவைகளினதும் ஆலோசனைமீது செயலாற்றும் ஆளுநர்களினாலும் பிரயோகிக்கப்படுவதற்கும்-அரசியலமைப்பு ஏற்பாடு செய்யும்.

9.2. தற்போதுள்ள அரசியலமைப்பின் உறுப்புரை 76 நீக்கப்படும்.

10, பரவலாக்கலின் பொருள்

10.1. பிராந்திய சபைகள், அவற்றுக்கென பரவலாக்கம் செய்யப்பட்ட ஆட்சி எல்லையினுள் புறநீங்கலாக சட்டவாக்கத் தத்துவத்தையும், நிறைவேற்றுத் தத்துவத்தையும் பிரயோகிக்கும் விடயங்களும், பணிகளும் மத்திய அரசுக்கும், பிராந்தியங்களுக்கும் இடையில் பின்னிணைப்பில் உள்ளவாறு பகிர்ந்தளிக்கப்படும்.

## பின்னிணைப்பு

### நிரல்கள்:

(அ) பிராந்திய நிரல்

01. சுகாதாரமும், சுதேச வைத்தியமும். 02. தேசிய பாடசாலைகள், தேசிய பல்கலைக் கழகங்கள் அத்துடன் ஆசிரியர் பயிற்சிக்கும், பரீட்சைக்கும், பாடவிதானத் திற்கும், தகைமைகளுக்கும் ஆன ஆகக்குறைந்த தராதரங்களை அமைத்தல் ஆகியன நீங்கலாக கல்வியும், கல்விச் சேவைகளும். 03. கமத்தொழிலும், கமநலச் சேவைகளும். 04. பிராந்தியத்தினுள் நீர்ப்பாசனம். 05. விலங்கு வேளாண்மை. 06.கடற்றொழில். 07. ஒரு பிராந்தியத்தினுள் வனவியல், சூழல் பாதுகாப்பு. 08. கைத்தொழில்களும், கைத்தொழில் அபிவிருத்தியும். 09. சக்தி. 10. போக்குவரத்து. 11. சிறிய துறை மேடைகளும், துறைமுகங்களும். 12. வீதிகளும், நீர் மார்க்கங்களும். 13. வீடமைப்பு, நிருமாணம். 14. நகர, திட்டமிடல். 15. கிராமிய அபிவிருத்தி. 16. உள்ளூராட்சி. 17. கூட்டுறவுகள். 18. பிராந்தியத்தினுள் உணவு விநியோகமும், பகிர்ந்தளிப்பும். 19. உல்லாசப் பிரயாணத்தை மேம்படுத்தல். 20. பகிரங்க அரங்காட்டல்கள் உட்பட, ஒலிபரப்பும் செய்தித் தொடர்பு சாதனமும். 22. நிவாரணம், புனர் வாழ்வு, புனரமைப்பு. 23. சமூகப் பாதுகாப்பு. 24. அரச காணியும், அதன் பராதீனமும், அல்லது கையுதிர்ப்பும் (ஒதுக்கப்பட்ட ஒரு விடயப் பொருள் தொடர்பில் மத்திய அரசின் நோக்கங்களுக்குத் தேவைப்படும், ஒரு பிராந்தியத்திற்குட்பட்ட அரச காணி, இயைபான பிராந்திய சபையின் கலந்தாலோசனையுடனும், சட்டத்தினால் தாபிக்கப்படக்கூடிய அத்தகைய நடவடிக்கை முறைகளுக்கு இணங்கவும் மத்திய அரசினால் பயன்படுத்தப்படலாம்). 25. பிராந்திய பொலிஸ், சட்டம், ஒழுங்கமைதி. 26. சிறுவர் நன்னடத்தை நிறுவனங்களையும் சீர்திருத்த நிறுவனங்களையும் நிருவகித்தல். 27. பிராந்திய பகிரங்க சேவை. 28. விளையாட்டுக்கள். 29. பிராந்தியத்தினுள் கூட்டிணைக்கப்படாத கழகங்களையும் சங்கங்களையும் ஒழுங்குபடுத்தல். 30. பிராந்தியக் கடன்கள். 31. உண்ணாட்டு, சர்வதேச கடன்வாங்குதல் (குறித்துரைக்கப்பட்ட ஓர் எல்லைக்கு மேற்பட்ட சர்வதேச கடன்வாங்கலுக்கு மத்திய அரசின் ஒருப்பாடு தேவைப்படும்) 32. பிராந்தியத்திற்கான நேரடி வெளிநாட்டு முதலீட்டையும், சர்வதேச மானியங்களையும், அபிவிருத்திசார் உதவியையும் ஒழுங்குபடுத்தலும், மேம்படுத்தலும். 33. பிராந்திய நீதி நிறுவனங்களும், கடன் வழங்கு நிறுவனங்களும். 34. உற்பத்தி தீர்வைகள் குறித்துரைக்கப்பட வேண்டியன. 35. குறித்துரைக்கப்பட வேண்டிய அளவுக்கு மொத்த அல்லது சில்லறை விற்பனை மீதான மொத்த விற்பனை வரவு வரிகள்.

36. சூதாட்ட வரிகளும், பரிசுப் போட்டிகள் அத்துடன் தேசிய லொத்தர்கள் தவிர்ந்த லொத்தர்கள் மீதான வரிகளும். 37. மோட்டார் வாகன உரிமைக் கட்டணங்கள். 38. காணி, மோட்டார் கார்கள் போன்ற ஆதனங்களின் கைமாற்றம் மீதான முத்திரைத் தீர்வைகள். 39. நீதிமன்றங்களினால் விதிக்கப்படும் குற்றப்பணங்கள். 40. நீதிமன்றங்களில் சமர்ப்பிக்கப்படும் ஆவணங்கள் மீதான முத்திரைக் கட்டணங்கள் உட்பட, நீதிமன்றக் கட்டணங்கள். 41. அரசிறைகளை மதிப்பீடு செய்தலும் சேகரித்தலும், அர சிறை நோக்கங்களுக்காக் காணிப்பதிவேடுகளைப் பேணுதலும் உட்பட காணி அரசிறை. 42. கனிப்பொருள் உரிமைகள் மீதான வரிகள்.43. நிரலில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் கருமங்கள் தொடர்பில் சட்டங்களுக்கு எதிரான தவறுகள். 44. பிராந்திய நிரலில் உள்ள விடயங்கள் சம்பந்தமான குற்றப் பணங்கள். 45. பிராந்திய மட்டத்தில் திட்டமிடுதல்.

(ஆ) ஒதுக்கு நிரல்

(மத்திய அரசு நிரல்)

01. பாதுகாப்பு, தேசிய பாதுகாப்பு, தேசிய பொலிஸ், பாதுகாப்புப் படைகள். 02. குடிவரவு, குடியகல்வு, பிரஜாவுரிமை. 03. வெளி நாட்டு அலுவல்கள். 04. தேசிய குடிசன மதிப்பீட்டு, புள்ளி விபரங்கள்.05. தேசிய திட்டமிடுதல். 06. நாணயம், வெளி நாட்டுச் செலாவணி, சருவதேச பொருளாதார உறவுகள், பணக் கொள்கை.07. இலங்கை அரசாங்கத்தின் பகிரங்க கடன். 08. இலங்கை அரசாங்கத்திற்கு வெளி நாட்டு கடன்கள். 09. வங்கித் தொழில் நிறு வனங்களையும், ஏனைய நிதி நிறுவனங் களையும் ஒழுங்குபடுத்துதல். 10. காப்புறுதி. 11. பங்குத் தொகுதிப் பரிவர்த்தனை. 12. இலங்கை அரசாங்கத்தின் கணக்காய்வு. 13. தனியாட்களினதும், கம்பெனிகளினதும், கூட்டுத்தாபனங் களினதும் வருமானம், மூலதனம், செல்வம் ஆகியன மீதான வரிகள். 14. இறக்குமதி மற்றும் ஏற்றமதித் தீர்வைகள் உட்பட, சுங்கத் தீர்வைகள், மற்றும் (பிராந்தியங்களுக்குப் பரவலாக்கக்கூடிய வாறான அத்தகைய உற்பத்தித் தீர்வைகள் நீங்கலாக) உற்பத்தித் தீர்வைகள். 15. (பிராந்தியங்களுக்குப் பரவலாக்கப்பட்ட அத்தகைய வரிகளும் தீர்வைகளும் நீங்கலாக) மொத்த விற்பனை வரவு வரிகளும், முத்திரைத் தீர்வைகளும், பண்டங்கள் மற்றும் சேவைகள் மீதான வரிகளும்.16. இலங்கை அரசாங்கத்தினால் அல்லது திரட்டு நிதியத்திலிருந்து கொடுபடற்பாலனவான ஓய்வூதியங்கள்.17. அணுசக்தி.18. தேசிய மின்வலுப் பராமரிப்பும், முகாமைத்துவமும்.19. கனிப்பொருட்களும், சுரங்கங்களும் (எண்ணெய் கிணறுகள், கனிப்பொருள் மூலவளங்கள், பெற்றோலியம், மற்றும் பெற்றோலிய உற்பத்திப் பொருட்களை ஒழுங்குபடுத்தலும் அபிவிருத்தி செய்தலும்) 20. தேசிய ஆறுகள். 21. விமான நிலையங்கள், துறைமுகங்கள், சருவதேச போக்குவரத்துடனான துறை மேடைகள். 22. பிராந்தியங்களுக்கிடையிலான போக்குவரத்தும், புகையிரத சேவைகளும். 23. சிவில் வான் போக்குவரத்து. 24. பிராந்தியங்களுக்கிடையிலான பெருந்தெருக்கள். 25. கப்பற்றொழில் மற்றும் கப்பற் போக்குவரத்து, வரலாற்று நீர்ப்பரப்புகள் மற்றும் ஆள்புல நீர்ப்பரப்புகள் (புறநீங்கலான பொருளாதார வலயம் மற்றும் கண்டமேடு). 26. (உள்ளூரதிகார சபைகளுக்கான தேர்தல்கள் தவிர்ந்த) தேர்தல்கள். 27. தபால், தொலைத் தொடர்புகள்.28. தேசிய பகிரங்க சேவை, தேசிய பகிரங்க சேவை ஆணைக் குழு.29. தேசிய சுகாதார நிருவாகம் (ஏலவேயுள்ள விசேட நோக்க வைத்திய சாலைகளும், தேசிய பல்கலைக் கழகங்களுடன் இணைந்த போதனா வைத்தியசாலைகளும், சுகாதாரம் சம்பந் தமான பயிற்சி, கல்வி, ஆராய்ச்சி, தேசிய சுகாதார தராதரங்களை அபிவிருத்தி செய்தல், விசேட நிகழ்ச்சித் திட்டங்கள் அனைத்தையும் நிருவகித்தல் உட்பட).30. ஔடதங்கள், நஞ்சுகள், போதைப் பொருட்கள்.31. நீதி நிருவாகம்.32. தேசிய பல்கலைக் கழகங்கள்.33. உயர் தொழில், தான்புரி தொழில் பயிற்சி சம்பந்தமாகத் தேசிய தராதரங்கள்.34. கமத்தொழில் விடயப்பரப்பில் ஆராய்ச்சி, அபிவிருத்தி, பயிற்சி தொடர்பிலான தேசிய தராதரங்கள். 35. பிராந்தியங்களுக்கிடையிலான நீர்ப்பாசனத் திட்டங்கள். 36. தூண்டில் நீர்ப் பரப்புக்கு அப்பால் மீன் பிடித்தல். 37.கல்வித் துறையில் மத்திய கொள்கை ஆராய்ச்சி நிறுவனங்களின் முகாமைத்துவம், உதாரணம்: தேசிய கல்வி நிறுவகம், தேசிய பாடசாலைகளின் முகாமைத்துவமும், மேற்பார்வையும், தேசிய பகிரங்க சான்றிதழ் வழங்கும் பரீட்சைகளை நடாத்தல், பயிற்சி, பாடவிதானம், ஆசிரியர் தகைமைகளுக்கு ஆகக் குறைந்த தராதரங்களை விதித்தல்.38. மகவேற்பு.39. தேசிய கைத்தொழில் ஆராய்ச்சியும் பயிற்சியும்.40. தர நியமங்களை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துதல். 41. வெளிநாட்டு வியாபாரம், மாகாணங்களுக்கிடையிலான வியாபாரமும் வர்த்தகமும். 42. ஆக்கவுரிமைகள், புதிய கண்டுபிடிப்புகள், வடிவமைப்புகள், பதிப்புரிமைகள், வியாபாரக் குறிகள், வணிகக் குறிகள். 43. ஏகபோக உரிமைகளும், ஒன்றிணைவுகளும். 44. பிராந்தியங்களுக்கிடையிலான உணவுப் பகிர்ந்தளிப்பு. 45. மத்திய அரசாங்க ஒலிபரப்பு, தொலைக்காட்சி நிறுவனங்கள் உள்ளிட்ட தேசிய செய்தித் தொடர்புச் சாதனங்கள். 46. தேசிய சுவடிக் கூடங்களும், நூதனசாலைகளும், தேசிய முக்கியத்துவம் வாய்ந்தனவென சட்டத்தினால் வெளிப்படுத்தப்பட்ட புதை பொருள் ஆராய்ச்சி அமைவிடங்களும். 47. தேசிய சுற்றாடலும் உல்லாசப் பயணம் மீதான தேசிய கொள்கையும்.48. விசேடித்த தேசிய விடமைப்பு நிகழ்ச்சித் திட்டங்கள். 49. விசேடித்த தேசிய வறுமை ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டங்கள்.50. இளைஞர் மற்றும் மகளிர் அலுவல்கள். 51. பௌத்தமதம் .52. தேசிய விளையாட்டுக்கள் நிருவாக மற்றும் உள்ளகக் கட்ட மைப்பு அபிவிருத்தி. 53. தேசிய (இயற்கை மற்றும் சூழல்) அனர்த்தங்கள் மற்றும் கொள்ளை நோய்கள் ஏற்படும் சந்தர்ப்பங்களில் தலையிடுதல். 54. தொழில் பிரமாணங்களும் தரங்களும். 55. ஒதுக்கிய நிரலில் கூறப்பட்ட எவையேனும் கருமங்களின் நோக்கத்துக்கான நில அளவைகள். 56. இந்நிரலில் உள்ள கருமங்கள் எது தொடர்பிலுமான சட்டங்களுக்கெதிரான தவறுகள். 57. ஏதேனும் நீதிமன்றத்தில் எடுக்கப்படும் கட்டணங்கள் நீங்கலாக, இந்நிரலிலுள்ள கருமங்களுள் எது தொடர்பிலுமான கட்டணங்கள். 58. பகிரங்க பயன்பாட்டு உள்ளமைப்பு அபிவிருத்தி. ❑

VINNEY VIGNES
CERTIFIED ACCOUNTANTS &
REGISTERED AUDITORS
COMPLETE ACCOUNTANCY AND TAXATION SERVICES
84 Ilford Lane
Ilford, Essex IG1 2LA
Tel: 081-553 5876 Fax: 081-553 3721
Mobile: 0956 277112

**இலங்கை: ஒரு விவாதம்**

# சமாதானத்துக்கு தடைகள் என்ன?

## இராணுவ நடவடிக்கைகள் பேரழிவாகவே அமையும்

**வசந்தராஜா**

இலங்கையில் நடைபெறும் யுத்தம் தொடர்பில் சர்வதேச சமூகம் மேற்கொள்ளவேண்டிய முதலாவது நடவடிக்கை, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் அரசாங்கம் சிறுபான்மைத் தமிழினத்தை நசுக்கி பணியவைக்க மேற்கொள்ளும் தந்தரோபாயத்தைக் கைவிடச் செய்யும்படியான வற்புறுத்தலுக்கு அதனை நிர்ப்பந்திப்பதே. ஆனால், நிலைகொண்டுவிட்ட மூன்று கருத்துக்கள் இந்நடவடிக்கைக்குத் தடையாகவிருக்கின்றன. அவற்றில் முதலாவது; 'விடுதலைப் புலிகள் முன்னைய சமாதான முயற்சிகளைக் குழப்பிவிட்டார்கள்' என்பது.

பேச்சுவார்த்தைகளில் அரசாங்க தரப்பில் அங்கம்வகித்த ஒருவன் என்ற வகையில் நான் இக் குற்றச்சாட்டை முற்றாக நிராகரிக்கிறேன். மாறாக, அரசாங்கத்தின் சமாதான முயற்சி புலிகளை மக்களிடமிருந்து ஆதரவிழக்கச் செய்து, அதன் மூலம் அவர்களைத் தோற்கடிப்பதை நோக்காகக் கொண்டதே. இது இராணுவத்தினால் வற்புறுத்தப்பட்ட ஒரு யுக்தியாகும். இந்த யுக்தியை உணர்ந்து கொண்டதும் காலம் கடந்துவிடு முன்னரேயே புலிகள் தங்களை விடுவித்துக்கொண்டது நியாயமானதே. பல சம்பவங்கள் அவர்களுக்கு சந்தேகங்களை ஏற்படுத்தின. பல முறைப்பாடுகளை அவர்கள் மேற்கொண்டார்கள். இந்நிலையில் அவர்களை இதற்காக எவரும் குறைகூற முடியாது.

இரண்டாவது; 'புலிகள் ஒரு சிறு கூட்டமே; அவர்களுக்கு வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் மக்களின் ஆதரவு அருகிவருகிறது' என்பது.

இதுவும் பொய்யானதே. புலிகள் அங்கு ஒரு நிதர்சனமான அரசாங்கத்தை அமைத்திருக்கிறார்கள். கடினமான யுத்த நிலைமைகளிலும்கூட திறமை வாய்ந்த நிர்வாகத்தை அளிக்கிறார்கள். தமிழ் மக்கள் குழப்ப நிலைமைகளுக்கு உள்ளாகிவிடாதவாறு பாதுகாக்கிறார்கள். இதனைப் புரிந்துகொள்ள இயலாத தன்மை, 'பயங்கரவாதிகளின் பிடி'யிலிருந்து யாழ்ப்பாணத்தை 'விடுவிக்க' ஜனாதிபதி இராணுவத்தை அனுப்பும் நடவடிக்கைகளுக்கு இட்டுச் சென்றது. ஆனால், சமீபத்திய தாக்குதலில் 10 ஆயிரம் இராணுவத்தினர் புலிகளின் பிராந்தியத்தில் ஒரு சிறு பகுதிகளைக் கைப்பற்றியபோது, இயலுமான மக்கள் அப்பகுதிகளிலிருந்து புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிகளுக்கே திரண்டு சென்றுள்ளார்கள்.


விளக்கம் நேரடியானது: முன்னேறும் படைகளை ஆக்கிரமிப்பாளர்களாகவே தமிழ் மக்கள் பார்க்கிறார்களேயன்றி, தம்மை விடுவிப்பவர்களாக அல்ல. அவர்கள் சிங்கள இராணுவத்திடமிருந்து தமது பாதுகாப்புக்கு மாத்திரம் புலிகளை நாடவில்லை. கூடவே, அவர்களின் வீரத்துக்காகவும் உறுதியான தலைமைக்காகவும் அவர்கள்மீது பெரும் மதிப்பையும் அவர்கள் கொண்டிருக்கிறார்கள்.

மூன்றாவதாக; 'புலிகள் தனிநாடொன்றைத் தவிர வேறு எதனையும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்' என்பது.

நான் புலிகளின் தலைவர்கள் பலருடன் பேசியதிலிருந்து இதுவும்கூட தவறான ஒன்றே என்பது தெரியும். புலிகள் தெரிவிக்கும் செய்தி எளிதானது: தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை பற்றிய அவர்களின் ஜனநாயக உரிமை பேரம்பேச முடியாத ஒன்று. ஆனால், தமிழ், சிங்கள மக்களின் நலன்களையும், அபிலாஷைகளையும் கருத்திற் கொண்ட ஒரு புதிய அரசு அமைப்பு முற்றிலும் கலந்தாலோசிக்கப்படக்கூடியதே.

பிரிட்டிஷ் குடியேற்றவாதிகள் தமது நிர்வாக வசதிக்காக ஒன்றிணைத்த பின்னர்தான் இலங்கை ஓர் ஒற்றையாட்சி அரசாக மாறியது என்பது பொதுவாக பலராலும் அறியப்படவில்லை. பிரிட்டிஷாரின் வருகைக்கு முன்னர் தமிழர்கள் வடக்கு, கிழக்கில் தனித்த ஓர் இனமாகவே வாழ்ந்தார்கள்.

- அரசாங்கத்தின் சமாதான முயற்சி புலிகளை மக்களிடமிருந்து ஆதரவிழக்கச் செய்து, அதன் மூலம் அவர்களைத் தோற்கடிப்பதை நோக்காகக் கொண்டதே.
- இராணுவத்தினர் புலிகளின் பிராந்தியத்தில் ஒரு சிறு பகுதிகளைக் கைப்பற்றியபோது, இயலுமான மக்கள் அப்பகுதிகளிலிருந்து புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிகளுக்கே திரண்டு சென்றுள்ளார்கள்.
- தமிழ், சிங்கள மக்களின் நலன்களையும், அபிலாஷைகளையும் கருத்திற் கொண்ட ஒரு புதிய அரசு அமைப்பு முற்றிலும் கலந்தாலோசிக்கப்படக்கூடியதே.
- எந்த ஓர் இனமும் இன்னோர் இனத்தின்மீது இராணுவ ரீதியான ஒரு தீர்வைத் திணிக்க உரிமை கொண்டிருக்கவில்லை. ஆனால், துரதிருஷ்டவசமாக சிங்கள அரசு இதைத்தான் தமிழினம் மீது பல ஆண்டுகளாக மேற்கொண்டு வருகிறது.
- சமத்துவ அடிப்படையிலான பேச்சுவார்த்தைகளுக்கு சிங்கள அரசாங்கம் விருப்பு தெரிவிக்குமானால், இராணுவ நடவடிக்கைகளும் கைவிடப்படும் பட்சத்தில் புலிகள் சமரச பேச்சுக்கு வருவதில் தயக்கம் கொள்ளமாட்டார்கள்.



குடியேற்ற ஆதிக்கத்திலிருந்து விடுபட்ட மற்றும்பல நாடுகளைப்போலவே, தேசிய யதார்த்தங்களை கருத்திற்கொண்டு ஆட்சி அமைக்கப்படவில்லை. இதுவே இன்றைய பல தேசிய விடுதலைப் போராட்டங்களுக்கு காரணமாகிறது. ஆகவே, சர்வதேச சமூகம் இந்த அரசு அமைப்புகளை அப்படியே கண்களை மூடிக்கொண்டு பேணுவதை விடுத்து, ஒடுக்கப்பட்ட இனங்களின் சுயநிர்ணய உரிமைகளை அங்கீகரிக்கும் தமது தார்மீக

பொறுப்பை எதிர்கொள்ளவேண்டும்.

புதிய அரசு அமைப்பொன்றை விடுதலைப் புலிகள் பரீட்சித்துப்பார்க்க விரும்புகிறார்கள். உதாரணமாக, பரஸ்பர நலன்களுக்காக தமது இறைமையின் அம்சங்களை விட்டுக்கொடுக்க நாடுகள் கற்றுக்கொள்ளும் ஐரோப்பிய சமூகத்தை அவர்கள் கருத்தில் கொள்ளலாம். ஐரோப்பிய பாராளுமன்றமும், ஐரோப்பிய நீதிமன்றமும் ஏற்கனவே செயல்படுகின்றன. இலங்கை அரசு தமிழர்களை, அவர்கள் சுயநிர்ணய உரிமைகொண்ட ஒரு தனித் தேசிய இனம் என்பதை ஏற்று நடக்கும் பட்சத்தில் ஐரோப்பிய சமூகத்தையொத்த விதத்தில் ஓர் 'ஒன்றிய இலங்கை'யும் 'தமிழ் ஈழமும்' என்ற ஓர் அமைப்பை நோக்கி செயல்படுவது சாத்தியமானதே.

மேலும், எந்த ஓர் இனமும் இன்னோர் இனத்தின்மீது இராணுவ ரீதியான ஒரு தீர்வைத் திணிக்க உரிமை கொண்டிருக்கவில்லை. ஆனால், துரதிருஷ்டவசமாக சிங்கள அரசு இதைத்தான் தமிழினம் மீது பல ஆண்டுகளாக மேற்கொண்டு வருகிறது. புதிய அரசு அமைப்புகள், அவை நிலைபெற வேண்டுமானால், சமத்துவ அடிப்படையில், மனமுவந்து கலந்தாலோசிக்கப்படவேண்டும். சாத்தியமாகக்கூடிய இத்தகைய புதிய அமைப்பில் சமத்துவ அடிப்படையிலான பேச்சுவார்த்தைகளுக்கு சிங்கள அரசாங்கம் விருப்பு தெரிவிக்குமானால், இராணுவ நடவடிக்கைகளும் கைவிடப்படும் பட்சத்தில் புலிகள் சமரச பேச்சுக்கு வருவதில் தயக்கம் கொள்ளமாட்டார்கள் என்பதில் எனக்கு உறுதிப்பாடுண்டு.

ஆனால், கொழும்பு அரசாங்கம் நேர்மையான பேச்சுவார்த்தைக்கு உண்மையாகவே தயாராகவிருப்பதாக தெரியவில்லை. ஜனாதிபதி சந்திரிகாவும்கூட தமிழர்களை உரிமை கொண்ட ஒரு தனி இனமாகவன்றி, தனது சிங்கள மக்களுடன் ஒரு சிறுபான்மை இனமாகவே நோக்குகிறார். அதனால்தான் அவர்கள் சொல்லொணா வேதனையுறும் விதத்தில் யாழ்ப்பாணம் மீது தொடர்ந்த இராணுவத் தாக்குதலுக்கு அவர் இடமளிக்கிறார். இத்தகைய தாக்குதல் நடவடிக்கைகள் தமிழ் மக்களை மேலும் அந்நியப்படுத்தி, எதிர்காலத்தில் மீண்டும் ஒரு நம்பிக்கையை ஏற்படுத்துவது என்பது இயலாததாகவே செய்துவிடும்.

ஆகவே, தமிழர் தாயகத்திலிருந்து படைகளை வாபஸ்பெறச் செய்யவும், புலிகளுடன் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பிப்பதற்கும் சர்வதேச சமூகம் இலங்கை அரசாங்கத்தை வற்புறுத்தவேண்டும். அல்லாவிடின், நாடு இராணுவ, பொருளாதார, அரசியல் அழிவையே சென்றடையும். இந்த அறிகுறிகள் ஏற்கனவே அங்கு தென்பட ஆரம்பித்துவிட்டன. ❑

காஷ்மீர்:

# 3 லட்சம் இந்துக்கள் வெளியேற்றம்

## யுத்தத்தில் சிதைவுறும் உலகின் அழகிய நகர்

(ஜெமினி செய்தி)

அரை நூற்றாண்டு காலமாக இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே எல்லைப்புறத்திலுள்ள சர்ச்சைக்குரிய காஷ்மீரில் இந்துக்களுக்கு எதிராக இடம்பெறும் மனித உரிமை மீறல் சம்பவங்கள் மிக அரிதாகவே சர்வதேச தகவல் தொடர்பு சாதனங்களிலும், மனித உரிமைகள் தொடர்பான அறிக்கைகளிலும் இடம்பெறுகின்றன.

இஸ்லாமிய தீவிரவாதத்தின் எதிரொலியாக 3 லட்சத்துக்கும் அதிகமான இந்துக்கள் தமது இருப்பிடங்களைவிட்டு இடம்பெயர்ந்துள்ளனர். எனினும் இது உலகின் கண்களுக்கு மறைக்கப்பட்டே வருகிறது. நிர்ப்பந்தம் காரணமாகவே அவர்கள் தமது இருப்பிடங்களைவிட்டு வெளியேறி, ஜம்மு அகதி முகாம்களில் மிகவும் மோசமான நிலையில் தங்கியிருக்கிறார்கள் என இந்திய-ஐரோப்பிய காஷ்மீர் பொது மன்றத்தின் தலைவர் டாக்டர் ஷிபன் டுரானி தெரிவிக்கிறார். காஷ்மீர் இந்துக்களுக்கான இந்த இயக்கம் லண்டனில் இயங்கிவருகிறது.

●●●

இந்தியாவும், பாகிஸ்தானும் 1947 ஆம் ஆண்டு இரண்டாகப் பிளவுபட்டது முதல், காஷ்மீரே இரு நாடுகளுக்குமிடையிலான பிரச்னைக்கு மூலகாரணமாக இருந்து வருகின்றது.

●●●

காஷ்மீரையே சேர்ந்தவரான நேரு, ஐ.நா. அநுசரணையுடனான சர்வ ஜன வாக்கெடுப்பு ஒன்றுக்கு உறுதியளித்தார். ஆனால் அது நடைபெறவேயில்லை.

●●●


"ஒருசிறுபான்மை எண்ணிக்கையினரான காஷ்மீரத்தவர்களே பாகிஸ்தானுடன் இணைவதை விரும்புபவர்கள். இந்த தீவிரவாத குழுவை உலக வங்கி போன்ற சர்வதேச நிறுவனங்களின் நிதி உதவியோடு பாகிஸ்தானுக்கு ஒழுங்கான முறையில் இடமாற்றுவதற்கு இந்திய, பாகிஸ்தான் அரசுகள் இணங்க வேண்டும்.

கடந்த ஆறு ஆண்டுகளுக்கு முன் காஷ்மீரில் இஸ்லாமிய தீவிரவாதிகளின் கிளர்ச்சி ஆரம்பமான நாள் முதல் இன்று வரை ஆயிரத்து 600 இந்துக்கள் பலியாகியுள்ளார்கள். ஜம்முவையடுத்த பிராந்தியங்களிலுள்ள முகாம்களில் 6 ஆயிரம் இந்துக்கள் மரணமடைந்துள்ளார்கள். கடும் வெப்பம் காரணமாகவே இவர்கள் மரணமானார்கள். 20 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் இன்னமும் முகாம்களில் தங்கியிருக்கிறார்கள்.

தீவிரவாதிகளின் இனப்படுகொலைக்கும் மதசுத்திகரிப்புக்கும் தமது சமூகத்தவர் உள்ளாக்கப்படுவதாக இந்தியாவிலுள்ள 'எங்கள் காஷ்மீர்' என்ற இந்து அமைப்பொன்றின் தலைவர் கூறுகிறார். இந்துக்களின் சொத்துக்கள் அழிக்கப்பட்டுவிட்டன. அவர்களது இல்லங்களில் தீவிரவாதிகள் குடியேறியுள்ளனர். இந்நிலையில் பாரம்பரியமாக ஆசிரியர்களாகவும், கல்விமான்களாகவும் இருந்துவரும் இவர்களால் துப்பாக்கிகளை வைத்துக்கொண்டு அதிகாரம் செலுத்தும் தீவிரவாதிகளை எவ்வாறு சமாளிக்க முடியும், என்றும் அவர் கேட்கிறார்.

காஷ்மீரில் இந்து-முஸ்லிம் மக்கள் சகிப்புணர்வுடன் ஒன்றிணைந்து வாழ்ந்து வந்த வரலாறும் உண்டு. ஆனால் 1987 ஆம் ஆண்டு மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கம் கலைக்கப்பட்ட பின்னர் கடந்த எட்டு ஆண்டுகளாக இங்கு பாரதூரமான அரசியல் கலவரங்கள் இடம்பெற்று வருகின்றன. இக் கலவரங்களினால் இந்துக்கள் பெருமளவில் காஷ்மீரைவிட்டு வெளியேறியுள்ளனர். இந்தியாவில் முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையாக வாழும் ஒரேயொரு மாநில மான காஷ்மீரின் இந்த அரசியல் நெருக்கடி, இஸ்லாமிய தீவிரவாதிகள் ஓர் 'இந்து இந்தியா'வுக்கு எதிராக போராடுவதாகவே தெரிகிறது. எனினும், ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட காஷ்மீர் முஸ்லிம்களும் வெளியேறியுள்ளனர். தீவிரவாதிகளின் துப்பாக்கிகளுக்கு மத்தியில் வாழ்க்கை நடாத்துவதைத் தவிர்ப்பதற்காகவே இவ

# காஷ்மீர்: கலவர பிராந்தியம்




ர்கள் அங்கிருந்து வெளியேறியுள்ளனர்.

இந்தியாவும், பாகிஸ்தானும் 1947 ஆம் ஆண்டு இரண்டாகப் பிளவுபட்டது முதல், காஷ்மீரே இரு நாடுகளுக்குமிடையிலான பிரச்னைக்கு மூலகாரணமாக இருந்து வருகின்றது. இதன் காரணமாக 1948, 1965, 1971 ஆகிய ஆண்டுகளில் இரு நாடுகளுக்குமிடையில் பெரும் யுத்தங்களும் மூண்டன. 1947ஆம் ஆண்டு வரை காஷ்மீர் ஒரு சுதந்திரமான, களை கொண்ட மாநிலமாகவே இருந்தது. இந்தியா பிளவுபட்ட சில மாதங்களிலேயே பாகிஸ்தானால் ஊக்குவிக்கப்பட்ட தீவிரவாதிகளின் தாக்குதலுக்கு உள்ளாகவும் மகாராஜா ஹரி சிங், பிரதமர் ஜவஹர்லால் நேருவுடன் உடன்பாடொன்றை ஒப்பமிட்டார். காஷ்மீரையே சேர்ந்தவரான நேரு, ஐ.நா. அநுசரணையுடனான சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றுக்கு உறுதியளித்தார். ஆனால் அது நடைபெறவேயில்லை. 1971 யுத்தத்துக்குப் பின்னர் 1972 சிம்லா ஒப்பந்தத்தில் இஸ்லாமாபாத் ஒப்பமிட்டது. அதில், 'மற்றைய விடயங்களுடன், காஷ்மீர் விவகாரம் சர்வதேச ரீதியிலன்றி, பரஸ்பரம் தீர்த்துவைக்கப்படும்' என்று கூறப்பட்டது. எனினும், பாகிஸ் தான் இந்த விவகாரத்தை சர்வதேசமயப்படுத்தவே முயன்றது.

இந்தியாவிடமிருந்து சுதந்திரம் பெறு வதற்காகவே தாம் போராடுவதாக காஷ்மீர் தீவிரவாதிகள் கூறுகிறார்கள். சுதந்திர காஷ்மீர் ஒன்று உருவாகவேண்டும் என சிலர் கூறுகிறார்கள். வேறுசிலர் தாம் பாகிஸ்தானின் ஒரு பகுதியாவதை விரும்புவதாக கூறுகிறார்கள்.

காஷ்மீருக்கு மத அடிப்படையில் சுதந்திரம் வழங்கும் பட்சத்தில் அது இந்திய அரசின் மத சார்பற்ற கொள்கைக்கு விரோதமானதாகவே அமைவதுடன், எதிர் காலத்தில் இந்திய சிறுபான்மை முஸ்லிம் மக்களுக்கும் பெரும் பாதிப்பையே ஏற்படுத்தும் என இந்தியா வாதிடுகிறது. பாகிஸ்

## பணய நாடகம்

இந்திய காஷ்மீரில் ஐந்து வெளிநாட்டு உல்லாசப் பயணிகளைப் பணயக் கைதி களாகப் பிடித்து வைத்திருக்கும் 'அல்ஃபரான்' தீவிரவாதக் குழுவினர், பணயக் கைதிகளில் ஒருவரான நோர்வே பிரஜையைச் சுட்டுக் கொன்றது பழைய கதை. ஏனைய நான்கு பேரும் எந்நேரமும் விடுதலை செய்யப்படலாம் என இந்தியா எதிர்பார்த்திருக்கும் வேளையில் அவர்கள் பற்றிய தகவல்கள் எதுவும் வெளிவராமல் இருக்கும் மர்மம் இப்பொழுது பெரும் அச்சத்தைத் தருகிறது.

காஷ்மீரின் புதிய தீவிரவாதக் குழுவான 'அல்ஃபரான்' இரண்டு மாதங்களுக்கு மேலாக இந்தப் பணய நாடகத்தை நடாத்திவருகிறது. ஹான்ஸ் கிறிஸ்ரியன் ஆஸ் ட்ரோ (நோர்வே), கீற் மங்கன், போல் வெல்ஸ் (பிரிட்டன்), டொனால்ட் ஹட்சிங்ஸ் (அமெரிக்கா), டிர்க் ஹஸட் (ஜெர்மன்) ஆகியோரை இரண்டு மாதங்களுக்கு முன்னர் கைதுசெய்து கடத்திச் சென்ற தீவிரவாதிகள், இந்திய அரசிடம் தமது கோரிக்கையை முன் வைத்தனர்.

டில்லி சிறையில் வைக்கப்பட்டிருக்கும் தமது சகாக்கள் 15 பேரை இந்திய அரசு விடுவிக்கவேண்டும் என்பதே தீவிரவாதிகளின் கோரிக்கை. வழமைபோல் இந்திய அரசு முதலில் தீவிரவாதிகளின் இக் கோரிக்கையை பெரிதாகக் கருத்தில் எடுக்கவில்லை. மேற்படி நான்கு நாடுகளினதும் ஆலோசனையின் பேரில் இந்திய அரசு கைதிகளை விடுவிப்பதற்கு அதிரடி நடவடிக்கைகள் எதனையும் எடுக்கும் முயற்சியிலும் ஈடுபடவில்லை. விவகாரம் 'நாளாகக் கனியும்' என்று காத்திருந்தபோது, எவருமே எதிர்பாராத வகையில் தீவிரவாதிகள் இந்தியாவின் தலையில் குண்டு ஒன்றைப் போட்டனர்.

நோர்வே பிரஜையின் உயிரைப் பறித்த தீவிரவாதிகள் அவரது உடலை வீதியில் வீசி எறிந்து, தமது நிபந்தனைகளில் தாம் கொண்டுள்ள உறுதியை வெளிப் படுத்தினர்.

பின்னர், ஏனைய நான்கு பணயக் கைதிகளையும் பவுத்திரமாக விடுவிக்கும் பணியில் இடைத்தரகர் ஒருவர் மூலம் இந்திய அரசு தீவிரவாதிகளுடன் பேச் சுவார்த்தையை ஆரம்பித்தது. ராஜீந்தர் டிக்கு என்ற இந்திய அரசின் உயர் அதிகாரியே இந்த இடைத்தரகர். ஏனைய பணயக் கைதிகள் உயிருடனேயே இருக்கிறார்கள் என்பதை தீவிரவாதிகள் பல வழிகளில் நிரூபித்துள்ளனர். அவர்களைப் படம் பிடித்த வீடியோ கசெட்டுகள், அவர்களின் குரல்கள் பதிவு செய்யப்பட்ட ஓடியோ கசெட்டுகள், அவர்களது புகைப்படங்கள் ஆகியவற்றை அரசுக்கு அனுப்பியிருந்த தீவிர வாதிகள், இடைத் தரகர் டிக்குவுடனும் பணயக் கைதிகளை வானொலித் தொலை பேசி மூலம் தொடர்பு கொள்ள அனுமதித்தனர். இந்திய அரசே மேற்படி தீவிர வாதக் குழு உறுப்பினர் ஒருவர்மூலம் பணயக் கைதிகளுடன் இருக்கும் தீவிர வாதிகளுக்கு விசேட வானொலித் தொடர்பு கருவிகளை அனுப்பிவைத்தது.

டிக்குவுக்கும் தீவிரவாதிகளுக்குமிடையிலான 'வயர்லஸ்' மூலமான பேச் சுவார்த்தை இடையிடையே முறிவடைந்து, சுமார் ஒருமாத காலத்துக்கு தொடர்ந்தது. இதேவேளை, 'ஸ்கொட்லண்ட் யார்ட்', 'பெடரல் பீரோ ஒவ் இன்வெஸ்ரிகேசன்' ஆகியவற்றின் உதவியுடன் இந்திய அரசு செய்மதிகளின் உதவியுடன் பணயக் கைதிகளுடன் தங்கியிருக்கும் தீவிரவாதிகளின் நடமாட்டத்தை உன்னிப்பாக அவதானித் துக்கொண் டிருக்கிறது. இப்போது, கடந்த இரு வாரங்களாக தீவிரவாதிகள் டிக்குவுடனான தொடர்புகளை முற்றாகத் துண்டித் துவிட்டனர்.

பணயக் கைதிகள் நால்வரும் கடும் சுகவீனமுற்றிருக்கின்றனர் என்பதே பணய நாடக மேடையிலிருந்து கடைசியாகக் கிடைத்த செய்தியாகும்.

தாணை விடவும் கூடுதலான முஸ்லிம்கள் இந்தியாவிலேயே வாழ்கிறார்கள்.

இந்திய முன்னாள் வெளிநாட்டு அமைச்சு செயலாளரான கிருஷ்ணா ராஸ்கொற்ரா, காஷ்மீர் பிரச்னை தொடர்பான அவரது நாற்பது ஆண்டுகால அநுபவத்தில் கூறுவது: "ஒருசிறுபான்மை எண்ணிக்கையினரான காஷ்மீரத்தவர்களே பாகிஸ் தானுடன் இணைவதை விரும்புபவர்கள். இந்த தீவிர வாத குழுவை உலக வங்கி போன்ற சர்வதேச நிறு வனங்களின் நிதி உதவி யோடு பாகிஸ்தானுக்கு ஒழுங்கான முறையில் இட மாற்றுவதற்கு இந்திய, பாகிஸ்தான் அரசுகள் இணங்க வேண்டும். காஷ்மீர் பள்ளத்தாக்கில் பாகிஸ்தானே கிளர்ச்சி நடவடிக்கைகளுக்கு உதவியும் ஒத்தாசையும் அளித்துவருகிறது. பாகிஸ் தானின் கட்டுப்பாட்டுக் குள் இருக்கும் காஷ்மீர் பகுதியில் பயிற்சி முகாம்கள் அமைத்து, தீவிரவாதிகளுக்கு பயிற்சி அளித்துவருகிறது. இதன் மூலம், பாகிஸ்தான் காஷ்மீரில் இந்தியாவுடன் ஒரு யுத் தத்திலேயே ஈடுபட்டுள்ளது" என்று கூறுகிறார் அவர்.

காஷ்மீரிலிருக்கும் 3ஆயிரத்து 500 தீவிரவாதிகளில் ஆயிரத்து 300 பேர் ஆப்கான் மற்றும் பாகிஸ்தான் பிரஜைகளாவர். இத் தீவிரவாதிகளிடம் போதிய ஆயுதங்கள் உள்ளன. ஆப்கானிஸ்தானிலும் ரஜிகிஸ்தானிலும் நடைபெறும் உள் நாட்டுக் கலவரங்களில் பயன்படுத்தப்படும் பெருந்தொகையான ஆயுதங்கள் காஷ்மீர் தீவிரவாதிகளிடம் வந்து சேர் கின்றன. போதை வஸ்து கடத்தல் மூலம் பெறப்படும் பணமும் இவர்களுக்கு கிடைக்கிறது.

"காஷ்மீரில் வாழும் சாதாரண மக்கள் இந்திய இராணுவத்தினரதும் தீவிரவாதிகளினதும் ஆயுத முனையில் வாழ்க்கை நடத்துவதை வெறுத்துவருகின்றனர்" - என்று கூறுகிறார் இந்திய பிரதமரின் முன்னாள் பொருளாதார ஆலோசகரும் கல்விமானுமாகிய டாக்டர் அலி முகமட் குஸ்ரோ. அரசியலைவிட மக்களின் வயிற்றில் பசி விஞ்சிவிட்டது. இதனால் தீவிரவாதிகளின் பிடி தளர்ந்து கொண்டேபோகிறது என்றும் அவர் கூறுகிறார்.

உலகின் மிக அழகான இடங்களில் ஒன்றான காஷ்மீரின் பொருளாதாரம் நாசமாக்கப்பட்டுவிட்டது. அரசியல் நெருக்கடி காரணமாக காஷ்மீரின் பொருளாதாரத்தை வளர்த்தெடுக்கும் வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் துரத்தியடிக்கப்பட்டுள்ளனர். நீண்டகாலமாக சமாதான வாழ்வை ஆவலுடன் எதிர் பார்த்துக்கொண்டிருக்கும் சாதாரண மக்களின் வாழ்க்கை சீரழிந்துபோயுள்ளது.

"காஷ்மீர் தீவிரவாதிகள் ஒவ்வொருவரும் முஸ்லிம்களே. ஆனால், காஷ்மீரில் முஸ்லிம்கள் ஒவ்வொருவரும் தீவிரவாதிகள் என்பதல்ல" என்றும் கூறுகிறார் அவர்.

காஷ்மீர் மாநிலத்தின் பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு இந்திய அரசு தனியார் துணையுடன் இணைந்து பல திட்டங்களை முன்வைத் துள்ளது. மீண்டும் ஜனநாயக ரீதியிலான அரசியல் நடைமுறைகள் அமுலுக்கு வரும் பட்சத்தில் சகல பிரச்னைகளுக்கும் தீர்வுகாண வழி ஏற்படும் என குஸ்ரோ நம்பிக்கையோடு கூறுகிறார்.

இன்னமும் ஒருசில மாதங்களில் காஷ்மீர் மாநில சட்ட சபைத் தேர்தலை நடாத்த புதுடில்லி அரசாங்கம் மிகுந்த அக்கறை கொண்டுள்ளது. இதன் மூலம் தீவிரவாதிகளுக்கு கூடுதல் அரசியல் அதிகாரங்கள் வழங்கப்படும் என மக்கள் அச்சம் கொண்டுள்ளனர். எனவே, எவருக்குமே இந்துக்கள் வாக்க ளிக்கமாட்டார்கள் என்று கூறுகிறார் 'எங்கள் காஷ்மீர்' தலைவர்.

இந்திய, பாகிஸ்தான் எல்லையில் இந்துக்களுக்கென தனியான தாயகம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும். இதன் மூலமே இஸ்லாமிய தீவிரவாதிகளால் இராணுவ மயமாக்கப்பட்ட எமது பிராந்தியம் பாதுகாக்கப்படும் என்றும் ஐமா கூறுகிறார். ❑


# SHIPPING - AIR FREIGHT - TRAVEL

UNACCOMPANIED BAGGAGE - PERSONAL EFFECTS, HOUSEHOLD GOODS, VEHICLES, MACHINERY ETC.

*TO* **COLOMBO** ***AND OTHER WORLD WIDE DESTINATIONS***

***MAIN AGENT FOR AIRLANKA***

PASSENGER TICKETS AND UNACCOMPANIED BAGGAGE

*All Your Goods Go To Our Bonded Warehouse in Colombo*

**WE WILL ALSO FLY YOU ANYWHERE, ANYTIME ON SCHEDULED FLIGHTS AT LOW PRICES**

## GLEN CARRIERS LIMITED

14 Allied Way, off Warple Way, Acton, London W3 0RQ
Telephone: 081-740 8379/081-749 0595
Fax: 081-740 4229 Telex: 929657 Glenca G
**BONDED WAREHOUSE:**
LAKSIRISEVA, 253/3 Avissawella Rd, Colombo 14. Tel: 575576

# நிலக்கண்ணி தடைக்கு சர்வதேச நடவடிக்கை

## பொதுமக்களே அதன் குரூரத்தை அநுபவிப்பவர்கள்

நாம் பென்னிலிருந்து
**எமிலா**

கம்போடியா, மொஸாம்பிக், அங்கோலா, ஆப்கானிஸ்தான் மற்றும் உலகம் முழுவதும் அறுபதுக்கும் மேற்பட்ட நாடுகளில் சுமார் 100 மில்லியன் நிலக்கண்ணிகள் புதைக்கப்பட்டுள்ளன. இவை வருடமொன்றுக்கு 26 ஆயிரம்பேரை ஊனமாக்கவும் உயிர்ப்பலி கொள்ளவும் வைக்கின்றன.


பொதுவாக, இக் கண்ணிகளைப் புதைப்பவர்கள் இராணுவத்தினர். பொதுமக்களே அதன் குரூரத்தை அநுபவிப்பவர்கள். அவர்களின் உடல்களும் அவர்களின் சமுதாயமும் எப்போதுமே ஊனமாக்கப்பட்டு, உடல்ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் அவர்கள் பாதிப்புக்குள்ளாகி, தம்மையும் தமது குடும்பத்தையும் பேணமுடியாதவர்களாக ஆகிவிடுகிறார்கள். நிலக்கண்ணிகளைத் தடைசெய்யும்படி 1992 இல் ஆரம்பிக்கப் பட்ட உலகளாவிய பிரச்சார நடவடிக்கை இந்த நிலைமையில் சற்று மாற்றத்தை ஏற்படுத்தத் தலைப் பட்டிருக்கிறது. கடந்த மார்ச் மாதத்திலிருந்து பெல்ஜியம் ஐந்து ஆண்டுகளுக்கு நிலக்கண்ணிகளின் பாவனை, உற்பத்தி, விற்பனை, கடத்தல் ஏன்பவற்றில் பூரண தடையை விதித்திருக்கிறது. அமெரிக்கா இக் கண்ணிகளின் விற்பனை, கடத்தல் தொடர்பில் 3 ஆண்டு கால தடையை அறிவித்திருக்கிறது. இதில் முதலில் பங்கேற்க மறுத்த பிரிட்டன், மட்டுப்படுத்தப்பட்ட ஒரு தடையை ஏற்படுத்த இப்போது சம்மதித்திருக்கிறது. இதை வேளை, உலகம் முழுவதும் இந்த நிலக்கண்ணிகளைச் செயலிழக்கச் செய்வதற்கான நிதியைத் திரட்டு வதற்காக ஐக்கிய நாடுகள் சபை அண்மையில் ஒரு நம்பிக்கை நிதியத்தை உருவாக்கியுள்ளது.

கடந்த ஏப்ரலில், கண்ணிகளைத் தயாரிக்கும் நாடுகளும் கண்ணிகளால் பாதிப்படைந்த நாடுகளுமாக 36 நாடுகளிலிருந்து முந்நூறுக்கும் அதிகமானவர்கள் நாம் பென்னில் கூடி, அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து ஆராய்ந்தார்கள். இது சாதிக்கக்கூடிய ஒன்றே என்பதைப் பலரும் உணர்கிறார்கள். 'குண்டைத் தடைசெய்யும்படியோ அல்லது யுத்தத்தை நிறுத்தும்படியோ நாம் கூறவில்லை; குறிப்பிட்ட இந்த பிசாசு போன்ற ஆயுதத்தை மாத்திரமே ஒழித்துவிடும்படி கோருகிறோம்' என்று பிரிட்டனின் கண்ணிகள் ஆலோசனைக் குழுவைச் சார்ந்த கிறிஸ் ஹெர்வூட் கூறுகிறார். 'பொதுமக்கள்மீது நிலக்கண்ணிகள் ஏற்படுத்தும் உண்மையான கொடூரத்தை உலகம் புரிந்துகொள்ளத் தொடங்கிவிட்டது. சமூக பொருளாதார தாக்கங்கள் பெருமளவில் தெரிகின்றன' என்கிறார் அவர்.

வியட்நாமின் மாகாணமொன்றில் 6 ஆயிரத்து 500 ஏக்கர் பயிர்ச்செய்கை நிலம் இக்கண்ணிகளால் உற்பத்தியிலிருந்து கைவிடப்பட்டிருப்பதாக ஒக்ஸ்பாம் நிறுவனம் தெரிவிக்கிறது. 12 ஆயிரத்துக்கும் அதிகமான குடும்பங்களுக்கு போதுமான உணவை உற்பத்தியாக்கவல்ல நிலப்பரப்பு இது. இதே பிரச்னை உலகம் முழுவதும் இருக்கிறது.

ஒக்ஸ்பாம் தகவலின்படி, 1993இல் 80 ஆயிரம் நிலக்கண்ணிகள் அகற்றப்பட்டுள்ளன. இதேவேளை, உலகம் முற்றிலும் இரண்டரை மில்லியன் கண்ணிகள் புதிதாகப் புதைக்கப்பட்டுள்ளன. ஒவ்வோராண்டும் 5 மில்லியனிலிருந்து 10 மில்லியன் கண்ணிகள் புதிதாகத் தயாரிக்கப்படுகின்றன. மேலும் 100 மில்லியன் கண்ணிகள் சேமிப்பிலுள்ளன.

7 மில்லியன் நிலக்கண்ணிகள் கம்போடியாவில் புதைத்து வைக்கப்பட்டிருப்பதாக கருதப்படுகிறது. கம்போடியாவின் கண்ணிவெடி பிரச்னை சர்வதேச ஆயுத விற்பனையாளர்களால் உருவாக்கப்பட்டது என்று கம்போடிய தகவல் அமைச்சர் கூறுகிறார். நிலக்கண்ணிகளைச் செயலிழக்கவைக்கும் பணியிலான கம்போடிய கண்ணி நடவடிக்கை நிலையத்தின் தலைவர் அவர். 1992இல் இப்பணி ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து அமெரிக்கா, ரஷ்யா, சீனா, வியட்நாம், கிரீஸ், இந்தியா, இத்தாலி ஆகிய நாட்டு கண்ணிகள் நாடு முழுவதும் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இதற்காக மிகச் சிறிதளவு சர்வதேச நி ிியே வழங்கப்பட்டிருக்கிறது. இப்பணிக்குத் தேவைப்பட்ட சுமார் 100 மில்லியன் டொலரை அப்பணியிலுள்ள அரசுசார்பற்ற பல்வேறு நிறுவனங்கள் மிக கஷ்டப்பட்டே சேகரித்தன. 'கம்போடியா மாத்திரம் இப்பிரச்னையைத்



தீர்த்துவிட முடியாது; உபகரணங்கள், நிதி, நிபுணத்துவம் என்பன தொடர்பிலான சர்வதேச உதவி கம்போடியாவுக்குத் தேவை' என்றும் அமைச்சர் கோருகிறார்.

இந்நிலைமையிலும் கண்ணிகளை அகற்றும் பணியில் உள்ளூர்வாசிகள் அங்கு செயல்படுகிறார்கள். உலகில் முதன்முதலாக, இக் கண்ணிகளால் பாதிப்புற்ற 20 ஆண்களுக்கும் 6 பெண்களுக்கும் (இவர்களில் 5 பேர் தமது கணவர்களை கண்ணிவெடிகளில் இழந்தவர்கள்) கண்ணிகளை அகற்றும் பணியில் கம்போடிய கண்ணி ஆலோசனைக் குழு பயிற்சி அளித்துவருகிறது. சமூகத்தில் அனாதைகளாக ஆக்கப்பட்டிருந்த இவர்கள், இப்பொழுது சமூகத்துக்கான உன்னதமான பணியொன்றில் மதிப்பையும், தமக்கு ஒரு வருமானத்தையும் பெறுகிறார்கள். மாதமொன்றுக்கு சிவில் உத்தியோகத்தர் ஒருவரின் சராசரி வேதனம் 25 டொலர்களாக உள்ளபோது இவர்கள் 160 டொலர்களைப் பெறுகிறார்கள்.

தென்னாபிரிக்கா, இந்தியா, சுவீடன், மொஸாம்பிக், கனடா, அயர்லாந்து, பிரிட்டன், அமெரிக்கா உள்பட 20 நாடுகளின் 350 அங்கத்துவ அரசுசார்பற்ற நிறுவனங்கள் நிலக்கண்ணிகளுக்கு சர்வதேச தடையைக்கோரி பிரச்சாரம் செய்கின்றன. அக்டோபர் முற்பகுதிவரை மூன்று வாரங்களுக்கு வியன்னாவில் ஐ. நா. ஆதரவில் நடைபெறும் மாநாட்டில், சர்வதேச யுத்த நிலைமைகளுக்கு மாத்திரமன்றி, உள்ளூர் யுத்தங்களுக்குமான விதத்திலும், மற்றும் கண்டுபிடிக்கக் கடினமான, உலோகங்களற்ற கண்ணிகளைத் தடைசெய்யும் வகையிலும் கண்ணிவெடிகள் தொடர்பான உடன்படிக்கையை மீளமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. ❑

- 1993இல் 80 ஆயிரம் நிலக்கண்ணிகள் அகற்றப்பட்டுள்ளன.
- உலகம் முற்றிலும் இரண்டரை மில்லியன் கண்ணிகள் புதிதாகப் புதைக்கப்பட்டுள்ளன.
- ஒவ்வோராண்டும் 5 மில்லியனிலிருந்து 10 மில்லியன் கண்ணிகள் புதிதாகத் தயாரிக்கப்படுகின்றன.
- மேலும் 100 மில்லியன் கண்ணிகள் சேமிப்பிலுள்ளன.
- 7 மில்லியன் நிலக்கண்ணிகள் கம்போடியாவில் புதைத்து வைக்கப்பட்டிருப்பதாக கருதப்படுகிறது.



# பொஸ்னியா:

விமல் சொக்கநாதன்

'எமது வல்லமை அதிகரித்திருக்கும்போதுதான் எதிரியுடன் சமரசப் பேச்சுக்கு அமரவேண்டும்.'

இரும்புத் தலைவி மாக்கிரட் தச்சரின் தத்ரூபமான கருத்துக் கருவூலங்கள் இவை. பல நாடுகளில், பல சந்தர்ப்பங்களில் இந்தக் கருத்துக்கள் கடைப்பிடிக்கப்பட்டு வெற்றி அடைந்ததைக் கண்டிருக்கிறோம். இதனை அலட்சியம்செய்து, மாறான விதத்தில் நடந்து, பல சிக்கல்களில் பலர் மாட்டியிருப்பதையும் கவனித்து வருகிறோம்.

பொஸ்னிய விவகாரத்தில் தச்சர் அம்மையாரின் கொள்கை சரியென மேலும் நிரூபிக்கப்பட்டுள்ளது.

மூன்றரை வருடங்களாக அடாவடித்தனம் புரிந்துகொண்டிருந்தார்கள் பொஸ்னிய சேர்பியர்கள். 'இனச் சுத்திகரிப்பு' என்ற அநாகரீகப் பெயரில் பொஸ்னியாவின் முஸ்லிம்கள்மீதும் குறோயற் மக்கள் மீதும் வன்செயல்களைக் கட்டவிழ்த்து விட்டார்கள். இவர்களின் 'சண்டித்தனத்தின்' முன்னால் ஐ. நா. மட்டுமல்ல, எவருமே நிற்கமுடியவில்லை. ஐ. நா. மன்றத்தின் சமாதானத் தூதர்களை வெறும் கொசுக்களாக கருதினார்கள் பொஸ்னிய சேர்பியர்களின் தலைவர் கரடிச், இராணுவத் தளபதி மிலாடிச் இருவரும்.

பிரிட்டனின் ஓயன் பிரபு, அமெரிக்காவின் முதுபெரும் அரசியல் அறிஞர் சைரஸ் வான்ஸ் ஆகியோரின் அரசியல் சாணக்கியத்தனம் இவர்கள்முன் பலிக்கவில்லை. ஓயன் - வான்ஸ் சமரசத்திட்டம் காற்றில் பறந்தது.

ஐ. நா. மன்றம் உருவாக்கிய 'பாதுகாப்பு வலயங்களை' தகர்த்து எறிந்த சேர்பிய வெறியர்கள், அங்கு பாதுகாப்புக்காக தங்கியிருந்த முஸ்லிம்களைச் சித்திரவதை செய்தார்கள். உலக நாடுகளின் தலைமை மன்றமான ஐ. நா. மன்றத்தையே ஒரு நாடு அலட்சியம் செய்தபோது, அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்று அமெரிக்க தலைமைப்பீடம் அவசரமாக



ஏற்படுத்தியது.

செப்டம்பர் 6ஆம் தேதி அதிகாலையில் நேட்டோ கூட்டமைப்பின் போர் விமானங்கள் தலைநகர் சறயேவோவைச் சுற்றி முற்றுகையிட்டிருந்த பொஸ்னிய சேர்பிய நிலையங்களைத் தாக்கின. பொஸ்னிய சேர்பியர்களின் ஆயுத தளபாட கிட்டங்கிகள், அவற்றை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள், ஏவுகணை நிலையங்கள் அனைத்தின்மீதும் அமெரிக்க, பிரிட்டிஷ், பிரெஞ்சு, இத்தாலிய, டச்சு போர் விமானங்கள் சரமாரியாக குண்டு மழை பொழிந்தன. எட்ரியாற்றிக் மாகடலில் நங்கூரமிட்டு நின்ற ராக்ஷத விமானந்தாங்கிக் கப்பல்களிலிருந்து இந்தப் போர்விமானங்கள் பல புறப்பட்டன. மற்றவை, இத்தாலியில் உள்ள நேட்டோ தளங்களிலிருந்து புறப்பட்டன.

எத்தனையோ வருடங்களாக 'செய்வோம், செய்வோம்' என்று பயமுறுத்தியும், செய்யத் தயங்கிய இந்த நேட்டோ தாக்குதலை, இப்போது செய்யப்படத் தூண்டியது பொஸ்னிய சேர்பியர்களின் ஒரு திடீர்க் குண்டுவீச்சு. தலைநகர் சறயேவோவில் சந்தைமீது பொஸ்னிய சேர்பியர்கள் திடீரென குண்டு வீசியதில் சுமார் 40 பேர் உயிரிழந்தார்கள். அமெரிக்காவின் தலைமையில் நேட்டோ போர்விமானங்கள் குண்டுவீசி அழித்தது பொஸ்

பொஸ்னிய சேர்பியர்களுக்கு நீண்டகால ஆதரவு வழங்கியபின் தனது நியாயமான ஆலோசனைகளையும் அறிவுரைகளையும் கேட்க மறுத்தமைக்காக இவர்களை கைகழுவி விட்டிருந்த சேர்பிய அதிபர் மிலசோவிச், இவர்களுடன் மீண்டும் தொடர்பு கொண்டார். 'இப்போதாவது எனது அறிவுரையைச் செவிமடுத்து, வழிக்கு வருகிறீர்களா' என்று சேர்பிய அதிபர் கேட்டிருப்பார் போலும்.

அமெரிக்க சமாதானத் தூதர் ஹொல்புறூக் ஏற்பாட்டில், நியூயோர்க் நகரில் கூட்டப்பட்ட புதிய வட்டமேசை மகாநாட்டில் பொஸ்னிய சேர்பியர்கள் கலந்து கொண்டனர். இவர்களுடன், எதிரிகளான குறோயற் மற்றும் பொஸ்னிய முஸ்லிம் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

புதிய பொஸ்னிய நாடொன்று உருவாக்கப்படல்; அதற்கான அரசியல் சாசன அமைப்பு; இந்த பொஸ்னிய அரசில் பொஸ்னிய முஸ்லிம் பகுதி, பொஸ்னிய சேர்பிய பகுதி மற்றும் குறோயற் பகுதி ஆகியன அடங்குதல்; இவற்றைப் பிரதிபலிக்க தவணைக்கொருவர் முழு பொஸ்னியாவுக்கும் அதிபராக பதவி வகித்தல்; சுங்கம், நாணயம், கடவுச்சீட்டு, வர்த்தகம், எல்லைப் பாதுகாப்பு ஆகிய விவகாரங்கள் - இப்படி பல விஷயங்

# மாதானம் மலர்கிறதா?

கூடி ஆராய்ந்தது.

பொஸ்னிய விவகாரத்தை முற்றாக ஐ.நா. மன்றத்தின் பொறுப்பிலிருந்து விடுவித்து, தாமே பொறுப்பேற்பதா என்று அமெரிக்கா ஆராய்ந்தது. தன் ஐரோப்பிய நேசநாடுகளுடன் கூடிப்பேசியது.

பொஸ்னிய சேர்பியர்களை மீண்டும் ஒருமுறை, ஒரே ஒருமுறை எச்சரித்துவிட்டு, எச்சரித்தபடியே அவர்கள்மீது விமானத் தாக்குதல் நடத்துவது என்று அமெரிக்காவின் தலைமையில் 'நேட்டோ' எனப்படும் வட அத்தலாந்திக் உடன்படிக்கை நாடுகள் தீர்மானித்தன. பொஸ்னிய சேர்பிய குண்டர்களை நோக்கி நான்கு வருடங்களாக உறுமி, உறுமி குரல்மட்டும் எழுப்பிக்கொண்டிருந்த நேட்டோ என்ற காவல் நாய், அந்தக் குண்டர்கள்மீது முதல் தடவையாக பாய்ந்து கடித்து காயங்களை

பொஸ்னிய சேர்பிய குண்டர்களை நோக்கி நான்கு வருடங்களாக உறுமி, உறுமி குரல் மட்டும் எழுப்பிக்கொண்டிருந்த 'நேட்டோ' என்ற காவல் நாய். அந்தக் குண்டர்கள்மீது முதல் தடவையாக பாய்ந்து கடித்து காயங்களை ஏற்படுத்தியது.

னிய சேர்பியர்களின் திட்டங்களையும் ஆயுதங்களையும் மட்டுமல்ல, வல்லாதிவல்லர்கள், பெரிய வஸ்தாதுகள் என்று தம்மைக் கற்பனை செய்துகொண்டிருந்த பொஸ்னிய சேர்பியர்களின் மன உறுதியும் உடைத்து நொறுக்கப்பட்டது. சாதாரண மானுடர்களால் கொல்லப்படாமலிருக்க சாகாவரம்பெற்ற ராவணேஸ்வரன் வம்சம் தாமேதான் என்ற எண்ணம் அவர்களுக்கு.

களையும் இந்த நியூயோர்க் நகர சந்திப்பு ஆராயும். ஆனால், அது 'போர்நிறுத்தம்' பற்றி பேசமுடியாது என்றும் சிலர் அடம்பிடிக்கிறார்கள். இங்கேதான் தச்சர் அம்மையாரின் கருத்து செயல்படுகிறது.

நான்கு ஆண்டு காலமாக துன்புறுத்தப்பட்ட பொஸ்னிய முஸ்லிம் அதிபர் இப்போது வல்லமை அதிகரித்த நிலையில் பேசத் தயாராகிறார். நேட்டோவினால் பலவீனமாக்கப்பட்டுள்ள பொஸ்னிய சேர்பியர்களுடன் பேசவிருக்கிறார்.

"போர் நிறுத்தம் முதலில் ஏற்படட்டும்" என்று இப்போது கேட்பது பாவம் அந்த பொஸ்னிய சேர்பியர்கள்தான். பொஸ்னிய முஸ்லிம் அரசோ மறுத்துவருகிறது. பல நிபந்தனைகளை அது ஏற்படுத்தியிருக்கிறது.

இனச் சுத்திகரிப்பு நிறுத்தப்பட


வேண்டும்; தலைநகர் சறயேவோவுக்கு வராமல் துண்டிக்கப்பட்டுள்ள மின்சாரம், எரிவாயு போன்ற அத்தியாவசிய தேவைகளும், தடைகள் அகற்றப்பட்ட வீதி வசதிகளும் வழங்கப்படவேண்டும் என்று பொஸ்னிய முஸ்லிம்கள் வலியுறுத்தியிருக்கிறார்கள்.

இதற்கிடையே பொஸ்னியாவில் சமாதானத்தைக் கண்காணிக்க அனுப்பப்பட்ட ஐ. நா. சமாதானக் காவல்படை திருப்பி அழைக்கப்பட்டு, நேட்டோ படைகள் அங்கு ஈடுபடுத்தப்படவேண்டும் என்றும் திட்டம் ஒன்று அறிவிக்கப்பட்டுள்ளது.

> 'வல்லமை அதிகரித்திருக்கும்போதுதான் எதிரியுடன் சமரசப் பேச்சுக்கு அமரவேண்டும்.'
> – தச்சர் அம்மையாரின் கருத்து செயல்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் பொஸ்னியாவின் நான்கு வருட கலவர காலத்தில் முதல்தடவையாக அமெரிக்க துருப்புகள் அங்கு அனுப்பப்படலாம்.

அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் போன்ற நாடுகளின் படைகள் உள்பட, மொத்தம் 50 ஆயிரம் படைவீரர்கள் பொஸ்னியாவுக்கு அனுப்பப்படலாம். இதில் பாதிப்பங்கை அமெரிக்காவும், பிரான்ஸ், பிரிட்டன் போன்ற நாடுகள் சுமார் 15 ஆயிரம் பேரையும் அனுப்பக் கூடும். பொஸ்னியாவின் வரைபடம் புதிதாக வரையப்படும் போது, நிலப்பரப்பில் 51 சத வீதமான பகுதி முஸ்லிம், குறோயற் கூட்டணிக்கும், எஞ்சிய 49 வீதம் சேர்பியர்களுக்கும் வழங்கப்படலாம். நூலிழையில் உருவாக்கப்பட்டுள்ள இந்த சமாதான உடன் படிக்கை மூலம் சமாதானம் மலர்ந்து, சுதந்திரமான அமைதி நிலவும் போஸ்னியா மலர பல வருடங்கள் ஆகலாம். ❑




**295 Balham High Road**
**Tooting Bec, London SW17**
**Tel: 081-682 2585   Fax: 081-682 2575**

Rajah & Co
Solicitors
Raja Thavarajah LL.B

Fixed fee
(Residential & Commercial Properties)
&
a full range of legal services available.
Conveyancing,
Immigration,
Landlord
&
Tenants disputes,
Criminal Court and
Police Station work undertaken.

Legal Aid available.

# ஒஸ்லோ சமாதான உடன்படிக்கையில் சட்டபூர்வமாகும் இஸ்ரேலின் ஆதிக்கம்

## பாலஸ்தீனருக்கு 4 சதவீத நிலப்பரப்பில் மட்டுமே அதிகாரம்

**மைக்கல் ஜேன்சன்**


பலத்த ஆரவாரங்களுடன் செப்டம்பர் 28இல் இஸ்ரேல் பிரதமர் யிற்ஸாக் றாபினும் பாலஸ்தீன தலைவர் யசர் அரபாத்தும் கைச்சாத்திட்ட 'ஒஸ்லோ-2' உடன்படிக்கையின் மூலம் மேற்குக் கரைப் பகுதியில் இஸ்ரேலின் 28 ஆண்டுகால ஆக்கிரமிப்பு அகன்றுவிடப் போவதில்லை. உண்மையிலே, ஒஸ்லோ-2 உடன்படிக்கை அந்த ஆக்கிரமிப்பை நிரந்தரமாக்கி, அதைச் சட்டபூர்வமானது என்று பிரகடனம் செய்கிறது' என்று ஜெருசலேமிலிருந்து வெளியாகும் வாரப் பத்திரிகை ஒன்று கருத்து வெளியிட்டிருக்கிறது.

மேற்குக் கரையின் நிலப் பகுதியில் 73 சதவிகிதம் தொடர்ந்தும் இஸ்ரேலின் கட்டுப்பாட்டில் இருக்கலாம் என்றும், அங்கு வாழும் பாலஸ்தீனர்களில் 68 சதவீதமானோர் மீது இஸ்ரேல் தொடர்ந்தும் ஆதிக்கம் செலுத்தலாம் என்றும் ஒஸ்லோ-2 உடன்படிக்கை விதித்திருக்கிறது.

இஸ்ரேலிய ராணுவம் வெளியேறும் 6 நகரங்களில் மட்டுமே பாலஸ்தீனர்களுக்கு முழுமையான அதிகாரத்தை இஸ்ரேல் வழங்கியிருக்கிறது. சர்ச்சைக்குரிய ஹெப்ரோன் நகரின் நிர்வாகத்தில் பகிர்வு, மற்றும் மேற்குக் கரையின் சுமார் 400 கிராமங்களில் உள்ளூர் நிர்வாகப் பொறுப்பு மட்டும் பாலஸ்தீனர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. பாலஸ்தீனர்கள் தமது நிலப்பரப்பில் 4 சதவீதத்தில் மட்டுமே முழு நிர்வாகத்தைப் பொறுப்பேற்கிறார்கள். மொத்தத்தில் 23 சதவீத நிலத்தில் மட்டுமே அவர்களுக்கு நிர்வாகப் பகிர்வு வழங்கப்படுகிறது.

இந்த நிலைமையை மோசமாக்குவது போல பாலஸ்தின தேசிய நிர்வாகசபை

## சமாதானத்துக்கு அழைத்துவந்த பாதைகள்




**1947 ஐ.நா திட்டம்**

- பாலஸ்தீனத்தை இரு நாடுகளாக்கும் ஐ.நா.திட்டத்துக்கு அரபு நாடுகள் எதிர்ப்பு.
- 1948இல் நிர்ப்பந்தத்தின் மூலம் இஸ்ரேல் உருவானது. 1956/ 1967/ 1973இல் அரபு-இஸ்ரேல் யுத்தம்.



கிஸிங்கர்

**1973 ஜெனிவா மகாநாடு**

- அமெரிக்காவும் சோவியத் யூனியனும் சமாதான மாநாட்டுக்கு அழைப்பு.
- இஸ்ரேல், ஜோர்டான், எகிப்து கலந்துகொண்டன. சிரியா பகிஷ்கரிப்பு.
- இஸ்ரேல்- எகிப்து நடவடிக்கைக் குழுக்கள் நியமனம். சினாய், சுவெஸ் எல்லைகள் நிர்ணயம்.


சதாத்


பெகின்




**1978 காம்ப் டேவிட்**

- சினாயிலிருந்து இஸ்ரேல் வாபஸ்.
- எகிப்து மீண்டும் உறவு.
- 5 ஆண்டுகளில் பாலஸ்தீனியருக்கு பிரதேசங்களில் சுயாட்சி. (வழங்கப்படவில்லை).

**1982 அபிவிருத்திகள்**

- ஜோர்டானுடன் இணைந்த பிரதேசங்களாக்கும் றேகனின் திட்டத்துக்கு அரபு நாடுகள் எதிர்ப்பு.
- பாலஸ்தீனம் உருவாக்கப்பட்டால்: இஸ்ரேலை அங்கீகரிக்க அரபுக் குழுக்கள் இணக்கம்.திட்டத்தை. இஸ்ரேல் நிராகரிப்பு.


றேகன்


அரபாத்

**1988 PLO பாதை மாற்றம்**

- அல்ஜியர்சில் PLO பாராளுமன்றம் பயங்கரவாதத்தைக் கைவிட்டு , தமது பிரதேசங்களில் பலஸ்தீன அரசுக்கு இணங்கினால், இஸ்ரேலை அங்கீகரிப்பதாக அறிவிப்பு. இஸ்ரேல் நிராகரிப்பு.

**சுயாட்சி உடன்படிக்கை 1993**

- வளைகுடா யுத்தத்தின் பின், மட்றிட்டில் அமெரிக்க தரகர்களின் அரபு- இஸ்ரேல் சமாதான மாநாடு.
- இஸ்ரேல், PLO ஆகியவற்றுடன் நேரிலே இரகசிய பேச்சுவார்த்தைகளுக்கு ஏற்பாடு.
- இஸ்ரேல், PLO இடையே பரஸ்பர அங்கீகாரம்.
- செப். 13இல் வெள்ளை மாளிகை முன்றில் றாபின், அரபாத் கைகுலுக்கல் .


றாபின்

மேற்கொள்ளும் தீர்மானங்கள் அனைத்திலும் இஸ்ரேல் தனக்கென ஒரு தடுப்பு வாக்கு (வீட்டோ) உரிமையையும் வைத்திருக்கிறது. இதனால் பாலஸ்தீன நிர்வாக சபையின் பூரண சுதந்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது.

இஸ்ரேல் தனது ஆதிக்கத்தை இப்படி நீடித்திருப்பதன் மூலம் தனது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளை வளமடையாமல் பார்ப்பதோடு, வளம், அபிவிருத்தி ஆகியவற்றுக்குப் பொருத்தமற்ற பகுதிகளாகவும் அந்த பாலஸ்தீன பகுதிகளை மாற்றிக்கொண்டிருக்கிறது.

சமாதானம் வந்துவிட்டால் தமது நாட்டுக்கு சுபீட்சம் வந்துவிடும் என்று பாலஸ்தீனர்கள் நம்பிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், அபிவிருத்தியைக் குன்றச் செய்யும் இஸ்ரேலின் இந்த கொள்கைகளினால் பாலஸ்தீனத்துக்கு சுபீட்சம் வராமலேயே போய்விடும். இதனால் ஏமாற்றமடைந்த பாலஸ்தீன நிர்வாகத்தில் எதிர்காலத்தில் அரசியல் கொந்தளிப்பு ஏற்படவும் இடமிருக்கிறது.

“காஸா மற்றும் மேற்குக் கரைப் பகுதி ஆகியன 1967இல் இஸ்ரேலினால் கைப்பற்றப்பட முன்னர் வறிய பகுதிகளாக, புறக்கணிக்கப்பட்ட நிலப்பரப்புகளாக இருந்தது உண்மைதான். ஆனாலும் வேண்டுமென்று திட்டமிட்டு அபிவிருத்தி இப்பகுதிகளை எட்டாமல் இந்த வட்டாரத்தை வளம் குன்றிய பகுதியாக முழுமையாக மாற்றியது கடந்த 30 ஆண்டுகளாக இதனை ஆக்கிரமித்துவரும் இஸ்ரேல் தான்” என்கிறார் டாக்டர் சேரா ராய் என்ற ஹார்வாட் பல்கலைக்கழக ஆய்வாளர்.

ஒரு குடியேற்றவாத நாடு இன்னோர் நாட்டைக் கைப்பற்றி, அந்த நாட்டு மக்களையும் வளங்களையும் தமது லாபத்துக்காக சுரண்டுவதுபோலன்றி, இஸ்ரேல் பாலஸ்தீனம் என்ற நாட்டைக் கைப்பற்றி, அதன் நிலப்பரப்பையும், வளங்களையும் தன் யூத நாட்டுடன் ஒன்றிணைக்கவும், அந்த யூத நாட்டைக் கட்டி எழுப்ப பாலஸ்தீன மக்களைப் பயன்படுத்தவும் திட்டமிட்டது. பாலஸ்தீனர்களின் நாட்டைப் பறித்து அவர்களை அங்கிருந்து வெளியே விரட்டிவிடுவது இஸ்ரேலின் அடிப்படை அரசியல் நோக்கமாகும்.

1967இல் காஸா, மேற்குக்கரை ஆகியவற்றின் நிலப்பகுதியில் பாதிக்கும் மேற்பட்ட பகுதியை கைப்பற்றிய இஸ்ரேல், பாலஸ்தீன கிராமவாசிகளைச் சொந்த நிலமற்ற கூலிக்காரர்களாக மாற்றியது. நிலத்தை உழுது விவசாயம் செய்துகொண்டிருந்த பாலஸ்தீனர்களின் பொருளாதாரம், இஸ்ரேலின் உதவியை எதிர்பார்க்கும் பொருளாதாரமாக மாற்றப்பட்டது. விவசாய நிலம் குறைந்ததுபோல நீர் வழங்கு நிலமும் இஸ்ரேலினால் குறைக்கப்பட்டது. மேற்குக்கரை ஊற்றுக்களிலிருந்துவரும் நீரில் 80 சதவீதமும் காஸாவின் நீரில் 90 சதவீதமும் இஸ்ரேலினால் பறிக்கப்பட்டது. இதனால் பாலஸ்தீனர்களுக்குத் தேவையான விவசாய நீர் மட்டுமல்ல, குடிநீர்கூட பெருமளவு குறைக்கப்பட்டது.

1990,91இல் சுமார் 120 ஆயிரம் பாலஸ்தீனர்களுக்கு வேலை வழங்கிய இஸ்ரேல், பின்னர் அந்த எண்ணிக்கையை 20 ஆயிரமாக குறைத்தது. மேற்குக் கரையிலும் காஸாவிலும் பாதிக்கும் மேற்பட்ட மக்கள் வேலையற்றவர்களாக ஆக்கப்பட்டார்கள்.

பாலஸ்தீன மக்கள் உணவு உற்பத்தியில் தன்னிறைவு காணும் முயற்சிகளையும் இஸ்ரேல் முறியடித்தது. உணவு உற்பத்திக்கான வழிமுறைகளைக் கற்பித்த ஒருவரை ‘தீவிரவாதி’ என்று குற்றஞ்சாட்டி இஸ்ரேல் கைது செய்தது.

பாலஸ்தீன சமூகத்தவருக்கு கடன்களையும் உதவிகளையும் வழங்கிவந்த அரபு வங்கிகளை இஸ்ரேல் மூடியது. இஸ்ரேலிய வங்கிகளோ பாலஸ்தீனர்களுக்கு கடன்கள் வழங்க மறுத்தன. மூலதன முதலீடு செய்வோர்மீது கடுமையான வரிகளைச் சுமத்தி அவர்களை அக்கறை இழக்கச் செய்தது இஸ்ரேல். வெளிநாட்டு நன்கொடையாளர்கள் சின்னஞ்சிறு உதவிகளைச் செய்வது, ஒரு சிறிய சந்தையை இலவசமாகக் கட்டி வழங்குவது கூட இஸ்ரேலினால் தடை செய்யப்பட்டது. இஸ்ரேல் திட்டமிட்டுச் செய்த இந்த நடவடிக்கைகளினால் இஸ்ரேலின் விருப்பம்போல இரண்டரை லட்சம் பாலஸ்தீனர்கள் வெளிநாடுகளுக்கு புறப்பட்டார்கள்.

பாலஸ்தீனர்களின் அரசியல் சுதந்திரத்தை இஸ்ரேல் எதிர்ப்பதால் அபிவிருத்தி குன்றச் செய்யும் தனது செயல்களை இஸ்ரேல் தொடர்ந்து கடைப்பிடிக்கும் என்று டாக்டர் ராய் நம்புகிறார்.

எல்லைகள், துறைமுகங்கள், வீதிகள் அனைத்தையுமே இஸ்ரேல் கட்டுப்படுத்துவதால் பாலஸ்தீன சுயாட்சிப் பகுதிகளுக்குள் யார் வருகிறார்கள், என்ன வருகிறது என்பதை இஸ்ரேலே தீர்மானிக்கும். விரும்பும்போது அவற்றை மூடிவிடவும் இஸ்ரேலினால் முடியும்.

28 வருடங்களாக இஸ்ரேல் கடைப்பிடித்த கொள்கையை இப்போதைக்கு அது கைவிடுவது நடக்கக்கூடிய விடயமல்ல. மேற்குக்கரை, காஸா ஆகியவற்றின் இறைமையை அது இன்னும் ஏற்றுக்கொள்ளவில்லை. அந்தப் பகுதிகள்மீது தனக்குள்ள உரிமையைக் கைவிடவும் இல்லை.

முழுமையான ஒரு பாலஸ்தீன பகுதியை உள்ளடக்கிய மாபெரும் இஸ்ரேலை உருவாக்குவதுதான் யூதவாதத்தின் நீண்டகாலக் கனவாக இருந்துவருகிறது. ❑

**Ranjit Mano & Co Solicitors**

For
IMMIGRATION &
NATIONALITY MATTERS
HOME OFFICE &
AIRPORT INTERVIEWS
ASYLUM APPLICATION
WORK PERMITS
POLICE INTERVIEWS
CRIMINAL &
CIVIL LITIGATION

LEGAL AID WORKS
UNDERTAKEN

*N. Ranjithakumaran*
*S. Manogaran LLB*

107B HOE STREET
WALTHAMSTOW
LONDON E17 4SA

TEL: 0181-521 5757
FAX: 0181-521 8202

# ‘வாரிசுநாயகம்’

காப்பியகால மன்னராட்சிமுதல் கலிகால மக்களாட்சிவரை ஆட்சியாளர்கள் மாறியதெல்லாம் அவரவர்கள் சதிகளாலேயே. தசரதன் முதல் என். டி. ராமராவ் வரை கைகேயி முதல் லக்ஷ்மி சிவபார்வதி போன்ற ‘சதி’களால் அழிந்த ‘பதி’களே. பற்றற்றவனாகக் கருதப்படும் பரம்பொருளுக்கும் குடும்பம் கற்பித்து, அண்ணன் தம்பி, மாமனார் மருமகன் சண்டைக் காட்சிகளையெல்லாம் புராணக் கதைகளாகப் புனைந்துரைத்த இந்தியர்கள், அவை யாவும் கலியுகக் கண்கண்ட கடவுள்களாகிய அரசியல்வாதிகளின் திருக்கூத்தில், தெருக்கூத்தில் கேலிக்குரிய யதார்த்தங்களாகி வருவதைக் காண்கிறார்கள். இந்தியாவில் பொன்விழாக் கொண்டாடும் ஜனநாயகம் இன்னமும் மன்னராட்சி மாயையிலிருந்தும், குடும்பக் கூண்டின் உறவுப் பின்னல்களிலிருந்தும் விடுபடவில்லை. அரசியல்வாதிகள் தொண்டர்களை உறவுமுறை சொல்லியே அழைக்கிறார்கள். தொண்டர்களும் அப்படியே.



காந்தி; ‘காந்தித் தாத்தா’ ஆனார். நேரு; ‘நேரு மாமா’ ஆனார். அவரது மகள் இந்திரா ‘அன்னை’ ஆனார். இந்திராவின் மருமகள் சோனியாவும் இவர்களுக்கு அன்னையே. அண்ணாதுரை ‘அண்ணா’ ஆனார்; எனவே தொண்டர்கள், ‘தம்பிகள்’. கருணாநிதிக்கு அவர்கள் ‘உடன்பிறப்புகள்’. எம். ஜி.ஆருக்கு ‘ரத்தத்தின் ரத்தங்கள்’ (பேரன், பேர்த்திகளோ?). நேற்றுவரை செல்வியாக இருந்த ஜெயலலிதா திடீரென்று ஒரு மாலைப் பொழுதில் அன்னையானார்; அடுத்தசில மாதங்களில் மாமியானார், வளர்ப்பு மகனுக்கு திருமணம் செய்துவைத்து. திடீர் வளர்ப்பு மகன் என்பது தொடக்கத்தில் பலரது புருவங்களை உயர்த்தியது. அந்த வளர்ப்பு மகனின் திமணத்தையொட்டி மக்கள் ஒரு மாபெரும் உண்மையை புரிந்துகொண்டனர். அதாவது, ஜெயலலிதா ஒரு வித்தியாசமான அரசியல்வாதி. மற்றைய அரசியல்வாதிகள் வாரிசுகளுக்காக சொத்துகளைக் குவிக்கும்பொழுது, இவர் ஏற்கனவே குவித்த சொத்துகளுக்காக வாரிசு ஒன்றைக் கண்டுகொண்டார். உறவு சொல்லி அழைக்கப்படும் சொந்தங்களுக்குக் கிடைப்பவை வெறும் சொற்களே. ‘பொருள்’ என்பது அசல் சொந்தங்களுக்கே.

வார்த்தை அலங்காரத்தில் மதிமயங்கி, வாய்பிளந்து நிற்கும் மக்கள், ‘வாரிசு’ அரசியலை எதிர்ப்பதில்லை. மாறாக, ஆதரிக்கிறார்கள். அதனால்தான் எம்.எல்.ஏ. இறந்தால் அவரது வாரிசு எம்.எல்.ஏ.; பிரதமர் இறந்தால் அவரது வாரிசு பிரதமர். இப்படிப் பரம்பரை ஆட்சி தொடர்வதே இங்கு மக்களாட்சி.

வாரிசு அரசியலுக்கு எதிர்ப்பு வராமலில்லை. அதுவும் வாரிசுப் போட்டியினால் வருகிறது. ராமாயணத்தில் ராமன் காட்டுக்குப் போனான்; அது அன்று. இப்பொழுது காலம் மாறிவிட்டது அல் லவா? ‘ராமராவாயணத்தில்’ தசரதன் காட்டுக்கு

**ஜெயலலிதா ஒரு வித்தியாசமான அரசியல்வாதி. மற்றைய அரசியல்வாதிகள் வாரிசுகளுக்காக சொத்துகளைக் குவிக்கும்பொழுது, இவர் ஏற்கனவே குவித்த சொத்துகளுக்காக வாரிசு ஒன்றைக் கண்டுகொண்டார்.**

அனுப்பப்பட்டான். தெலுங்கு தேசம் என்ற கட்சியை அமைத்து, வரலாறு காணதவிதத்தில் 1983இல் முதல்வ ராகி, மறுவருடம் சிலநாள் பதவி இழந்து, போராடி அதனைப்பெற்று, பின்னர் தேர்தலில் தோற்று, மறுதேர்தலில் வெற்றிபெற்று 1994இல் மீண்டும் முதல்வ ரான ராமராவ், தன் மருமகன் சந்திரபாபு நாயுடுவினால் கட்சியிலிருந்தும் ஆட்சியிலிருந்தும் துரத்தியடிக்கப்பட்டார். நல்ல வேளை, அசல் தசரதனுக்கு நான்கும் ஆண்பிள்ளைகள். ஒரு பெண் இருந்திருந்தால்கூட அவரது மருமகன் அவரைக் காட்டுக்கு அனுப்பி ராமாயணத்தின் போக்கையே மாற்றியிருப்பார். கடவுள் தசரதனைக் காப்பாற்றினார்; ராமராவைக் காப்பாற்றவில்லை. மாமனார் ஆசனத்தில் மருமகன். "என் உறவினர்களே என் முதுகில் குந்திவிட்டார்கள்" என்று வெளிப்படையாக, வெட்கமின்றிப் பொது மேடைகளில் புலம்பினார் ராமராவ், தன் கைகேயி சகிதம். ஆட்சி நடத்தியது உறவினர்களுக்காக. முதுகில் குத்தப்பட்டால் மக்கள் எப்படி உதவிக்கு வருவார்கள்?

ஆந்திரப் பிரதேசத்தில் ஆள் மாறியதே தவிர ஆளும் கட்சி மாறவில்லை. மாறியுள்ள முதல்வரும் அதே குடும்பத்தினர்தான். அப்படி ஒரு சூழ்நிலை தமிழ்நாட்டில் உருவாக முடியுமா என்று தமிழ்நாட்டு அரசியல்வாதிகள் சிலர் நினைக்கிறார்கள். ஜெயலலிதாவுக்கு முன்பே திரைத்துறையில் நுழைந்தவர், ஜெ.க்கு முன்பே முதல்வரானவர் தெலுங்குதேச கட்சியின் நிறுவுனர். அவரே பந்தாடப்பட்ட பிறகு, தொடக்க காலத்தில் அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர் அல்லாத, முதல் தேர்தலில் தோற்றுப்போன ஜெயலலிதாவைக் கட்சியிலிருந்தும், ஆட்சியிலிருந்தும் விரட்டியடிக்கமுடியாதா என்ற நினைப்பு கட்சியில் சிலரிடத்திலும், கட்சிக்கு அப்பால் பலரிடத்திலும் இருக்கிறது. நினைப்புகள் எல்லாம் வெறும் கனவுக் குதிரைகள். மூன்று வருடங்களுக்கும் மேலாக பலர் ஜெயலலிதாவைப் பதவியிறக்கம் செய்ய படாதபாடு படுகிறார்கள். வல்லடி, கல்லடி, வம்படி, வழக்கடி என்று ஜெ. எதிர்ப்புகளையெல்லாம் எப்படியெல்லாமோ இதுவரை சமாளித்து வந்திருக்கிறார். ஆனால் இன்று நிலைமை அப்படியல்ல. இந்த இதழ் உங்கள் கைகளில் கிடைக்கும்பொழுது அவர் முதல்வர் ஆசனத்திலிருந்து இறங்கி, குற்றவாளிக் கூண்டில் நின்றாலும் ஆச்சரி யப்படுவதற்கில்லை.

ரதங்கள், மாடங்கள், உப்பரிகைகள், கோட்டை கொத்தளங்கள் என்று அமர்க்களப்படுத்தி தன் திடீர் வளர்ப்பு மகனுக்கு 'கின்னஸ் சாதனை' திருமணம் நடத்திய ஜெயலலிதா, ஒரு ரூபாய் சம்பளத்தில் நூறு கோடி ரூபாய் சாதனை படைத்ததற்காக வருமானவரிக் கேள்விக் கணைகளுக்கு இலக்காகி இருக்கிறார். அவரது வளர்ப்பு மகன், அந்த மகனின் இரண்டு அண்ணன்கள், இவர்களது சித்தியாகிய ஜெயலலிதாவின் ஆருயிர்த் தோழி, உடன் பிறவா சகோதரி சசிகலா ஆகிய அனைவரும் அந்நியச் செலாவணி மோசடியில் ஈடுபட்டிருந்ததாக மத்திய அரசு நிதித்துறையின் கண்காணிப்பில், விசாரணையில் இருக்கிறார்கள். 'எனக்குத் தெரியாமலேயே எல்லாம் நடந்துவிட்டது; இவர்கள் என்னை ஏமாற்றிவிட்டார்கள்' என்றெல்லாம் ஜெயலலிதா இனி ஒதுங்கிக்கொள்ள முடியாது. பொருளாதாரக் குற்றத்தடுப்புத் துறையினரால் தேடப்பட்டுவந்து, தலைமறைவானவராகக் கருதப்பட்ட, வளர்ப்பு மகனின் அண்ணன் தினகரன், மாநிலக் காவல்துறையின் முழுப் பாதுகாப்புடன் மணவிழாவில் லட்சக் கணக்கானவர்கள் முன்னிலையில் கலந்துகொண்டார். முதல்வர் ஜெயலலிதாவினால் முக்கிய புள்ளிகளுக்கு அறிமுகப்படுத்தப்பட்டார். குற்றவாளியாகக் கருதப்படும் ஒரு நபரை வேறு எவராவது இப்படிப் பதுக்கியும் பகிரங்கப்படுத்தியும் நடந்துகொண்டிருந்தால் குற்றவாளிக்கு உதவிசெய்த சட்டப்பிரிவின் கீழ் கைது செய்யப்பட்டிருப்பார். ஆனால், ஜெயலலிதா சட்டங்களுக்கு அப்பாற்பட்டவர் என்று நினைத்துக்கொண்டிருக்கிறார். ஒரு வழக்கில் நீதிபதி ஒருவர் முதல்வர் சாதாரண மக்களுக்கு இணையானவர் அல்லர்; மேலானவர் என்று சொல்லி, பின்னர் அந்த வாசகத்தை நீக்கினார்.

அதிகாரம், அகங்காரம், ஆடம்பரம் எல்லாமே எல்லைகளுக்கு அப்பால் என்ற நிலையில் வேறு எவராயினும் இன்று குற்றவாளிக் கூண்டில் நின்றிருக்க வேண்டும். இதுவரை தப்பித்துள்ள ஜெயலலிதா இனி அகப்பட்டுக் கொள்வார். வளர்ப்பு மகன் திருமணம் அவருக்கு இனி அரசியல் விவாகரத்தாக மாறலாம். செலவழித்த பணத்தின் அளவைவிட முக்கிய குற்றம் அந்நியச் செலாவணி மோசடியாளர்களுடனான அவரது நேரடித் தொடர்பு. 'குற்றவாளிகளாகத் தூக்குத் தண்டனை பெறப்போகிறவர்கள் ஆற்றில் மூழ்கி, விபத்தில் சாகமாட்டார்கள்' என்பது ஓர் ஆங்கிலப் பொன்மொழி. ஜெயலலிதாவின் கதியும் அப்படித்தான் முடியும்போல் இருக்கிறது. எதிர்க்கட்சித் தலைவியாக இருந்தபோது அப்போதைய முதல்வர் கருணாநிதியைப் பார்த்து, "ஒரு கிரிமினல் பட்ஜெட் உரை படிப்பதா?" என்று சட்டசபையில் கேட்டார். இன்று அவரே



மக்கள் மன்றத்தில் பயங்கரப் பொருளாதார குற்றவாளியாக நிற்கிறார். இதுதான் காலத்தின் கோலம். இதுமட்டு மல்ல, நினைத் தபடியெல்லாம் மந்திரிகளைப் பந் தாடினார்; மூத்த தலைவர்களைக் கட்சி யைவிட்டு நீக்கினார். கடை சிப் பலி இராம. வீரப்பன். இதற் காகவே தனது சபதத்தை விட் டுக்கொ டுத்து ஆளுநர் சென்னா ரெட்டியைச் சந்தித்தார். இராம. வீரப்பனை மந்திரி பதவியிலிரு ந்து தள்ளினார்; பிறகு கட்சியிலி ருந்தும் நீக்கினார். இதுவரை நீக்க ப்பட்டவர்கள் ஜெயலலிதாவுக்கு பெரிய சவாலாக உருவாகவி ல்லை. ஆனால், இராம. வீரப்ப னின் நீக்கம் ஆட்சியிலும் கட்சி யிலும் திருப்பங்களை ஏற்ப டுத்தும்.




வீரப்பன். எம்ஜி யாருடன் நீண்டகாலத் தொடர்பு கொண்டிருந்தவர். தொழில் மற்றும் அரசியல் வழி வகைகளில் பெரிய ஊழல் குற்றச் சாட்டுகளுக்கு இலக்காகாதவர். அடாவடியாகப் பேசாதவர். பொறுமை காப்பவர். எல்லாவற்றுக்கும் மேலாக ஜெய லலிதாவின் நாள்கள் எண்ணப்பட்டுவரும் வேளை யில் கட்சியிலிருந்து நீக்கப்பட்டவர். அனுதாபமும் ஆதரவும் அவருக்கு எலும்பும் சதையுமாக இருந் தாலும் அவரது அடுத்த அரசியல் அவதாரத்துக் கான ஜீவனை அவர் இன்னொரு நடிகரிடமிருந்தே பெறவேண்டியிருக்கிறது. அவர் தான் சூப்பர் ஸ்டார் என்று புகழப்படும் ரஜனி காந்த்.

நீக்கப்பட்ட மற்றவர்களிலி ருந்து பெரிதும் மாறுபட்டவர் வீரப்பன். எம்ஜி யாருடன் நீண்ட காலத் தொடர்பு கொண் டிருந்த வர். தொழில் மற்றும் அரசியல் வழிவகைகளில் பெரிய ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு இலக்காகாத வர். அடாவடியாகப் பேசாதவர். பொறுமை காப்பவர். எல்லாவற் றுக்கும் மேலாக ஜெயலலிதாவின் நாள்கள் எண்ணப்பட்டுவரும் வேளையில் கட்சியிலிருந்து நீக் கப்பட்டவர். அனுதாபமும் ஆதர வும் அவருக்கு எலும்பும் சதையு மாக இருந்தாலும் அவரது அடுத்த அரசியல் அவதாரத்துக் கான ஜீவனை அவர் இன்னொரு நடிகரிடமிருந்தே பெறவேண்டியிருக் கிறது. அவர் தான் சூப்பர்ஸ்டார் என்று புகழப்படும் ரஜனி காந்த். முன்னாள் பஸ் கண்டக்டர்; இந்நாள் நடிகர்; வருங்கால முதல்வர் என்று மற்றவர்களால் கனவு காணப்படுபவர். முதல்வர் ஜெயலலி தாவை மேடையில் வைத்துக்கொண்டே அவரைக் கடிந்து கொண்டவர்; சிவாஜி கணேசனுக்கு உரிய மரியாதை ஜெய லலிதா தரவில்லை என்று பகிரங்கமாகப் பேசியவர். வெடி குண்டுக் கலாச்சாரத் தைக் கட்டுப்படுத்தாத அரசு என்று இன் னொரு விழாவில் பேசியவர். அடுத்த முறை ஜெயலலிதா தேர்தலில் வென்றால் இந்த மக்களை ஆண்டவனால்கூட காப் பாற்ற முடியாது என்று அறிக்கை விட்டி ருப்பவர். அரசியலில் ஈடுபடப்போகிற வர்; ஆனால், உடனடியாக இல்லை என்று சொல்லியிருக்கிறார். அதற்கு அவர் சொல்லாத காரணமும் ஒன்று உண்டு. கடந்த இரண்டு, மூன்று வருடங் களில் எல்லா எதிர்ப்புகளையும் வன்மு றைக் கும்பல்கள்மூலம் பயமுறுத்தி எதிர் கொள்பவர் ஜெயலலிதா. வெறியர் களை யும், கூலிக்கு வேலை செய்பவர்களையும் வன்முறையாளர்களையும் வளர்த்து விட் டிருக்கிறார். ஏதாவது ஒரு காரணத்தி னால் ஜெயலலிதா முதல்வர் பதவியிலிரு ந்து இறங்கினால், இறக்கப்பட்டால் அவரது பணபலமும், படைபலமும் நிச் சயம் குறைந்து போகும். அப்பொழுது ரஜனி காந்த் களத்தில் இறங்குவார். போகிற போக்கைப் பார்த்தால் அந்த நாளும் தொலைவில் இல்லை என்றே தோன்றுகிறது. ஆனால், இந்த நேரத்திலும் தன் கட்சியின் துணை இல்லாமல் டெல்லியில் யாரும் ஆட்சி அமைக்க முடியாது என்று வாய்ப்பந்தல் போடுகிறார் ஜெயலலிதா. கவர்ச்சிகரமான தொரு மாற்று நபர் கிடைத்தால் ஜெயல லிதாவைக் கைகழுவி விடலாம் என்ற முடிவுக்கு தள்ளப்பட்டுள்ள பிரதமர் நரசிம்ம ராவ், ஜெ. மீதான அரசுவழி நடவடிக்கைகளைத் தீவிர மாக முடுக்கிவிட்டார். ஜெ. சிம்மாச னத்திலிருந்து இறங்கினால் ரஜனி வீதிக்கு வருவார். காங்கிரஸ் அப் பொழுது அவருடன் கை கோத்துக் கொள்ளும் என்பது இப் போதைய எதிர்பார்ப்பு. இங்கே ஜெ. யைத் தவி ர்க்கும் அதே நேரத்தில் வடக்கே சோனியாவையும் அனுசரித்துச் செல்ல விரும்புகிறார் நரசிம்ம ராவ். ஒருவர் நீங்கலாக ராஜீவ் காந்திக்கு நெருக்கமானவர்கள் அவரது அமை ச்சரவையில் சேர்த்துக்கொள்ளப் பட்டிருக்கிறார்கள். வடக்கிலும் தெற்கிலும் செல்லுமிடங்களிலெல் லாம் சோனியா காந்தி அமோக வர வேற்பு பெற்று வருகிறார். வாரிசுக ளுக்கு இன்றும் அரசியல் அரங்கில் உள்ள மதிப்பை இது புலப்படுத்து கிறது. நாளை சோனியாவின் மகன் ராகுல் காந்திக்கும் மகள் பிரியங்கா வுக்கும் இதே வர வேற்பும் ஆதரவும் கிடைக்கலாம். அரச குடும்பங்க ளுக்கு அடிமைப் படுதல் இந்தியர்க ளின் பழக்க தோஷம்.

நேரு குடும்பம் மட்டுமல்ல, நரசிம்ம ராவ் தொடங்கி, காங்கிரசிலும் பிற கட்சிக ளிலும் ஆட்சியாளர்களின் சொந்தபந்தங் கள் அரசியலிலும் ஆட்சியிலும் பெரு மளவு இடம்பெற்றிருக்கிறார்கள். தொகுதி களும் பதவிகளும் பத்திரப்பதிவு செய்யப் பட்ட சட்டத்தில் இடமில்லை. அதனா லென்ன, மக்களுக்கு சட்டம், அரசியல் வாதிகளுக்கு சட்டத்துக்குப் புறம்பான நடைமுறைகள். அதில் ஒன்றே வாரிசு அர சியல். இப்படி வாழையடி வாழையாக எமது ஜனநாயகம் 'வாரிசுநாயகமாக' தொடர்கிறது. வாரிசுகள் 'பெரிசு'களின் சொத்து. நாடு வாரிசுகளின் சொத்து. வரி களும் கடன் சுமையும் மக்களின் சொத்து. வாழ்க ஜனநாயகம். ❑

- தசரதன் முதல் என். டி. ராமராவ் வரை கைகேயி முதல் லக்ஷ்மிசிவபார்வதி போன்ற 'சதி'களால் அழிந்த 'பதி'களே.
- வளர்ப்பு மகன் திருமணம் அவருக்கு இனி அரசியல் விவாக ரத்தாக மாறலாம்.



1992இல் ஆரம்பிக்கப்பட்ட வேலைகள் மூன்று ஆண்டுகளில் நிறைவுற் றிருக்கின்றன. பல்கேரியாவிலிருந்தும், இத்தாலியிலிருந்தும் இந்த சுண்ணக் கற்களும் பளிங்குகளும் கப்பல்களில் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டு, இரண்டு ஆண்டுகளாக ஆயிரத்து ஐநூறுக்கும் மேற்பட்ட சிற்பிகள்

# "கண்டறியாதன கண்டேன்"

ஆலயம் - இது வழிபாட்டுத் தலம் மாத்திரமல்ல. இங்கு; நேரம் நின்றுவிடுகிறது. மனம் நிலைத்துவிடுகிறது. மனிதனில், இயற்கையில், கடவுளில் மறைந்துள்ள இசையைத்தேடி ஆத்மா சுதந்திரமாக சஞ்சரிக்கிறது.

ஆலயம் என்பதுபற்றிய சிறுகுறிப் பொன்றில் பார்த்த இவற்றை அநுப வித்த நேரம்.

'நீஸ்டன்', லண்டனின் வட மேற்குப் பகுதியில், பெரும்பாலும் கைத்தொழிற் பேட்டைகளும் குடி மனைகளும் நிறைந்த நகர். இங்கிலாந்தின் மிகப் பிரபல்யமான விளையாட்டரங்கைக் கொண்டதும், இந்தியர்கள் செறிந்து வாழும் ஒரு பகுதியுமான 'வெம்பிளி'க்கு அணித்தாகவுள்ளது.

இங்கு, 'நாழிகை' அலுவலகத்தி லிருந்தும்கூட இரண்டு மைல்களுக் குள்ளாக, எவரையுமே வியக்கவைக்கும் வண்ணம் முழு சிற்ப வேலைகளுடன், முற்றிலும் பளிங்கினாலான பிரமாண் டமான இந்து ஆலயம் ஒன்று தோன்றி யிருக்கிறது. இந்தியாவுக்கு வெளியே இத்தகைய நுணுக்கமான வேலைப்பாடு களுடன் மிகப் பெரிய அளவில் நிருமா ணிக்கப்பட்ட ஆலயம் இதுவேயென்று கூறப்படுகிறது.

இந்து சிற்ப சாஸ்திரத்துக்கு முற்றி லும் அமைவாக பளிங்கில் செதுக்கப் பட்ட சிற்ப வேலைப்பாடுகளுடன் ஆலயம் நிர்மாணிக்கப்பட்டுள்ளபோது, ஆலயத்துடன் இணைந்த பிரமாண்ட மான கலாச்சார மண்டபம் முற்றிலும் தேக்கு மரங்களில் செதுக்கப்பட்ட நுண் ணிய வேலைப்பாடுகளால் நிறைந் திருக்கிறது. இம் மரவேலைப்பாடு இந்தியாவில் மாத்திரமல்ல, உலகிலேயே கடந்த 100 ஆண்டுகளில் மேற்கொள் ளப்பட்டிருக்காத பிரமாண்டமானது என்று குறிப்பிடப்படுகிறது.

சுவாமி நாராயண் மிஷனால் கட் டப்பட்ட சுவாமி நாராயண் ஆலயம் இது. பிரதான மூர்த்தியாக சுவாமி நாராயண் பிரதிஷ்டை செய்யப்பட்டு, சிவன் - பார்வதி, விநாயகர், ராதா - கிருஷ்ணா, இராமர் - சீதை, ஹனுமன் விக்கிரகங்களும் பிரதிஷ்டை செய்யப் பட்டுள்ளன.

ஒன்றரை ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்த ஆலய கட்டடம், 7 கோபுரங் களையும் 6 விமானங்களையும் கொண் டிருக்கிறது. பிரதான கோபுரம் 70 அடி உயரமானது. 2 ஆயிரத்து 828 தொன் பல்கேரியன் வெளிர் மஞ்சள் சுண்ணக் கற்களும், 2 ஆயிரம் தொன் வெள்ளை இத்தாலிய, இந்திய பளிங்குக் கற்களும், 127 தொன் கருங்கற்களும் கொண்டு அமைக்கப்பட்டுள்ள இவ் வாலயம், 193 தூண்களைக் கொண் டிருக்கிறது.

அங்கு வேலையில் ஈடுபட்டார்கள். ராஜஸ்தானில் இந்த சிற்ப வேலைகள் இடம்பெற்றன. இவை, பின்னர் மீண் டும் கப்பல்களில் லண்டனுக்குக் கொண்டுவரப்பட்டு நிருமாணிக்கப்பட்டிருக்கிறது. சுண் ணக்கற்கள் வெளிப்புறத்திலும், பளிங்குக் கற்கள் உட்புறத்திலுமாக அமைந்துள்ளன. இந்த நிருமாண வேலையில் எவ்வித உருக்கு உலோ கமும் பயன்படுத்தப்படவில்லை. முழு மையும் பல்வேறு வகை வகையான சிற்ப வடிவங்கள். அவற்றிற்சில, சில சம்பவங்களைச் சித்தரிக்கின்றன. தென்னிந்திய ஆலய சிற்ப வடிவங்களி லிருந்து இவை மாறுபட்டவைதான்.


கூடுமானவரை இயற்றை ஒளியின் பிரகாசத்தை உள்வாங்கும் விதத்திலான கட்டட நிர்மாணம். பளிங்குத் தரைகள் உகந்த அளவில் நிலக்கீழ் சூடேற்றலைக் கொண்டிருக்கின்றன. இந்த நாட்டின் கட்டட நிர்மாண தேவைகளும் பின்பற் றப்பட்டுள்ளன.

கலாச்சார மண்டபம் இரண்டாயிரம் பேர் அமரக்கூடிய பிரார்த்தனை மண் டபம், விளையாட்டு மண்டபம், திருமண மண்டபம், மாநாட்டு மண்டபம், நூல்நி லையம் போன்றவற்றைக் கொண் டிருக்கிறது. பல்வேறு விதமான மலர்களின் சித்தரிப்பைக்கொண்ட 'ஹவெலி' முன்றில் கட்டடக்கலை மர

**இந்தியாவுக்கு வெளியே இத்தகைய நுணுக்கமான வேலைப்பாடுகளுடன் மிகப் பெரிய அளவில் நிருமாணிக்கப்பட்ட ஆலயம் இதுவேயென்று கூறப்படுகிறது.**

பில் இக் கலாச்சார மண்டபத்தின் மர சிற்ப வேலைப்பாடுகள் அமைந்திருக்கின்றன. 9 ஆயிரம் சதுர அடி பரப்பளவை இவை கொண்டிருக்கின்றன. பர்மா தேக்கு, ஆங்கிலேய ஒக் மரங்கள் இதில் பயன்படுத்தப்பட்டுள்ளன. உத்தர பிரதேசம், ராஜஸ்தான், வங்காளம் ஆகிய இடங்களில் இவை செதுக்கப்பட்டு இங்கு கொண்டுவரப்பட்டிருக்கின்றன. 226 ஆங்கிலேய ஒக் மரங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளபோது, சூழல் பாதுகாப்பை கருத்திற்கொண்டு டெவணில் 2 ஆயிரத்து 300 ஒக் மரங்கள் மீள்நடுகை செய்யப்படுகின்றன.

மண்டபத்தில் விரிக்கப்பட்டுள்ள கம்பளங்களும் சிற்ப வேலைப்பாடுகளுக்கு ஏற்றாற்போன்ற விசேடமான வண்ண வடிவமைப்புடன் ஐரிஷ் கம்பனி ஒன்றினால் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. இது குஜராத்தி ஆடையலங்கார வடிவமைப்பைப் பிரதிபலிக்கிறது. குஜராத்தி சமூகத்தவர்களே இந்த சுவாமி நாராயண் மிஷனில் பெருமளவில் அங்கம் வகிக்கின்றனர். பிரிட்டனில் வாழும் 13 லட்சம் ஆசியர்களில் மூன்றில் ஒரு பங்கினர் இந்துக்கள். உலக நாடுகளில் வாழும் இந்துக்களின் எண்ணிக்கையில் இது பத்தாவது ஆகும். இவர்களில், சுமார் 20 ஆயிரம் பேர் சுவாமி நாராயண் பீடத்தைச் சார்ந்தவர்கள்.





1970களில், இடி அமீன் காலத்தில் உகண்டாவிலிருந்தும், கென்யாவிலிருந்தும் பிரிட்டனுக்கு வந்து சேர்ந்தவர்களே இவர்கள். பிரிட்டனிலும் தங்கள் வாழ்வை வளமாக வேரூன்ற வைத்திருக்கிறார்கள். இந்த ஆலயமும் அதன் முழுமையான ஒரு வெளிப்பாடே. ஆகஸ்ட் 20ஆம் தேதி ஆலயத்தின் பிரதிஷ்டை வைபவம் நடைபெற்றபோது மகாராஷ்டிரம், குஜராத்தி ஆகிய மாநிலங்களின் முதலமைச்சர்கள், பாரதிய ஜனதா கட்சியின் தலைவர் எல். கே. அத்வானி ஆகியோருடன், பிரிட்டிஷ் உள்துறைச் செயலாளர் மைக்கல் ஹொவார்ட்டும் கலந்துகொண்டிருந்தார். மைக்கல் ஹொவார்ட் தன்னுடைய பேச்சில் பகவத் கீதையை மேற்கோள்காட்டிப் பேசியதோடு, 'பிரிட்டிஷ் வாழ்வில் இந்து மதம் முக்கியமானதொரு பங்கை எப்போதுமே வகிக்கும்' என்றும் குறிப்பிட்டார்.

இங்கிலாந்தில் ஏற்கனவே பல இந்து ஆலயங்கள் இருக்கின்றன. லண்டனில் விம்பிள்டன் விநாயகராலயம், ஹைகேற் முருகன் ஆலயம், ஈஸ்ற்காம் முருகன் ஆலயம் மற்றும் ஈஸ்ற்காம் லக்ஷ்மி நாராயண் ஆலயம் என்பன நம்மவர்கள் வழிபடுகின்ற ஆலயங்கள். இவற்றுள் ஹைகேற் முருகன் ஆலயம் ஐரோப்பாவின் பெரிய ஆலயம் என கருதப்பட்டு வந்தது. இவைதவிர, அண்மைக்காலங்களில் இன்னும் சிலவும் உருவாகியுள்ளன. ஈலிங் துர்க்கை அம்மன் ஆலயம், லூயிஷம் சிவன் ஆலயம் என்பன அவை. இன்னமும் சில ஆலயங்களை அமைப்பதற்கான முயற்சிகளும் நடைபெறுகின்றன. ஆக, இவ்வாலயங்களின் கோபுரங்கள் எதனையும் வெளியே வீதியில் நின்று நாம் காணவியலாது. அதற்கான அநுமதியை பிரிட்டிஷ் அரசு மறுத்துவந்தது. வழிபாடற்று, விற்பனை யாகும் கத்தோலிக்க தேவாலய கட்டடங்களிலேயே இந்த இந்து ஆலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன. வெளியிலே பெருமளவு மாற்றங்கள் எதனையும் செய்யாது, உள்ளே மாத்திரம் அழகான கோபுரங்களுடன் இவை அமைந் திருக்கின்றன. ஆனாலும், மசூதிகளுக்கு ஏற்கனவே அநுமதி அளிக்கப்பட்டிருந்தது. ஜப்பானிய பௌத்த விகாரை ஒன்றும் தேம்ஸ் நதிக்கரையில் உள்ளது. இப்பொழுது, இந்த நீஸ்டன் சுவாமி நாராயண் ஆலயம்தான், திறந்த நிலப்பரப்பில், இந்து ஆலயமாகவே கட்ட

**இம் மரவேலைப்பாடு இந்தியாவில் மாத்திரமல்ல, உலகிலேயே கடந்த 100 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்டிருக்காத பிரமாண்டமானது என்று குறிப்பிடப்படுகிறது.**

அநுமதிக்கப்பட்ட முதலாவது ஆலயம். வாக்கு, பணபலம் இதற்கானகாரணமாக இருக்கலாம் என்று கருத்துத் தெரிவித்தார் ஒருவர்.

குஜராத்தி சமூகத்தவர்கள் குறிப்பாக பெரும் வர்த்தக சமூகத்தவர்களாகவும் திகழ்கிறார்கள். குறுகிய காலத்தில் இந்த ஆலயத்தை இத்தகையதொரு விதத்தில் நிருமாணிக்க முடிந்ததில் இதுவும் ஒரு காரணமாகலாம். பிரிட்டனின் தேசிய பத்திரிகைகள், தொலைக்காட்சிகளில் பெருமளவு முக்கியத்துவத்தை இவ்வாலயம் பெற்றிருக்கிறது. ஆலய நிர்வாகிகள் மிகச் சிறந்த முறையில் சகல துறைகளிலும் செயல்படுகிறார்கள். பிரபல வர்த்தகர் ஒருவரான யோகேஷ் பட்டேல் பத்திரிகைத் துறையைக்கவனிக்கிறார். அவர் தான் ஆலய பகுதிகள் அனைத்தையும் கூட்டிச்சென்று காண்பித்தார். மெருகூட்டும் சிற்சில வேலைப்பாடுகள் சிற்சில சிற்பங்களில் அப்போதும் நடைபெற்றுக்கொண்டிருந்தன. "பிரதிஷ்டை தினத்தன்று செய்துமுடித்துவிட இயலாதுபோய் விட்ட சிற்சில நுண்ணிய வேலைகளை, அத்தகைய குறைகள் எதனையுமே விட்டு வைக்கக்கூடாது என்பதற்காக செய்து கொண்டிருக்கிறார்கள்" என்றார் பட்டேல். விக்கிரகங்கள் ஆலயத்தில் பிரதிஷ்டை செய்யப்படுவதற்கு முன்னதாக லண்டன் மாநகரின் 'ஹைட் பார்க்' கிலிருந்து ஊர்வலமாகக் கொண்டுவரப்பட்டன. அப்போது, இது சிலவிதங்களில் இனவிரோத உணர்வுகளத் தூண்டுவதாக அமைந்துவிடாதா என்று சிலர் அபிப்பிராம் கொண்டதுண்டு. ஆனால், அப்படியன்றி, எல்லோரையும் கவர்ந்து, அமைதியூட்டும் விதமாகவே இந்த ஆலயம் தென்படுகிறது. கணிசமான அளவு ஆங்கிலேயர்கள், பாடசாலை மாணவர்கள் ஆலயத்தைச் சுற்றிப் பார்வையிட்டுக் கொண்டிருந்தனர். வழிபாட்டுத் தலமாக மாத்திரமல்லாது, இத்தகைய ஒரு வேற்று நாட்டுச் சூழலில் சமூகத்துக்கு வேண்டிய பல்வேறு சேவைகளை, தேவைகளையுடைய கலாச்சார மையமாகவும் இது திகழ்கிறது. ஆலயத்தின் கீழ் மாடியில் நிரந்தரமாக அமைக்கப்பட்டுள்ள இந்து மதம் தொடர்பான கண்காட்சி எவரும் எளிதாக, தெளிவாக புரிந்துகொள்ளும் விதத்தில் வெகு பக்குவமாக அமைக்கப்பட்டிருக்கிறது.



ஆக, இந்த ஆலயத்தின் நிருமாணத் தொகையை வெளிப்படுத்த நிருவாகத்தினர் விரும்பாவிட்டாலும், கட்டடப்பொருள்களுக்கு மாத்திரம் 30 லட்சம் ஸ்ரேர்லிங் பவுண்கள் ஆகியிருக்குமென கணிக்கப்படுகிறது. "இப்படியொன்றைச் செய்து முடிப்பதற்கு எமக்கு உள்நின்று ஊக்குவித்து, உறுதுணையாக விளங்குபவர் சுவாமி மகாராஜ். அவர் அளித்த உந்துதல்தான்" என்கிறார் பட்டேல். சுவாமி நாராயண் இந்து மிஷனின் தற்போதைய, ஐந்தாவது ஆத்மீக தலைவர் புஜ்ய பிரமுக் சுவாமி மகாராஜ்.

ஆகஸ்ட் 21, 22ஆம் தேதிகளில் இங்கிலாந்திலும் ஏனைய ஆலயங்களில் விநாயகர் விக்கிரகங்கள் பால் அருந்திய போது, அப்படியான ஆரவாரம் எதுவும் இங்கு இருக்கவில்லை. இதுபற்றி திரு பட்டேலிடம் கேட்டபோது, "நாம் தினமும் கடவுளுக்கு நெய்வேத்தியம் வைக்கிறோம்; கடவுள் அதனை அருந்துவதாகவே கொள்கிறோம். அப்படியிருக்க, அன்று மாத்திரம்தான் அருந்துகிறார் என்று சொல்வது அர்த்தமற்றதாகிவிடும் அல்லவா?" என்று பதிலளித்தார் அவர்.

மண்டபத்தைவிட்டு வெளியே வந்து, விசாலமான, பரந்த, அமைதியான அந்த நிலப்பரப்பில் நின்று மீண்டும் அந்த எழில் கொஞ்சும் கோபுரங்களை, கோவிலைப் பார்த்தேன்.

"....கண்டேன் அவர் திருப் பாதம் கண்டறியாதன கண்டேன்" என்ற திருநாவுக்கரசரின் தேவார அடிகள்தான் உடனே மனதில் எழுந்தன.

புறப்படலாம் என்று வாயிற்பக்கம் திரும்பிய போது, முதியவரான ஆங்கிலேயர் ஒருவர் லயிப்போடு நின்று கொண்டிருந்தார். "இற் இஸ் பியூட்டி புல்" என்றவர், உள்ளே பார்க்கலாமா என்றார். "ஆம்" என்று வழியைக் காண்பித்தேன்.

"இதனைப் பார்ப்பதற்காக இரண்டு மணித்தியாலங்கள் பிரயாணம் செய்து வருகிறேன்" என்று கூறிவிட்டு, வாயிலை நோக்கி மெல்ல மெல்ல, உற்சாகத்தோடு நடந்தார்.

— மாலி

**இந்த ஆலயத்தின் நிருமாணத் தொகையை வெளிப்படுத்த நிருவாகத்தினர் விரும்பாவிட்டாலும், கட்டடப்பொருள்களுக்கு மாத்திரம் 30 லட்சம் ஸ்ரேர்லிங் பவுண்கள் ஆகியிருக்குமென கணிக்கப்படுகிறது.**

பழைய நினைவுகள்

# தமிழோசைக்கு வயதென்ன?

சோ. சிவபாதசுந்தரம்

கடந்த 1991ஆம் ஆண்டு 'தமிழோசை பொன்விழா' என்ற பெயரில் பிபிஸி தமிழ்ப் பகுதியார் கோலாகல மாக விழா நடத்தியதை இலங்கை, இந்திய நேயர்கள் கேட்டு மகிழ்ந்திருப்பார்கள். ஆனால், உண்மையில் 'தமி ழோசை'யின் பொன்விழா நடத்தவேண்டிய நாளுக்கு இன் னும் மூன்று ஆண்டுகள் பொறுத்திருக்கவேண்டும் என்பதை பிபிஸி நிறுவனத்தார் ஏன் கண்டு கொள்ளவில்லை என்பது ஆச்சரியம் தான்.

இரண்டாவது மகாயுத்தம் தென்கிழக்காசியாவில் பரவத் தொடங்கிய போது, அந்தப் பிரதேசத்தின் மொழிகளில் 'செய்திக் கடிதம்' என்ற பெயரில் பிபிஸி தயாரித்து ஒலிபரப்பியது. இவ்வொலிபரப்புகளை 'ரிலே' செய்ய 'சியாக்' (South East Asia Command-SEAC) என்ற பெய ரில், கொழும்பு கிறீன்பாத் றோட்டில் சக்தி வாய்ந்த நிலையம் ஒன்று நிறுவப்பட்டிருந்தது. பிபிஸியைச் சேர்ந்தவர்களே இதை இயக்கிவந்தனர். கிழக்காசிய மொழிகளில், தமிழிலே 'இலங்கை செய்திக் கடிதம்' (Ceylon News Letter) என்ற பெயரில் வாரத்தில் மூன்று நாட்கள் ஒலிப ரப்பினார்கள். இந்த தமிழ் 'இலங்கைக் கடிதம்' ஆரம்பிக் கப்பட்டது 1941ஆம் ஆண்டு. இந்தக் கடிதம் பிபிஸி செய்தி நிறுவனம் ஆங்கிலத்தில் தயாரித்து, அந்நாட்களில் லண்டனில் படித்துக் கொண்டிருந்த இலங்கை மாணவர் ஒருவரால், அவருக்குத் தெரிந்த தமிழில் மொழிபெயர்க்கப்ப ட்டு, அவரே வாசிக்கும் வழக்கம் இருந்தது. இதில் முக்கியமாகக் கவனிக்கப் படவேண்டியது என்ன வென்றால், 'இலங்கை' என்று குறிப்பிடப்பட்டதும், கடிதம் என்ற வடிவ மும். பிபிஸியில் அந்நாட்களில் இந்தக் கடிதத்தை மொழி பெயர்த்து வாசித்தவர்களில் ஒருவரை 1947இல் கொழும்பிலே சந்தித்தேன். தம்பு என்ற பெயரைக் கொண்ட யாழ்ப்பாணத் தமிழர் அவர். லண்டனில் படித்து ஐ.சி.எஸ். பரீட்சையில் சித்திபெற்று, இந்தியாவில் தமிழ் நாட்டின் பல பகுதிகளில் கலெக்டர் உத்தியோகம் பார்த்தவர். யாழ்ப்பாணத்து Paul குடும்பத்தில், தனது சொந்த சகோதரி மகளை மணம் செய்திருந்தால்(அது இலங்கைச் சட்ட விதிக்கு கிரிமினல் குற்றம், இந்தியாவில் அது முறையானது) ஒய்வுபெற்ற பின்னர், இங்கிலாந்தில் கேம் பிரிட்ஜில் வசித்துவந்தார். அடிக்கடி பிபிஸி இலங்கைக் கடிதம் வாசித்தவர்களில் தம்புவும் ஒருவர். கொழும்பிலே அவரைச் சந்தித்தபோது பல தகவல்களைச் சொன்னார். 'அந்த நாட்களில் கொழும்பிலிருந்து இங்கிலாந் துக்குப் படிக்கவந்தவர்களில் பெரும்பான் மையானவர்களுக்கும் தமிழில் எழுத, வாசிக்க பழக்கமில்லை. 'இலங்கைக் கடித த்தை' தமிழில் மொழிபெயர்க்கவும் படிக்கவும் கஷ்டப்படுகிறோம். இப்போது தமிழறிவாளரும் தமிழ் நிகழ்ச்சிகள் தயாரிப் பில் அநுபவம் பெற்ற வருமான உங்களை அழைத்திருப்பது தமிழுக்கும் இலங்கைக்கும் பெருமை தருகிறது' என்று சொன்னார்.



> பிபிஸி தமிழ்ச் சஞ்சிகையை ஆங்குரார்ப்பணம் செய்யத் தீர்மானிக்கப்பட்டது. அன்று, பிபிஸி பிரமுகர்களும், இந்திய ஹை கமிஷன் உதவி கமிஷனர், இலங்கை ஹை கமிஷன் குமாரசுவாமி ஆகியோர் சமூகத்தில், பூசை போட்டு, "யாமறிந்த மொழிகளிலே..." என்ற பாரதி பாடல் பாடி, வாத்யக் கோஷ்டியுடன் கலைவிழா போன்ற சூழ்நிலையில் 'தமிழோசை' பிறந்தது.

1947 செப்டம்பர் இறுதியில் நான் பிபிஸி நிறுவனத்துக்கு வந்தவுடன் பின்னால் வரப்போகும் தொழில் முறையிலும் நிர்வாகத்திலும் போதிய தகுதி பெறுவதற்காக, உடனேயே பிபிஸி நடத்திய 'ஒலிபரப்பு பள்ளி'யில், தினசரி காலை ஒன்பது மணியிலிருந்து இரவு ஒன்பது மணி வரை, வாரத்தில் ஏழு நாட்கள், ஆறுவார காலம், லண்டனில் பல திசைகளிலுமுள்ள நிலையங்களில் பயிற்சி வகுப்புகள் நடந்தன. ஒலிபரப்புக் கலையில் பெயர் பெற்றவர்கள் பயிற்சி கொடுத்தார்கள். ஆறுவார காலம் பயிற்சி முடிந்ததும் மாண வர்களாகிய நாங்களே, பதினைந்துபேர் எழுதித் தயாரித்த ஒலிச் சித்திரத்தைப் பதிவேட்டில் அத்தனை ஆசிரியர்களும் கேட்டு பாராட்டவும் திட்டவும் செய்தார்கள். அந்த அநுப வத்தை மறக்கமுடியாது.

பயிற்சி முடிந்தவுடனேயே பிரமாதமாய் ஒன்றும் சாதிக் கவில்லை. செய்திக் கடிதத்துடன் வாரத்தில் மூன்று நாட்கள், தினசரிப் பத்திரிகைகளில் வந்த முக்கிய மான செய்திகளையும் மொழிபெயர்த்துப் படிக்க வேண்டியது; அவ்வளவுதான். இதில் இடைஞ்சல் என்ன வென்றால், எனது தமிழையும் பொருளையும் 'தணிக்கை' செய்ய ஓர் இங்லிஷ் கிழவர் எப்போதும் அருகாமையில் காவல் காத்திருப்பார். சிவில் சேர்விஸ் பதவியில் இலங்கையில் பல மாகாணங்களில் கவர்ண்மென்ற் ஏஜெண்டாக இருந்தவர். அந்தக் காலத்தில் இப்படியான உத்தியோகத்துக்குச் செல்பவர்கள், நாட்டு மொழிகளான சிங்களத்தையும் தமிழையும் படித்துத் தேறியிருக்க வேண்டும். அந்த வகையில் இந்த மனிதரும் தமிழ் எழுதப் படிக்கத் தெரிந்தவர்; பிறெயின் என்ற பெயருள்ள கிழவர். நாலைந்து வாரம் சென்றதும் ஒருநாள் அவர் சொன்னார்: 'குறை நினைக்கவேண்டாம்; சம்பிரதாயத்துக்காக நான் இப்படி உட் கார்ந்திருப்பது உங்களுக்கு இடைஞ்சல் என்பதை உணர்கிறேன். உங்களை நான் ஆசிரியராக மதிக்கிறேன்; என்னால் உங்களுக்கு இடையூறு வேண்டாம்' என்று சொல்லி விட்டு அந்த மனிதர் விலகிக்கொண்டார்.

நாட்கள் போய்க் கொண்டிருந்தன. எனக்கும் இந்த 'செய்தி வாசிப்பு' தொழிலில் வெறுப்பு ஏற்படத் தொடங்கியது. பெப்ரவரி மாதம் ஒருநாள் எங்கள் பிரிவுத் தலைவர் கோர்டன் வாட்டர்பீல்ட் என்பவ ரிடமிருந்து, நேரில் வந்து பார்க்கும்படி அழைப்பு வந்தது. பல காலம் பத்திரிகைத் துறையில் அனுபவம்பெற்ற நிர்வாகி அவர். பொதுவாகப் பல விஷயங்களையும் எனது குடும்பச் செய்திகளையும் கேட்ட பின்னர் அந்த மனுஷர் சொன்னார்: 'உங்களை பிபிஸி அழைத்ததற்கு ஒரு நோக்கம் இருந்தது. எங்கள் தமிழ் ஒலிபரப்புப் பகுதியை விஸ்தரித்தாலென்ன என்ற

எண்ணம் இப்போது வலு வடைந்திருக்கிறது. வாரத்தில் மூன்று நாள், தினம் அரைமணி நேரம் உங்களுக்காக ஒதுக்கித் தரப்படும். அதற்குள் எப்படியாக ஒலிபரப்பை அமைத்துக்கொள்ளப்போகிறீர்கள் என்று அடுத்த வாரம் வந்து சொல்லுங்கள்' என்று பணித்துவிட்டார். என்னுடன் அடுத்த பிரிவிலிருந்த ஹிந்தி, பெங்காலி நண்பர்களுடன் ஆலோசித்தேன். பின்னாளில் நண்பரான, இந்திய வானொலியில் உயர் பதவி வகித்த நாராயண மேனனும் மனைவி ரேகாவும் அங்கிருந்தார்கள். அவர்களுடனும் கலந்து பேசினேன். முடிவில் அரைமணி நேர சஞ்சிகை நிகழ்ச்சியை எப்படிக் கொண்டு நடத்தலாம் என்று ஓரளவு அமைத்துக் கொண்டு வாட்டர்பீல்டைப் போய்ப்பார்த்தேன். சுமார் ஒருமணி நேரம் கலந்து பேசியபின் அவர் சொன்னார், 'பிரிட்டிஷ் சமுதாயத்தின் வாழ்வையும் அமைப்பையும் ஒட்டிய பார்வையைப் பிரதிபலிக்க உங்கள் சஞ்சிகையை அமைத்துக்கொள்ளுங்கள். எங்கள் தலையீடு கிடையாது. அத்துடன் உங்கள் மனைவியும் இலங்கை வானொலியில் கலை நிகழ்ச்சிகள் நடத்தியதாக அறிகிறேன். அவர் பங்கையும் எதிர்பார்க்கிறேன். அவர் பிரயாண ஏற்பாடுகளுக்கு கொழும்புக்கு தகவல் அனுப்பியிருக்கிறோம்' என்றார்.

உடனடியாக சஞ்சிகை நிகழ்ச்சிகளுக்கு கிடைக்கக்கூடிய தமிழ்ப் பேச்சாளர்களைத் திரட்டினேன். இலங்கைத் தமிழர்களைத் தவிர, இந்தியர்கள் பலரையும் கூட்டினேன். ஆறு வாரங்களுக்குத் தேவையான திட்டத்தைச் சேகரித்தேன். இதற்கிடையில் எனது மனைவியும் வந்துவிட்டதால், அந்த ஆண்டு (1948) சித்திரையில் 'தமிழோசை' என்ற பெயரில் பிபிஸி தமிழ்ச் சஞ்சிகையை ஆங்குரார்ப்பணம் செய்யத் தீர்மானிக்கப்பட்டது. அன்று, பிபிஸி பிரமுகர்களும், இந்திய ஹைகமிஷன் உதவி கமிஷனர், இலங்கை ஹைகமிஷன் குமாரசுவாமி ஆகியோர் சமூகத்தில், பூசை போட்டு, 'யாமறிந்த மொழிகளிலே.....' என்ற பாரதி பாடல் பாடி, வாத்யக் கோஷ்டியுடன் கலைவிழா போன்ற சூழ்நிலையில் 'தமிழோசை' பிறந்தது. இந்த விவரமெல்லாம் பிபிஸி நிறுவனத்தின் ஆவணச் சாலையில் இருக்க வேண்டும்தானே.

1941இல் ஆரம்பிக்கப்பட்ட 'இலங்கைச் செய்திக் கடிதத்'துக்கும் 1948இல் பிறந்த 'தமிழோசை'க்கும் என்ன தொடர்பு. தமிழோசைதான் அகண்ட தமிழ் உலகத்தையும் அடக்கிய ஒலிபரப்பாக விளைந்து, எனக்குப் பிறகு, தமிழ்நாட்டிலிருந்து ரங்காச்சாரி, விஸ்வநாதன், எம்.ஆர்.எம். சுந்தரம், சங்கரமூர்த்தி, மகாதேவன் என்ற வரிசை பிறந்தது. அகண்ட தமிழுலகத்தை 1948இல் பிறந்த 'தமிழோசை'தான் அரவணைத்துக் காட்டியது. □


ASIA
ACADEMY OF
SOUTH INDIAN ARTS

MADRAS
MUSIC ACADEMY OF
DANCE RYTHMS
AND SONGS

SATURDAY
CLASSES
1.00 - 5.00pm
AT
LONG FIELD SCHOOL
DUKES AVENUE
NORTH HARROW

மிருதங்கம்:
காரைக்குடி கிருஷ்ணமூர்த்தி
பரதநாட்டியம்:
லக்ஷ்மி கணேசன்
வயலின்:
திருவாரூர் கோதண்டபாணி
வீணை, வாய்ப்பாட்டு:
பிரேமா கணேசன்



விபரங்களுக்கு தொடர்பு கொள்க:
Karaikudi Krishnamurthy
on 0181-248 6227 or
Prema Ganeson
on 0181-845 7900



HILLS
TRAVEL




Bombay £360
Madras £410
Colombo £385
Singapore £385
Kuala Lumpur £385
Sydney £675
Melbourne £675
Hong Kong £410
Bangkok £325
Toronto £210
New York £195

14 HILLS PLACE
OXFORD CIRCUS
LONDON W1R 1AF
Tel: 0171-434 4242

Newsmedia Advt.

# நேர்த்தியாக மிளிர்ந்த ராகங்கள்



'அரங்கேற்றம் போலன்றி, ஒரு கச்சேரி போலவே இருந்தது' என்று சமயங்களில் ஒரு 'பேச்சுக்காக' அரங்கேற்ற மேடைகளில் கூறுவது வழக்கமானதுதான். அதைப்பற்றி மற்றையவர்களும் அவ்வளவாக பெரிதுபடுத்துவதுமில்லை. செல்வி துளசி மோகனதாசின் வீணை அரங்கேற்றத்தில் காரைக்குடி கிருஷ்ணமூர்த்தி அப்படிக் கூறிய போது, அது முற்றிலும் ஒரு பேச்சுக்காக பேசப்பட்டதல்ல. உண்மையிலேயே அந்தப் பெண்ணுடைய வாசிப்பில் தூய்மை, ஒரு நளினம் இருந்தது. ராகங்கள் மிக நேர்த்தியாக வெளிப்பட்டன. நல்ல தாள சுத்தம்.

சுவாதித்திருநாளின் 'சலமேல...' சங்கராபரண வர்ணத்துடன் ஆரம்பித்து, அம்ருதவர்ஷனி, ஜயந்தசிறி, பந்துவராளி ராகங்களில் பிரபல்யமான உருப்படிகள். சிறி ராக பஞ்சரத்தினம். அனைத்தும் கச்சிதமாக இருந்தன.

கண்டஜாதி திரிபுடையில் 2 களைப் பல்லவி; பைரவி ராகம். அப்புறம் மலையமாருதம், ரேவதி, சுத்ததன்யாசி ராகங்கள் வாசித்தார். இந்த மலையமாருதம் சேர்க்கை அபூர்வமானதாகத் தெரிந்தது.

ஏன், எல்லோருமே பல்லவியைப் பாடிக்காட்டித்தான் பின்னர் வாத்தியத்தில் வாசிக்கவேண்டுமா? அது ஒரு செயற்கையானதாக துலாம்பரமாகத் தெரிந்தது. காரைக்குடி கிருஷ்ணமூர்த்தி இசையமைப்புச் செய்திருந்த சிந்துபைரவி தில்லானா புதிது.

துளசி, சிவதாரிணி சகாதேவனின் மாணவி. சென்னை, கருநாடக இசைக் கல்லூரி சங்கீதவித்வானான சிவதாரிணி, கே. பி. சிவாநந்தத்திடம் பயின்றவர். அவருக்கும் இது அவரது முதலாவது மாணவியை அரங்கேற்றும் அரங்கேற்றம். மன அரங்குகளில் ஏறியிருக்கிறார்.

கிறீன்போர்ட் மண்டபத்தில் நடைபெற்ற இந்த அரங்கேற்றத்தில் அப்பப்பா, அது என்ன மேடை அலங்காரம்? உண்மையிலே, அருமைவாய்ந்த ஒரு நிகழ்ச்சியில் ஒரு பாதிப்பைத்தான் அது ஏற்படுத்திக்கொண்டிருந்தது.

முத்து சிவராசாவின் மிருதங்கம் முழுமையும் வெகு பக்குவமாக இருந்தது. பாஸ்கரன் சிறிகரத்தின் எடுப்பான கடம்.

அந்தக் காலங்களில், சித்தூர் சுப்பிரமணய பிள்ளை; அவருடைய சிஷ்யரான மதுரை சோமு போன்றவர்கள்தான் உப பக்கவாத்தியங்களான கடம், கெஞ்சிராவோடு மோர்சிங்கையும் கச்சேரிகளில் சேர்த்து பெருமளவில் ஜமாய்த்தவர்கள். சோமு, தனியாவர்த்தனத்தில் கெத்து வாத்தியத்தையும் சேர்த்துக்கொள்வார். இப்போது லண்டனில், சிதம்பரநாதன் உப பக்க வாத்தியமான அந்த மோர்சிங்கை பிரதான பக்கவாத்தியங்களின் வரிசையில் உயர்த்தியிருக்கிறார். வாய்ப்பாட்டுக்கு மாத்திரமல்ல, வீணையோ, வயலினோ, நடனமோ அனைத்திலும். மிருதங்கத்துக்கு இணையான இடத்தை சிதம்பரநாதனின் வாசிப்பில் மோர்சிங் பெற்றிருக்கிறது. அன்றும் அப்படித்தான்; வீணையையும் மோர்சிங்கையும் வேறுபடுத்த இயலவில்லை. அப்படிப் பிசகாத வாசிப்பு!

வீணைக் கலைஞரான மாலினி தனபால்சிங்கம் குறிப்பிட்டதுபோலவே, துளசி வாய்ப்பாட்டிலும் இணையான பயிற்சியுடன் தொடரவேண்டும்.

– மாலி

# பரத 'நிருத்தம்'



லண்டனில் கோடை விடுமுறையோடு, பள்ளிகள் திறப்பதற்கு முன்னர், கலை நிகழ்ச்சிகள் ஒன்றைத் தொடர்ந்து மற்றொன்றாக நடைபெற்றன. இந்த வகையில் அரங்கேற்ற வைபவங்கள்தான் அதிகம். எல்லாவற்றுக்கும் அழைப்பு வந்தாலும் ஒரே நாளில் இரண்டு, மூன்று நிகழ்ச்சிகள் நடந்தால் எப்படி சமாளிப்பது?

லோகன் மண்டபத்தில் சோபனா பாலரத்தினத்தின் பரதநாட்டிய அரங்கேற்றம். கொழும்பிலே திருமதி பாலசுந்தரியிடம் பயிற்சிபெற்ற செல்வலக்ஷ்மி ராமகிருஷ்ணனின் மாணவியான சோபனா, இடையிலே மேல்நாட்டு 'பலே' நடனமும் பயின்றதாக அறிவிக்கப்பட்டது. அது, அவரது இந்த அரங்கேற்றத்தில் சில அம்சங்களில் தெரிந்தது.

வழக்கமான பரதநாட்டிய அம்சங்களோடு, பந்தாட்டமும் தசாவதாரமும் சேர்க்கப்பட்டிருந்தன. நிகழ்ச்சி முழுவதும் நிருத்தத்தில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டிருந்தது. நீலாம்பரி வர்ணத்தில் கால நிர்ணயம் துரிதமாக இருந்தது. செல்வலக்ஷ்மி நட்டுவாங்கத்தை கீழ் ஸ்தாயியில் வைத்துக்கொண்டால் இலகுவாயிருக்கும்.

நிகழ்ச்சிக்கு பாட்டும் வாத்தியங்களும் சிறப்புக் கொடுத்தன. இந்தியாவிலிருந்து வந்த ராஜசேகரனின் பாட்டு அழகு கொடுத்தது. பரதநாட்டிய சொற்கட்டுகள் தெரிந்து, வல்லின, மெல்லின அழகுடன் பவானி சங்கரின் மிருதங்கம் சிறப்பு தந்தது. அதேவிதமாக வயலினில் சந்திரசேகர் பல சங்கதிகள் கூட்டினார். நிமல்ராஜ் புல்லாங்குழல்.

'சின்னஞ்சிறு கிளியே...' பாரதியார் பாடல், தேவதாஸ் திரைப்படத்தின் இசையமைப்பாளர் சி. சுபராமனின் இசையமைப்பில் நமக்குப் பரிச்சயமாகிவிட்டது. இசைவேளையின்போது ராஜசேகரன் அதனை இன்னொரு விதமாகப் பாடியது ஒரு மாதிரியாகவிருந்தது.

நிகழ்ச்சி நிரலில், 'இன்றைய நிகழ்ச்சி அம்சங்களெல்லாம் கலாக்ஷேத்ரா பாணியிலுள்ளன' என்ற குறிப்புக்கு என்ன தேவை?

– வி. ஆர். ஜி.

1995

ஆகஸ்ட் - டிசம்பர்

# லண்டன்

# ஆபிரிக்க கலாச்சார விழா

யமுனா ராஜேந்திரன்

“எமது மூதாதையர்கள், எமது கலைஞர்கள், பிக்காஸோ போன்ற மகத்தான கலைஞர்கள்மீது பாதிப்புச் செலுத்திய எமது சிருஷ்டியாளர்கள், தமது கலை உன்னதங்களைச் சாதித்தபோது பிரெஞ்சு மொழியையோ, போர்த்துக்கேய மொழியையோ பேசிக்கொண்டிருந்திருக்கவில்லை...”

செம்பென் உஸ்மான் - செனெகல் திரைப்பட இயக்குநர்

*1995ஆம் ஆண்டு ஆபிரிக்க கலாச்சார விழா ஆகஸ்ட் தொடங்கி டிசம்பர் வரை பல்வேறு கிளைகளைப் பரப்பிக் கொண்டு பிரிட்டிஷ் காலனித்துவ சாம்ராஜ்யத்தின் நகரங்கள் முழுவதும் நடைபெறுகிறது.*

*விழா ஆகஸ்ட் மாதம் தொடங்கிவிட்டது. அறுபது ஆண்டுகளில் வந்த நூறு படங்கள் தெரிவுசெய்யப்பட்டு காண்பிக்கப்படுகின்றன. சினிமா, இசை, நடனம், ஓவியம், சிற்பம், இலக்கியம் போன்றன குறித்த இந்த கலாச்சார வெள்ளம் லண்டனை நனைக்கத் தொடங்கிவிட்டது.*

*ஆபிரிக்க மக்களையும் ஆசிய மக்களையும் இணைக்கக்கூடிய பல்வேறு கலாச்சார பண்புகள் இருக்கின்றன. இவற்றுள் பிரதானமானது, காலனியாதிக்கத்தின் கீழான இவர்களது வாழ்வு. இன ஒதுக்கல், நிற ஒதுக்கல் போன்றவை ஆசிய, ஆபிரிக்கர்களின் அநுபவத்தில் ஒரே தன்மையானவைதான்.*

*மேலோட்டமான அரசியல் ரீதியிலான இந்த ஒற்றுமை தவிரவும், தொன்மையான கலாச்சாரத்தையும் கலை, இலக்கிய, விஞ்ஞான சாதனைகளையும் கொண்டவர்கள் ஆசிய, ஆபிரிக்க மக்கள். இவர்களது தொன்மையான கலாச்சாரத்தின்மீது கிறிஸ்தவ, இஸ்லாமிய மதங்களின் ஆதிக்கத்தில் பதட்டமுற்ற வாழ்வு இவர்களுடையது. இவர்களது நிலப்பரப்பு நிறைய ஒத்த தன்மைகள் கொண்டவை. வரண்ட புல்வேய்ந்த குடிசை வீடுகள். பனைநார் தட்டிகள். ஊரின் நடுவில் பருத்துப் படர்ந்த நிழல் அடர்ந்த மரங்களின்கீழ் மக்கள். கிராமப் பஞ்சாயத்துக்கள். ஊர்ப் பெரியவரின் பரிபாலனம். இந்தியாவில் ஹரிஜனங்கள் என்று காந்தியாலும், தலித்கள் என்று இடதுசாரிகளாலும் சுட்டப்படும் தீண்டத்தகாத மக்களின் வாழ்வோடு இணைத்துச்சொல்லப்பட வேண்டிய வாழ்வு ஆபிரிக்க மக்களுடையது. வளமான கலாச்சார வாழ்வு கொண்டவர்கள் இம்மக்கள்.*

*விழாவின் சின்னமாக கவுரி வெண் சங்கு (cowrie snell) தேர்வுசெய்யப்பட்டிருக்கிறது. இந்த வெண்சங்கு தொன்மையான ஆபிரிக்க படைப்புகளிலும் நவீன சிருஷ்டிகளிலும் இடம்பெறும் ஒரு பொருள். பரந்துகிடக்கும் கடலையும், ஆபிரிக்கக் கலாச்சாரங்களின் வரலாற்றையும் இந்த சங்கு ஞாபகப்படுத்துவதாகச் சொல்கிறார் திரைப்பட நடிகர் மைக்கல் கெய்ன்.*

*ஆறு மாதங்களுக்கு நடைபெறும் இக் கலாச்சாரவிழா பற்றிய ஓர் அடிப்படையான சித்திரத்தையும், ஆபிரிக்க கலை, இலக்கியம், சினிமா, சிருஷ்டிகள் பற்றி அடிப்படையான புரிந்துணர்வையும் தர முயற்சிப்பதே இக்கட்டுரையின் நோக்கம்.*

*சினிமா பற்றிய நிகழ்ச்சிகள் படவிழாக்கள், கருத்தரங்குகள் என நிகழ்கின்றன. திரைப்படவிழா நான்கு பகுதிகளாக நடைபெறவுள்ளது:*

*1. ஆபிரிக்க காவியங்கள்* (African Classics).

2. ஹெய்லே ஜெரிமா படங்கள் (Haile Gerima Seasion).

africa95





3. ஆபிரிக்க விடுதலைச் சினிமா (Liberation Films).

4. மாந்திரிக, உணர்ச்சிப்பாங்கு, நகைச்சுவைப் படங்கள். (Mythical Melodra mic Comedy Films).

முதல் மூன்று பகுதிகளிலும் திரையிடப்படும் படங்களை 'அரசியல் சினிமா' என்று வகைப்படுத்தலாம். ஆபிரிக் காவை இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம். இருண்ட மயிர்களையுடைய முழுக்கவும் கறுப்பு மக்களைக்- கொண்ட ஆபிரிக்க மக்கள் ஒரு பிரிவினர். இன்னும் தமது சிறு தெய்வ வழிபாட்டை வைத்திருக்கும் மக் கள். இஸ்லாமிய கலாச்சாரத்துக்கும் பூர்வ குடிக் கலாச்சாரத்துக்கும் இடையிலான பதட்டத்தை வெளியிடும் இவர்கள் தவிர, கிறிஸ்தவத்துக்கும் தமது பூர்வகுடி கலாச்சார வழிபாட்டுக்கு மிடையிலான பதட்டத்தை வெளியிடும் மக்கள் ஒரு பிரிவினர். முழுக்கவும் இஸ்லாமிய மத, கலாச்சாரத்தினால் நிறுவப்பட்ட மக்கள் இரண்டாம் பிரிவினர். முதல் வகைக்கு சோமா லியா, நைஜீரியா, ஐவரி கோஸ்ற், செனகல் போன்றவற்றையும், இரண்டாம் வகைக்கு அல்ஜீரியா, எகிப்து, துனிசியா போன்றவற்றையும் உதாரணமாகச் சொல்லலாம். இரண்டு பிரிவினருக்கிடையிலும் நிற ஒதுக்கல் தொடர்பான பிரச்னைகளும் உண்டு. இந்தியாவில் தலித் மக்களுக்கும் அவர்களது பூர்வகுடி சிறு தெய்வ கலாச்சாரத்துக்குமிடையில் நிலவும் பதட்டமும் நிற ஒதுக்கலும் இதனுடன் ஒப்புநோக்கத்தக்கது.

ஆபிரிக்க காவியங்களின் வரிசையில் 13 படங்கள் திரையிடப்படுகின்றன. இதனை எழுதும்வரை 10 படங்களைப் பார்த்திருந்தேன். ஆபிரிக்க சினிமாவின் முன்னோடிகள் என்று சொல்லப்படும் செம்பேன் உஸ்மான், ஒட்ரிஸா, சுலைமன் சிசே, ஹெய்லே ஜெரிமா, யூசுப் செய்ன் போன்றவர்களின் படங்கள் திரையிடப்பட்டன. இவைதவிரவும், பல்வேறு சந்தர்ப்பங்களில் ஏற்கனவே 25 ஆபிரிக்க திரைப்படங்கள் வரையில் பார்த்திருக்கிறேன். இப்படங்களில் பெரும்பாலானவை நாவல்களாக எழுதப்பட்டவை. ஆபிரிக்க நாடோடிக் கதைகளின் வழிவந்தவை. ஆபிரிக்க மக்களின் மாந்திரீகம், கதை சொல்லி (மூசடைிவள) நாடோடி வாழ்க்கை, மத ஆதிக்கம், எதிர்ப்புணர்வு போன்றவற்றை இப்படங்கள் திரையில் காண்பிக்கின்றன.

விடுதலைச் சினிமா வரிசையில், பற்றிக்ஸ் லுமும்பா, அகஸ்ரினோ நெட்டோ, கேப்ரல் போன்றவர்களைப் பற்றிய படங்களும், தென்னாபிரிக்க நிறவெறி எதிர்ப்புப் படங்களும் திரையிடப்படுகின்றன.

இலக்கியம் பற்றிய கருத்தரங்குகள், பட்டறைகள் போன்றனவும் திட்டமிடப்பட்டுள்ளன. School of Oriental and African Studies அரங்கில் எழுத்தாளர்கள் சந்திப்பு நடைபெற்றது. காமன்வெல்த் நிறுவனத்தின் ஆதரவில் தென்னாபிரிக்க இலக்கியம் பற்றிய பட்டறை நிகழ்கிறது.

பிரெஞ்சு மொழி பேசும் ஆபிரிக்க எழுத்தாளர்களுக்கான இரு கருத்தரங்குகள் தனியாக நிகழவுள்ளன. லியோபால்ட் செடார் செங்கார் இவ்வரங்குகளில் கலந்துகொள்கிறார். பெண்களும் வன்முறையும் காலனித்துவமும் தொடர்பான இரு கருத்தரங்குகள் நொட்டிங்ஹாம் நகரில் நடைபெறுகின்றன. வோலே சோயங்காவின் புதிய நாடகமான The Beautification of Area Boy எனும் நாடகம் லீட்ஸ் நகர பல்கலைக்கழகத்தின் ஆதரவில் நடைபெறவுள்ளது. இலக்கியத்துக்கான நோபல்பரிசு பெற்ற வோலே சோயங்கா மேற்கு நைஜீரியாவில் பிறந்தவர். எழுத்தாளர்; பேராசிரியர்; தூரதேச பயணி; அரசியல் நடவடிக்கையாளர். அரசை விமர்சித்ததற்காக இரண்டு வருடங்கள் சிறையிலிடப்பட்டவர். நாட்டிலிருந்து வெளியேறி வாழ்ந்துவரும் உத்வேகமிக்க சிருஷ்டியாளர்.

செடார் செங்கர் கவிஞர். செனகல் நாட்டு அரசுத் தலைவர். இவருக்கும் செனகல் திரைப்பட இயக்குநர் உஸ்மான் செம்பேனுக்கும் Ceddo என்னும் திரைப்படம் தொடர்பாக நடந்த இலக்கிய, சினிமா விவாதம் பிரசித்திவாய்ந்த சம்பவம். உச்சரிப்பில் ஒரு 'd' ஐ எடுக்கச் சொன்னார் செங்கார். அவரின் வாதம் எழுத்து இலக்கியம் பற்றியது. செம்பேன் மறுத்தார். அவரின் வாதம் மக்கள் வழக்கு மொழி பற்றியது. இக்காரணத்துக்காக Ceddo படம் செனகலில் தடைசெய்யப்பட்டது. இஸ்லாமிய மத ஆதிக்கத்தை கடுமையாக விமர்சிக்கும் படம் அது. செங்கார், செம்பேன் இருவருமே ஆபிரிக்க கலாச் சாரவிழா நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கிறார்கள்.



நடனம் ஆபிரிக்க மக்களின் அன்றாட வாழ்வோடு இணைந்தது. பாடி ஆடிக் கொண்டே அழுவார்கள். பாடி ஆடிக் கொண்டே அரசியல் ஆர்ப்பாட்ட ஊர்வலம் போவார்கள். பாடி ஆடிக்கொண்டே பேசிக்கொண்டிருப்பார்கள். பெஞ்சமின் ஜாப்னியா கவிதை வாசிக்கும்போது கேட்டிருந்தால் தெரியும், குரலுக்கு ஏற்ப குதிக்கால் உயரும். குதிக்காலுக்கு ஏற்ப தோள் குலுங்கும். தோள் குலுங்க குரல் குழையும். உண்மையில் ரேகே ஒரு திட்ட மிடப்பட்ட கலைவடிவம் அல்ல. மாறாக, அவர்கள் அன்றாட வாழ்வின் கலை நடவடிக்கையின் விளைவே அது. பெஞ்சமின் ஜாப்னியா, ஆந்ரே ஜெடித் போன்ற கவிஞர்க

africa 95

சிறுகதை: க. ஆதவன்

# கந்தசாமியும் கண்மணியும்

கந்தசாமிக்குக் கண்ணைச் சுழற்றிக் கொண்டு வந்தது. நித்திரையோ அல்லது தலைச்சுற்றோ தெரியவில்லை. கண்களைக் கசக்கிவிட்டு மீண்டும் பார்த்தான். முன்னாலிருந்த மேசையை சரியாக நேர்பார்த்து அது சுற்றுகிறதா அல்லது நிற்கிறதா எனப் பார்த் தான். மேசை அதே இடத்தில்தான் இருக்கிறது. ஆனால், அதைப் பார்க்கும் பொழுது அதற்கருகில் இருக்கும் ரி. வி. சுற்றுவதுபோல் தெரிகிறது. இப்பொழுது ரி. வி. ஐக் குறிவைத்துப் பார்த்தான். மேசை சுற்றவில்லை. ரி. வி. யும் சுற்றவில்லை. ஆனால், ரி. வி. க்கு மேலுள்ள பூச்சாடியும் பூவும் சுற்றுவதுபோல் பட்டது. பூச்சாடியையும் பூவையும் பார்த்தான். ரி. வி. சுற்றவில்லை. பூச்சாடி, பூ சுற்ற வில்லை. ஆனால் மேசை மிக மிக மெதுவாக சுற்றுவதுபோல் பட்டது. சுழற்சி..... தொடர்பு..... ஒளியின் வேகம்.... வில்லை..... தொலைக் காட்சி..... தொலைதூரம்..... குறுந்தூரம்..... குவிவாடி..... குழியாடி..... மனம்..... மன ஒருமைப்பாடு..... பிரமை..... பொய்த் தோற்றம்..... பிம்பம்..... என அவனுக்குத் தெரிந்த எல்லாச் சொற்களும் விளக்கங்களுடன் வந்து போயின. ஆனால், அவனது பிரச்னைக்கான தீர்வு கிடைக்கவில்லை.

இரவு பூராவும் இதே பிரச்னை இருந்தது. காலையில் அவன் அறையைவிட்டு வெளியே வந்தான். தெருவில் இறங்கினான். முன்னால் ஒரு கார் வந்தது. அதற்குப் பின்னால் வந்துகொண்டிருந்த லொறி சுற்றிச் சுற்றி அங்குமிங்குமாக ஓடுவதுபோல் பட்டது. தெருவில் நடக்கப் பயமாக இருந்தது. திரும்ப உள்ளே ஓடிச் சென்று கதவைப் பூட்டிக்கொண்டான்.

வாசலில் பேப்பர்காரன் வந்து கதவு நீக்கலுக்கூடாகப் பேப்பரைத் தள்ளிவிட்டுப் போனான். சற்றுநேரங் கழித்து தபால்காரன் வந்தான். அவனும் ஏதோ ஒரு தபாலைத் தள்ளிவிட்டுப் போனான். கந்தசாமி என்ன கடிதம் எனப் பார்க்கலாம் என எழுந்து கதவருகே போனான். கீழே பேப்பரும் ஒரு கடிதமும் கிடந்தது.




பேப்பரைப் பார்த்தான்; கடிதம் சுற்றுவது போலக் கிடந்தது. கடிதத்தைப் பார்த்தான்; பேப்பர் அப்படியே இருந்தது. ஆனால், பேப்பரிலுள்ள எழுத்துக்கள் மெதுவாக அசைவதுபோல் பட்டது.

இப்பொழுது கந்த சாமி முற்றாகவே பயந்தான். ஒரு நேரத்தில் ஒரு பொருளைப் பார்க்கும் பொழுது அதற்கருகிலுள்ள பொருளைப் பார்க் காமலிருப்பது என்பதிலிருந்து அவனால் விடுபட முடியவில்லை. Aயும் Bயும் அருகருகே இருந்தால் Aஐப் பார்க்கையில் அவன் Bஐயும் பார்க்கிறான். Bஐப் பார்க்கையில் Aஐயும் பார்க்கிறான். Aஐப் பார்க்கிறேன் என்று சொல்கையில் உண்மையில் Bஐத்தான் நான் பார்க்கிறேனோ என்று சந்தேகப்பட்டான்.

இது என்ன கொடுமை?

இது என்ன பிரச்னை?

இது எப்படி என்னுள் வந்தது?

தலைமயிரைப் பிய்த்தபடி சுவரில் சாய்ந்துகொண்டு பேப்பரையும் கடிதத்தையும் மாறிமாறிப் பார்த்துக்கொண்டிருந்தான்.

திடீரென ஏதோ நினைத்தவனாக குனிந்து பேப்பரையும் கடிதத்தையும் எடுத்துக்கொண்டு போய் சோபாவில் தொப்பெனக் குந்தினான். கடிதத்தை முதலில் பிரித்தான். நண்பன் ஒருவனின் குழந்தைக்குப் பிறந்தநாள் விழாவாம்; அழைப்புக் கடிதம். கடிதத்தை வைத்துவிட்டு, பேப்பரை எடுத்தான். சதாம் ஹுசைன்மீது உலக நாடுகள் கண்டனம்;

தலைப்பு. பேப்பரைப் படிக்கும்பொழுது நண்பனின் குழந்தையின் பிறந்தநாள் விழாவில் பலர் கூடியிருக்க, குழந்தை



'கேக்' வெட்டுவதுபோன்ற அகக் காட்சி வந்தது. பேப்பரைத் தூரே எறிந்தான். கண்களை மூடிக்கொண்டு விழாவில் குழந்தை கேக் வெட்டும் காட்சியை யோசித்தான். வட்டமேசை மாநாடு ஒன்றில் பல நாட்டுத் தலைவர்கள் சுற்றவர இருந்து சதாம் ஹுசைனைப் பற்றி உரையாடும் காட்சி தெரிந்தது. மண்டையே வெடிக்கும் போலிருந்தது அவனுக்கு. புறக்காட்சியில் தான் பிரச்னை என்றால் அகக் காட்சியிலுமா? சிந்தனையிலுமா? யாரிடம் போவது? இந்தச் சிக்கலுக்கு என்ன வழி? உடம்பெல்லாம் வியர்க்க ஆரம்பித்து விட்டது.

கண்மணி வேலையை விட்டுவிட்டு வந்துவிட்டாள். கணவர் கந்தசாமி சோபாவின் ஒரு மூலையில் சாய்ந்திருக்கிறார். சரியான களைப்பு அவளுக்கு. இன்றைக்கென முதலாவது பஸ்ஸில் சனக்கூட்டம். இரண்டாவது பஸ்ஸே கிடைத்திருந்தது. 'பாங்'கில் கவுண்டரில் வேலை செய்கிறாள் அவள். தோழி சுனீ வராததால் அவள் வேலையையும் இவள் செய்யவேண்டியதாய்ப் போய்விட்டது. அதற்கிடையில் 'ரை' கட்டிக்கொண்டு, மீசையை அழகாக 'கிளிப்' செய்து கொண்ட நாகரிகமான இளைஞன்..... அவன் ஏதோ ஒரு கொம்பனியின் சேல்ஸ் மானேஜராக இருக்கலாம். இவளது 'பாங்'கின் கஸ்ரமர். அவன் வந்து நின்று 'கன் யூ டு மி ஏ பேவர்' என்று கேட்டால், கட்டாயம் அவனைக் கவனிக்காமல் இருக்கமுடியாது. அவனைக் கவனித்ததால் பெரிய பழுவும் வினைக்கேடும் கண்மணிக்குத் தலையை வலிக்கக் காரணமாயிற்று.

இரண்டு 'பனடோல்' கட்டாயம் போடவேண்டும் என்று நினைத்தாள். 'அப்பாடா' என்றவாறு தன் இறுக்கிய உடைகளைக் களைந்தாள். 'லூஸா' ஏதேனும் போட்டா நல்லாயிருக்கும் எண்டு நினைச்சு ஒரு தொளதொளா 'மிடி'யைக் கொழுவினாள்; இல்லை, அதற்குள் அவள் உடல் சென்றது. ஒரு 'கப்' தேநீரை உறிஞ்சியபடி வெளியே 'ஹாலு'க்குள் வரும்பொழுதும் கந்தசாமி அதே மூலையில் உட்கார்ந்துகொண்டிருந்தான்.

கந்தசாமி ஆடாமல் அசையாமல் உட்கார்ந்திருந்தது கண்மணிக்கு ஆச்சரியமாய் இருந்தது. நெருங்கிச் சென்று பார்த்தாள். அப்பொழுதும் அவன் ஆடாமல் அசையாமலே இருந்தான்.

"என்ன ஒரு மாதிரியாய் இருக்கிறியள்?" என்று கேட்டாள், பதிலில்லை.

"நேற்று நான் கொஞ்சங் கூடத்தான் உங்களைப் பேசிப்போட்டன். அதைப் பற்றி இண்டைக்கு வேலை செய்யேக்கைகூட யோசிச்சுக் கவலைப்பட்டனான். 'ஐ ஆம் ஸாரி'. அதுக்காகப் போய் நீங்கள் இப்பிடி உடைஞ்சுபோய் இருக்கிறியளே....." என்றாள் கண்மணி.

பதிலில்லை. பேச்சே இல்லை.

"இண்டைக்கு 'பாங்'கில வேலை கூடிப்போச்சு. அதுதான் நான் கொஞ்சம் பிந்தி வந்தனான். நான் போன் பண்ணி உங்களுக்கு சொல்லாம் எண்டுதான் பார்த்தன். ஆனா, அதுக்குக்கூட நேரங்கிடைக்கேல்ல. நீங்கள் காத்துக்கொண்டிருக்க மாட்டியள் எண்டுந் தெரியும், ஏனெண்டா எங்களுக்கு ஒரு 'அப்பொயின்மென்று'ம் இண்டைக்கு இல்லை."

மௌனமாய் இருந்தான் கந்தசாமி.

இப்பொழுது கண்மணி கொஞ்சம் உசாரானாள். 'இவருக்கு உண்மையில ஏதோ நடந்திட்டுது. நேற்றைய சண்டைதான் இவற்றை இந்த நிலைக்குக் காரணம்' என்று நினைத்தாள். சண்டையின்போது நடந்த வாக்குவாதங்களை ஒவ்வொன்றாக நினைத்துப் பார்த்தாள். நேற்றைய சண்டை வழமைக்கு மாறாகச் சற்று பெரிய சண்டையாகத்தான் இருந்தது. சிறிய வன்முறை அளவுக்குக்கூட அது போய்விட்டிருந்தது. அவர் ரி.வி.'றிமோற் கொன்றோளரை'த் தூக்கி எறிந்ததும், நான் மேசையில் கிடந்த பூச்சாடியை வேணுமெண்டு விழவிட்டதும்..... வன்முறைக்கான சாட்சியங்கள்.

'உன்ரை வண்டவாளங்கள் எனக்குத் தெரியும்' எண்டு அவர் சொன்னதுக்காக நான் அவற்றை பள்ளிக்கூடக் காதலையும் அவற்றை குடும்பத்தையும் குறைசொல்லிப் பேசியது தப்புத்தான். எனக்கு இப்ப வரவர வாய் கூடித்தான் போய்ச்சுது. சில நேரத்தில அடக்கமுடியாம நெஞ்சு பொத்துக்கொண்டு வார்த்தைகள் வெளியே வருகின்றன. நேரங்காலந் தெரியாம, இடந் தெரியாம கூரிய அம்புகளாய்..... மற்றவையைக் கொல்லுறது மாதிரி நான் கதைக்கப் பழகிவிட்டன். இதை எப்பிடி அடக்கிறது எண்டு தெரியேல்ல. நாய் மாதிரி சின்னப்பெட்டையளைக் கலைச்சுத் திரிஞ்சு போட்டு, அதைக் காதல் எண்டு சொன்னா ஆர்தான் நம்புவினம்?' என்று நான் நேற்றுச் சொல்லியிருக்கக்கூடாது. அவரை அது நல்லாய் பாதிச்சிருக்க வேணும். இல்லாட்டி, அவர் அவ்வளவு கோபப்பட்டிருக்க மாட்டார். அதையும் விட, 'உங்கடை கொம்மா ஏதோ பெரிய திறமோ; சொந்த மச்சான் காவலிருக்கேக்கை உத்தியோக மாப்பிளை வேணுமெண்டுதானே கொப்பருக்குப் பின்னாலை வழிஞ்சவ' எண்டு வேற சொல்லிப்போட்டன். எனக்கு ஏதோ எல்லாந் தெரிஞ்சது மாதிரி வழவழவென்று சொல்லிப்போட்டன். அவற்றை அம்மாவைப்பற்றி நான் இந்தச் சண்டையில இழுத்திருக்கக்கூடாது. எனக்கு என்னெண்டு தெரியேல்ல ஒரு பிரச்னையைப் பற்றி கதைக்கேக்கை மற்றப் பிரச்னையை இழுக்காமல் கதைக்கமுடியாமக் கிடக்கு. இதுகளாலதான் அவர் நல்லா மனமுடைஞ்சுபோனார் போலயிருக்குது.

நான் 'ஸாரி' சொன்னதுக்குப் பிறகும் அவர் இப்பிடி மௌனமாக இருக்கிறார் எண்டால் அவர் ஏதோ முடிவெடுத்திட்டார் போல இருக்கு. அதோட, பாங் கஸ்ரமர் மோகன்ரை வேலையளை நான் கூடக்கவனிக்கிறதும்..... அவனைப்பற்றி அடிக்கடி வீட்டில கதைக்கிறதும் சிலவேளை சில சந்தேகங்களை இவருக்கு உண்டாக்கியிருக்கவேணும். எல்லாம் இப்ப பெரிய பிரச்சினையாத்தான் வரப் போகுது.

"இஞ்சேருங்கோ, தயவுசெய்து சொல்லுங்கோ, நான் நடக்கிறவிதம் ஏதன் பிழையெண்டா நேரடியாச் சொல்லுங்கோவன். மனசுக்கை வைச்சுக் குடையாதையுங்கோ. 'உம்' எண்டிருந்தாப் பிரச்சினை தீராது. பிரச்சினையைப் போட்டு உடையுங்கோ" என்றாள்.

இந்த நேரடி வார்த்தைகளுக்குப் பிறகும் கந்தசாமி பேசாமல் இருந்தான்.

கண்மணிக்கு என்ன செய்வதென்பது புரியவில்லை. குடித்து முடித்த தேநீர்க் கோப்பையை மேசையில் வைக்கும்போது கைகள் ஏனோ படபடத்தன.

ரெலிபோன் அடித்தது.

ரெலிபோன் அடிக்கிறது.

ரெலிபோன் அடிக்கிறது.

இதுவாவது அவரை எழுப்பட்டும் என்று மூன்று தடவைகள் மணி கேட்டும் தெரியாதவள்போல் இருந்தாள் கண்மணி.

நான்காவது தடவையாக அது அடித்தது.

இப்பொழுது கந்தசாமி எழுந்தான். ஒரு நடைப்பிணம் போல் ரெலிபோன் அருகில் சென்று 'றிசீவரை' எடுத்தான்.

பேசும் முனையைக் கையால் பொத்திக்கொண்டு, "உமக்குத்தான் ஆரோ மோகனாம்; உம்மோடை கதைக்க வேணுமாம்" என்றான்.

'இப்ப என்னத்துக்கு இந்த ஆள் போன் பண்ணுது? ஏன் இந்த நேரத்திலை, கடவுளே. இவருக்கு இருக்கிற சந்தேகம் இன்னும் கூடவெல்லோ போகுது. நான்என்ன செய்ய' என்று மனதுள் முணுமுணுத்தபடி றிசீவரை வாங்கினாள் கண்மணி.

கந்தசாமி நடைப்பிணம் போல் நடந்துசென்று அதே சோபா மூலையில் அதேமாதிரி அமர்ந்துகொண்டான்.

கண்மணி என்ன கதைத்தாள் என்று

அவளுக்கே விளங்கவில்லை. கதையை முடிப்பதில் ஆர்வங்காட்டி றிசீவரை வைத்துவிட்டு..... கந்தசாமிக்கு மிக அருகில் உட்கார்ந்து அவனைக் கொஞ்சாத குறையாக நெருங்கி, "என்னிலை ஏதும் பிழையோ" என்றாள்.

கந்தசாமி எழுந்து நேராக படுக்கையறைக்குப் போய் கட்டிலில் தொப்பென வீழ்ந்து முகம் புதைத்தான்.

காலை 8 மணியாகியிருந்தது. கண்மணி வேலைக்குப் போய் விட்டாள். கந்தசாமி மெதுவாக எழுந்தான். தலைமாட்டில் கோப்பி போட்டு, அவன் எழுந்தபின்னர் குடிக்கட்டும் என்று மூடி வைத்துவிட்டு போயிருந்திருக்கிறாள் கண்மணி.

'கண்மணி... எனது இந்த நிலை உன்னால் ஏற்பட்டதல்ல. உன்னில ஒரு பிழையும் இல்லை. எமது சண்டையை இதனுடன் சம்பந்தப் படுத்தாதை. மனிசர்கள் எப்பவும் இப்படித்தான். ஒரு பிரச்சனையைப் பார்க்கேக்க மற்றப் பிரச்சனையளோட சேத்துத்தான் பார்ப்பினம். நீயும் அதுக்கு விதிவிலக்கில்லை' என்று மனதுக்குள் சொல்லிக்கொண்டான்.

கோப்பி ஆறிப்போயிருந்தாலும் அவள் எனக்காகக் கஷ்டப்பட்டுப் போட்டது என்று நினைத்துக் குடித்தான். நேற்றைய பிரச்னை இன்னும் இருக்கிறதா என 'ரெஸ்ற்' பண்ணப் பயந்து, கண்களை இறுக மூடிக்கொண்டான்.

கண்களை மூடியவுடன் காட்சிகள் விரிந்தன. காட்சிகளுக்குக் காலம் இல்லை. காலத்தை வென்ற காட்சிகள். முன்னோக்கியும் பின்னோக்கியும் காட்சிகள் போவதில்லை. நாம்தான் அவற்றை 'வீடியோ'வில் நகர்த்துவதுபோல நகர்த்திக் கொண்டிருக்கிறோம்.

இலங்கையின் வடபகுதியில் செம்பாட்டுத் தரையில் துள்ளியோடியது..... காற்சட்டையில் புழுதி ஒட்டிக்கொண்டிருந்தாலும் அதைச் சட்டைசெய்யாமல் நித்திரை தூங்கித் தூங்கிப் பார்த்த திருவிழாக்கள்.....

முள்ளுக்கம்பி வேலியில் துடைகள் கீறுப்பட்டு, இரத்தம் வழிய வழிய களவெடுத்துத் தின்ற மாம்பழங்கள்.....

பனை வடலிகளின் நடுவே ஆள்காட்டிக் குருவிகளுடன் போட்டி போட்டு ஓடிய ஓட்டப் பந்தயங்கள்.....

முதன்முதல் தந்தையின் பிளேட்டை எடுத்து ஷேவ் எடுத்தபோது நாடியினால் வழிந்த இரத்தம்.....

பள்ளிக்கூடத்தில் முன்னால் இருந்தவனுக்கு வால் கட்டி, அந்த வாலின் மறுமுனையில் ஒரு பெட்டையின் பெயரை எழுதித் தொங்கவிட்டு செய்த தரகர் வேலை.....

சைக்கிளில் ஒரு ராஜாவாக வலம் வந்து, கடைசியில் மன்மத ராஜாவான விதம்.....

இலட்சியங்களில் இதயம் தோய்ந்து, விரல் வெட்டி இரத்தத் திலகங்கள் இட்ட தலைவர்களின் நெற்றிகள்.....

அறிவுகளில் ஆத்மா தோய, கையில் சிகரட்டுடன் நடத்திய அட்டகாசமான விவாதங்கள்.....

இவையெல்லாம் சின்னச் சின்ன 'சிலைடு'களாகி பெரிய வெண்திரையில் காட்சிகளாய் விரிந்துகொண்டிருந்தன கந்தசாமிக்கு.

அந்தக் காட்சிகளைக் கலைக்க அவன் விரும்பவில்லை. காலத்தை வென்ற உண்மையான நிதர்சனங்களைக் கலைப்பது என்பது முடியாதது. அதைக் கலைப்பதென்பது மூடர்களாலும் முரடர்களாலுமே சாத்தியம். கந்தசாமி முரடன் இல்லை. இதனால், அவனால் கண்களைத் திறக்க முடியவில்லை.

இந்த நேரம் பார்த்து ரெலிபோன் அடித்தது.

மூடிய கண்களைத் திறக்கமுடியாத கந்தசாமி, கண்களை மூடியபடியே எட்டித் தலைமாட்டில் இருந்த றிசீவரைத் தடவி எடுத்து காதருகே வைத்துப் பிடித்தான்.

"நான்தான் கண்மணி. ஐந்து நிமிஷம் முன்னுக்கு இண்டைக்கு 'ரீ பிறேக்'. அதுதான் உங்களைக் கூப்பிட்டன். இப்ப எப்பிடி இருக்கு?"

"....."

"என்ன, நேற்று முழுக்க என்னோடை கதைக்கவே மாட்டன் எண்டிட்டியள். உடம்பிலை ஏதன் சுகமில்லை எண்டா டொக்டரிட்டை ஒரு அப்பொயின்ற்மென்ற் எடுங்கோவன்."

"....."

"நான் உங்களை அப்பிடிப் பேசிப்போட்டன் எண்டா இப்பிடிக் கோவிக்கிறியள்?"

"....."

"பிளீஸ், என்னண்டு சொல்லுங்கோவன்...."

"....."

"நான் மோகனோட பழகிற விதம் உங்களுக்குப் பிடிக்கயில்லையா?"

"....."

"நீங்க தனிய இப்பிடி ஒரு முடிவெடுக்கிறது சரியில்லை. என்னோடையும் சேத்துத்தான் எடுக்கவேணும்."

"....."

"நான் உங்களை எவ்வளவு விரும்பிறன் எண்டது ஆண்டவனுக்குத்தான் தெரியும்." (விம்மும் சத்தம் கேட்கிறது)

"கிளிக் கிக்"

'றிசீவர்' அங்கே வைக்கப்பட்டு விட்டது.

இங்கேயும் கந்தசாமியின் கைகள் தடவித் தடவி றிசீவரை வைத்தன.

'கண்மணி, இப்பவும் என் மனதினுள் உனக்காக ஏங்குகிறேன். நீ என்னை மடியில் கிடத்திப் பாடிய தாலாட்டுகளை இன்னமும் என் செவிகள் கேட்டுக் கொண்டிருக்கின்றன. எனக்காக நீ பட்ட



கஷ்டங்களை உணரமுடியாத அளவுக்கு நான் முரடன் இல்லை. அடிச்சுச் சொல்லுவன், எந்தக் கோயிலில வேணுமெண்டாலும் கற்பூரம் கொழுத்திச் சத்தியம் பண்ணச்சொல்லு, பண்ணுறன். உன்னிலை எந்தப் பிழையும் இல்லை. நான் உன்னைக் காதலிச்சது உண்மை. காதலுக்காக நீயும் நானும் வருந்தியது, உழன்றது..... கைகளால் பொத்தி தீபம் அணைந்துவிடாமல் பாதுகாத்தது..... எல்லாம் உண்மை. அப்பட்டமான உண்மை. ஆனால், இன்று எனக்குள்ளே நடக்கும் 'காட்சி' பற்றிய பிரச்சினை உனக்கு விளங்கப் போறதில்லை. எனது புறக்காட்சியில் எல்லாமே சுழல்கின்றன. ஒரு பொருளை என்னால் பார்க்கமுடியவில்லை, கண்மணி.

கண்களைத் திறந்தால் என் முன்னே தெரிவது இயந்திர மயமாக்கப்பட்ட இந்த ஐரோப்பிய உலகம். கண்களை மூடினால் என்னகத்தே தெரிவது; இலங்கையும் என் வாழ்வும் காலத்திற்கப்பாற்பட்ட காட்சிகளாய், நிதர்சனங்களாய்..... பிடிவாதமாய் இதயத்தில் தொங்கிக்கொண்டிருக்கும் காட்சிகள்தான். நான் போலியாய் உன்முன்னே நடமாட விரும்பவில்லை. நீ எனது புறக் காட்சிகளில் ஒன்றாய் இருக்கிறாய். அதேவேளை என் அகக்காட்சியையும் ஆக்கிரமிக்கிறாய்.

நான் உனக்கு என் காட்சிப் பிரச்னையைச் சொன்னால், முதலில் நீ நம்புவாயா? நம்புகிறாய் என்று வைத்துக் கொள்வோம், உனது 'இமேஜ்' இதனால் பாதிக்கப்படாதா? ஐரோப்பிய இயந்திர சமூகத்தில் நீ 'இமேஜ்' உள்ள ஒரு மனுஷி அல்லவா? நீ ஒத்துப் போகிறாய் அல்லவா? நானும் அப்படித்தானிருந்தேன். அப்படி ஒரு 'இமேஜ்' வெறும் போலி என்பதை இப்பொழுது என் மனம் உணர ஆரம்பிக்கிறது. எனக்கு இப்போதுள்ள 'காட்சி' பற்றிய பிரச்னை, எங்களது இந்தச் 'சொகுசு' வாழ்வைப் பாழடிக்கப் போகிறது. இதனால்தான் உன்னுடன் எதுவுமே என்னால் பேசமுடியவில்லை.

நான் மனதிற்குள் வேண்டுவதெல்லாம் என் கண்மணி என்னைச் சந்தேகப் படக்கூடாது என்பதுதான். உன்னில் நான் சந்தேகப் படுகிறேன் என்கிற சந்தேகம் உனக்கு வரக்கூடாது என்று நினைத்துக் கவலைப்பட்டேன். ஆனால், அது வந்து விட்டது. நான் பாவி, கண்மணி.

மனிதனாகப் பிறந்தவன் நாட்டை, மண்ணை, மனிதரை நேசிக்கக்கூடாது. அப்படி நேசித்தாலும் இளகிய மனம்



படைத்தவனாய் இருக்கக்கூடாது. இந்த 'சென்சிற்றிவ்' என் இதயத்துள் அமுங்கிக் கிடந்து என் காட்சிகளை நிர்ணயிக்குது. ஆனால், அந்தக் காட்சிகள்தான் உண்மையாகவும் இருக்கிறது. இளகிய மனம் படைத்தவர்கள் நாட்டை விட்டு வெளிக்கிட்டிருக்கக்கூடாது. நல்லதாகவோ... கெட்டதாகவோ ஒரு 'பெயர்' எடுத்துக் கொண்டு செத்துத் தொலைந்திருக்க வேண்டும்.

நீ வேலை முடிந்து வரப்போகிறாய். என்னைத் துருவித் துருவிக் கேட்கப் போகிறாய். கண்களையே திறக்கப் பயந்த நான், உன் கேள்விகளுக்கு எதைச் சொல்ல?

நீ கேட்டால் மட்டும் பரவாயில்லை. நீ எனது சாதாரண சண்டையைத் தொடர்பு படுத்துவாய். பழையவற்றைக் கிளறுவாய். நீ உன்னில்தான் ஏதோ பிழையென்று அடம் பிடிப்பாய். அழுவாய். உருக்குலைந்து போவாய்.

ரெலிபோனில் எனது மௌனமே ஒரு பேரிடியாக உனக்கு இப்பொழுது விழுந்திருக்கும். அங்கே 'ரீ பிறேக்' என்றால் பக்கத்தில் உன் சிநேகிதி 'சுனீ'யும் இருந்திருப்பாள். நீ அழுததை அவளும் அவர்களும் கேட்டிருப்பார்கள். என்ன சொல்லியிருப்பாயோ நான் அறியேன்.

'என் புருஷன் என்னில் சந்தேகப்படுகிறார்' என்பது சுகமான நல்ல ஒரு சாட்டு. அதைச் சொல்லித் தப்பித்திருப்பாய். ஆனால், உன் மனம் என்னைத் திட்டும். தேடித் தேடி அலைபாயும். காலையில் நான் குடித்த கோப்பியில் உன் மனம் முழுவதும் அப்பட்டமாகத் தெரிந்தது.

கந்தசாமி யோசித்துக்கொண்டிருந்தான். அவனது 'இமீடியற்' பிரச்னை கண்களைத் திறப்பதா இல்லையா என்பது.

கண்களை மூடினால் நிம்மதியான காட்சி. இலங்கைக் காட்சி. செம்பாட்டுத் தரை; கோடை வெய்யில்; சைக்கிளில் கண்மணியைச் சுழற்றித் திரிந்தது....

இலட்சியக் கனவோடு கண்மணியைக் கைப்பிடித்தது.....

கண்மணியின் பெற்றோர் கந்தசாமியின் நல்ல மனம் கண்டு நெகிழ்ந்து போனது.....

முதன் முதலில் துப்பாக்கி சுடப் பழகியது.....

வன்முறையை நம்பிய தோழர்களுடன் இணைந்துகொண்டது.....

எல்லாமே நிதர்சனங்கள்.

கண்களைத் திறந்தால்..... ஐயோ வேண்டாம். திறக்கக்கூடாது. திறந்த மறுகணமே எதைப் பார்ப்பது என்ற பிரச்னை. ஒரு விஷயத்தை நினைக்கவே முடியாதபடி இயந்திர உலகம். ரி. வி. யில்கூட காட்சிகள் எவ்வளவு துரிதகதியில் மாறுகின்றன. ஒரு மணிநேரத்தில்..... இந்த ஐரோப்பிய மண்ணில் மில்லியன் கணக்கான காட்சிகளைப் பார்த்துத் தொலைக்கிறது இந்தக் கண்கள். கோடானுகோடி காட்சிகளில் ஏதேனும் மனதைத் தொடுகிறதா?

இதனால்தான் எனக்கு இப்படிப் பிரச்னை வந்திருக்க வேண்டும். நான் காட்சிகளை நுட்பமாகப் பார்க்கிறேன். எனது மனம் இளகியது. தொடர்பற்ற காட்சிகளை காண மறுத்து எல்லாவற்றையும் கன்னா பின்னா என்று தொடர்புபடுத்தியதால் வந்த வினைதான் இந்தக் கொடுமை.

**கண்களைத் திறந்தால்
என் முன்னே தெரிவது
இயந்திர மயமாக்கப்பட்ட
இந்த ஐரோப்பிய உலகம்.
கண்களை மூடினால்
என்னகத்தே தெரிவது;
இலங்கையும்
என் வாழ்வும்
காலத்திற்கப்பாற்பட்ட
காட்சிகளாய்,
நிதர்சனங்களாய்.....
பிடிவாதமாய்
இதயத்தில்
தொங்கிக்கொண்டிருக்கும்
காட்சிகள்தான்.**

இந்தக் கொடுமை எனக்கு வேண்டாம். இனி நான் கண்களைத் திறக்கப் போவதில்லை. கண்மணிக்கு எப்படியாவது இதை விளங்கப்படுத்திச் சொல்ல வேண்டும். கண்மணி நல்லவள். என்னைப் புரிந்துகொண்டவள். அவளுக்கு எல்லாம் விளங்கும்.

வாசல் கதவு 'பெல்'லை யாரோ அடித்தார்கள். கந்தசாமி கண்களை மூடியபடியே தடவித் தடவிச் சென்று கதவைத் திறந்தான்.

"ஹலோ மிஸ்ரர் கந்தசாமி, ஐ ஆம் மோகன். சேல்ஸ் மானேஜராய் பிஎம்டபிள்யூ கொம்பனியில வேலை செய்யிறன். அண்டைக்கு போன் பண்ணினது நான்தான். உங்கடை அவா அடிக்கடி கதைக்கிற மோகன் நான்தான். என்ன நடந்தது கண்ணிலை உங்களுக்கு? கெட்டவற்றைப் பார்க்காதே என்று காந்தி சொன்ன மாதிரி மூடி வைச்சிருக்கிறியள், பரவாயில்லை.

"என்னை இங்க அனுப்பினது உங்கட மிஸ்ஸிஸ்தான். கண்மணி ஒரு அமைதியான தமிழ்ப் பெண்மணி. அவவைப் போல இவ்வளவு கெதியில படிச்சு ஐரோப்பாவில இந்த நிலையில இருக்கிற பொம்பிளையள் மிகக் குறைய. நீங்கள் குடுத்து வைச்சனீங்கள்.

"நீங்கள் நினைக்கிறதுமாதிரி எங்களுக்கு இடையில எந்தத் தொடர்பும் இல்லை. நீங்கள் 'லைற்றா' சந்தேகப்படுகிறியள் எண்டமாதிரிச் சொல்லிக் கண்மணி அழுதழுது போன் பண்ணினா. உங்களோடை போய்க் கதைக்கச் சொன்னா.

"அவா நல்லவா. அவ உங்களில உயிரையே வைச்சிருக்கிறா. உங்கட சந்தேகப் பிரச்சினைக்காக நான் என்ரை கொம்பனியில சொல்லி 'பாங்'கையே மாத்திப் போட்டம். அவவை ஏன் இப்பிடி அழவைக்கிறியள்?

"நான் போட்டு வாறன்."

சரியாக 4 மணிக்கு கண்மணி வீட்டுக்கு வந்துவிட்டாள். இப்பொழுது கந்தசாமி கண்களை மூடியபடியே கட்டிலில் உட்கார்ந்திருந்தான்.

கண்மணி பதறிப்போனாள்.

"என்ன நடந்தது கண்ணில? ஏன் மூடிக்கொண்டிருக்கிறியள்? என்னப்பா சொல்லுங்கோவன்?" என்றாள்.

"கண்மணி இப்படிப் பக்கத்திலை இரும், எல்லாம் சொல்லுறன்."

கண்மணி ஆதரவாக அருகில் அமர்ந்துகொண்டாள்.

"நீர் நினைக்கிறது மாதிரி எனக்கு எந்தச் சந்தேகமும் இல்லை. அப்பப்ப வாற சாதாரண சண்டையளுக்கு அசாதாரண விளக்கங்கள் தேடுறதாலதான் இந்தப் பிரச்சினையள் வாறது. எனக்கு இப்ப இருக்கிற பிரச்சினை காட்சிப் பிரச்சினை. என்ரை மனசில இருக்கிற அகக்காட்சிகள் முழுக்க இலங்கை பற்றியதாக இருக்கிறது. நான் நாட்டைவிட்டு ஓடிவந்த குற்ற உணர்வில் சீரழிந்துகொண்டிருக்கிறன். ஐரோப்பாவில் வாழ்ந்த பத்து வருஷமும் என்னைப் போலியாக மாற்றிக் கொண்டிருந்திருக்கிறன். வெறும் 'மற்றீறியலிஸ்ரா'ய் மாறியிருந்திருக்கிறன். உம்முடன் கூட பூரணமாக என் காதலை அர்ப்பணிக்க முடியவில்லை. நான் என் காட்சிகளுக்கு உண்



# ஜன்னல்



சல்மான் ருஸ்டியின் சமீபத்திய நாவல் Moor's Last Sigh. இந்தியாவுக் கான மூன்றாவது நாவல் இது என்று குறிப்பிடுகிறார் ருஸ்டி. மற்றை யவை; Midnight Children, Shame நாவல்கள்.

Satanic Verses நாவலைப்போலவே அவரது சமீபத்திய நாவலும் அரசியல் புயலைக் கிளப்பியிருக்கிறது.


Satanic Verses இஸ்லாமிய அடிப்படைவாதிகளால் தீக்கிரையாக்கப் பட்டது. Moor's Last Sigh நாவல் இந்துமத அடிப்படைவாதி பால் தக்ரேயினால் பம்பாயில் தடைய செய்யப்பட்டுள்ளது.

'தனக்குத் தெரியாத சமூகம் பற்றி எழுதுகிற உரிமை ருஸ்டிக்கு இல்லை' என்று சொல்கிறார் பால் தக்ரே. பால் தக்ரே, மணிரத்தினத்தின் 'பம்பாய்' படத்துக்கும் ஆரம்பத்தில் ஆட்சேபம் தெரிவித்தவர்.

Moor's Last Sigh நாவலில் வரும் கதாபாத்திரம் பால் தக்ரேயை ஒத்தது என்றேதான் தக்ரே இதனைத் தடை செய்திருக்கிறார்.

சமீபத்தில் லண்டனில் பரபரப்பாக பேசப்பட்ட மற்றொரு விடயம் சத்ய சாயி பாபா பற்றிய ஒரு 'சனல்-4' தொலைக்காட்சி விவர ணச் சித்திரம்.

இதில் கேரளா, வங்காளம், தமிழ்நாடு போன்ற இடங்களில் மத மூடநம்பிக்கைக்கு எதிராக போராடும் இயக்கங்களின் செயல்பாடுகள் பற்றி பேசப் பட்டது.



படத்தில் சாயி பாபா, தலைமைத் தேர்தல் கமிஷனர் சேஷன், மாஜிக் மேதை பி. சி. சர்க்கார் போன்றவர்கள் பற்றிய சர்ச்சைகள் இடம்பெற்றிருந்தன.

டெல்லி 'தூர்தர்ஷன்' தொலைக்காட்சிப் படமொன்று அதில் பரபரப் பாகப் பேசப்பட்டது. சாயி பாபா கட்டடக் கலைஞர் ஒருவருக்கு பரிசு வழங்குகையில், பரிசுப் பொருளின் அடியில் விரல்களால் சுரண்டி, தங்கச் சங்கிலி ஒன்றை எடுப்பதாக 'சிலோ மோஷனில்' காட்டப்பட்டது. மாயவித்தைக்காரர் பி. சி. சர்க்கார் ஒரு வளையலை மாயமாய் மறைந்துபோகச் செய்து; 'மாஜிக் ஒரு கலை; பொழுதுபோக்கானது. இதைச் தெய்வச் செயல் எனக் கூறக்கூடாது' என்றார்.

எழுத்தாளர் சுப்ரபாரதி மணியன் 'குமுதம் - எயர் இந்தியா' இணைந்து நடாத்திய சிறுகதைப் போட்டியில் முதலாவது பரிசைப் பெற்று, ஐரோப் பிய நாடுகள் சிலவற்றுக்கு மூன்று மாத கால இலக்கிய சுற்றுலா ஒன்றை மேற்கொண்டு லண்டன் வந்துள்ளார். லண்டனில், சோ. சிவபாத சுந்தரம், சி. சிவசேகரம், ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம், தார்சீசியஸ், பாலேந்திரா, கிருஷ்ண ராஜா, யமுனா ராஜேந்திரன், பத்மநாப ஐயர் போன்ற இலக்கியவாதிகள், விமர்சகர்கள், எழுத்தாளர்கள், கலைஞர்கள், இலக்கிய ஆர்வலர்கள் பலரைச் சந்தித்தார். இத்தகையோர் கலந்து கொண்ட கலந் துரையாடல் ஒன்றிலும் அவர் பங்குபற்றினார்.

அக்டோபர் இறுதி வாரத்தில் பாரிஸ் செல்லும் இவர், பின்னர் ஜேர்மனி செல்கிறார்.

– செந்தமிழன்

## 'ரைம்' தமிழர்



அனைத்துலக பத்திரிகை, சஞ்சிகைகளில் பெரும் கீர்த்தி பெற்றது அமெரிக்க 'ரைம்' சஞ்சிகை. உலக விவகாரங்களை உடனுக்குடன் வாராவாரம் தருவதில் ரைம் சஞ்சிகையை எவரும் விஞ்சி விட இயலாது.

உலகின் பல நாடுகளிலும் அதன் நிருபர்கள்; கிளை நிறுவனங்கள்; ஒன்றிணைப்புகள்; சமகால பிரசுரங்கள்.

ஒரு குட்டி அரசாங்கமே நடாத்துகிறார்கள் ரைம் நிறுவனத்தினர்.

இந்த ரைம் இன்ரநாஷனல் நிறுவனத்தில் கடந்த 6 ஆண்டுகளாகப் பணிபுரிகிறார் நம்மவர் ஒருவர்; திருமதி சிறிபாலா சுப்பிரமணியன்.

தந்தை ஓர் இந்திய இராணுவ அதிகாரி. தாயார் ஒரு பத்திரிகையாளர். தந்தை வழிச்சென்று இராணுவத்தில் சேராது, தாயார் வழியில் பத்திரிகை உலகில் புகுந்து நடைபோடுகிறார் சிறிபாலா. பயணக் குறிப்புகள் பக்கத்தில் சிறிபாலா ரைம் வாசகர்களுக்கு ஏற்கனவே அறிமுகமானவராக இருப்பார்.

பிரிட்டனில் பிறந்த இவர், கல்வி கற்றது இந்தியாவில். வர்த்தகம், பத்திரிகைத்துறை ஆகிய இரண்டிலும் பட்டம் பெற்றார். பின்னர் அமெரிக்க கலிபோர்ணிய பல்கலைக்கழகத்தில் பத்திரிகைத்துறையில் பட்ட மேற்படிப்பை மேற்கொண்டு, சஞ்சிகைத் தொழில் சம்பந்தமாகவும் பயின்றார்.

பத்திரிகைத் துறையிலான இந்த கல்வி அநுபவங்களுடன் ரைம் நிறுவனம் அவரை அணைத்துக் கொண்டது. தற்போது இச் சஞ்சிகையின் வர்த்தக செய்திப் பக்கத்தில் பணியாற்றும் இவரின் கணவர் அரவிந்த் ரகுநாதன், நியூ யோர்க் டச்சு வங்கியில் துணைத் தலைவராக பணிபுரிகிறார். ❑

–விமல்

பாரிசில் கோல்ட் என்றதும் உங்கள் நினைவில் நிற்கவேண்டிய ஸ்தாபனம்

# கோல்டன் ஸ்டார்

# GOLDEN STAR

**(BIJOUTERIE - HORLOGERIE - CADEAUX - IMPORT - EXPORT)**



உங்கள் அழகை மேலும் அதிகரிக்க
உங்களுக்கு வேண்டிய தங்க நகைகளை
தரமான சிறந்த வேலைப்பாடுகளுடன்
உங்களுக்குத் தருபவர்கள்.

கற்கள் பதித்த மோதிரங்கள், கைச்செயின்,
காப்பு, சங்கிலி, தாலி, தாலிக்கொடி,
தோடு, அட்டியல், பதக்கம்.


பட்டுப் புடவைகள், பட்டு வேட்டி, சால்வைகள்,
வேண்டிய அளவுகளில் சேட்டுகள், ரவுசர்கள்,
சிறுபிள்ளைகளின் உடுப்பு வகைகள்.

கைக்கடிகாரங்கள்,
சுவர்–மேசை மணிக்கூடுகள், கல்குலேற்றர்கள்,
வீட்டை அலங்கரிக்க
கவர்ச்சிக் கலைப்பொருள்கள்,
தெய்வச் சிலைகள், எவர்சில்வர் பாத்திரங்கள்,
நிறைகுடச் செட்டுகள், வேண்டிய அளவுகளில்
குத்துவிளக்குகள், வோக்மன், ரேடியோ கசெட்
றெக்கோடர், புதிய–பழைய பாடல்கள் அடங்கிய
ஒடியோ கசெட்டுகள்.

மங்கையர் எழில் கூட்டுவதற்கான
அழகுசாதனப் பொருள்கள், இமிட்டேசன்
நகைகள், வெளிநாட்டு வாசனைத்திரவியங்கள்
அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள

## GOLDEN STAR

**199, Rue du Fg. St. Denis, Paris**
**Tel: 42 09 26 50 / 46 07 26 44**
**Metro: La Chapelle, Gare du Nord**



# KUMARS

கண்ணைக்கவரும்
வண்ண வண்ண
ஆடைகள்,
ஆபரணங்கள்,
அலங்காரப் பொருள்கள்

வீடியோ,
ஓடியோ கசெட்டுகள்

குமார்ஸ்

**KUMARS SHOP**
80 Bld. Barbes, 75018 Paris
Mo: Marcadet Poissonniers
**Tel: 42 59 11 52, Fax: 42 59 35 00**

**KUMARS TRADE CENTRE**
!93, Rue du Fg. St. Denis, 75010 Paris
Mo: Gare du Nord / La Chapelle
**Tel: 42 05 41 36**

**KUMARS JEWELS**
80 Bld. Barbes, 75018 Paris
Mo: Marcadet Poissonniers
**Tel: 42 59 11 52, Fax: 42 59 35 00**

**K. T. C. JEWELS**
193, Rue du Fg. St. Denis, 75010 Paris
Mo: Gare du Nord / La Chapelle
**Tel: 42 05 41 36**